Vol.9, Issue 6 | Annual Subscription ₹ 600
Rotary News, November 2026, Chennai


நவம்பர் 2026

@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

PROUD BNI MEMBER

Pankaj Shah

COL Representative District 3131 2026-28
RI Convention Promotion Chair : Taipei, 2025-26
DRFC RID 3131 RY 2025-26
ARRFC ZONE 7 RY 2023-25
District Membership Chair 2022-25
District Learning Facilitator 2024-25
District Governor 2021-22
Charter Member : Rotary Club of Pune Sarasbaug



+91 98220 57299
rotary.pankajshah@gmail.com

Personal Secretary : 81490 57299 I Email : secretary.pankajshah@gmail.com

GDM RRFM

Head Office
Tel : +91 20 24404900 (30 lines)
Call Center : 7888039303.
admin@ramtilak.com

Shree Ganesh Dal & Besan Mills - Shirwal
Ramtilak Roller Flour Mills (p) Ltd. - Chakan
Mandar Health And Hygiene Pvt. Ltd. - Phaltan
M/s. Arun Narayandas Shah - Lonand
Shree Ganesh Shelters - Pune
M/s Deepchand Venichand Shah, Pune.

https://gdmrrfm.com

• ISO 9000:2015 • ISO 22000:2015

SCAN for the Location

Corporate Office:
Shop No. 243,
Chatrapati Shivaji Market Yard,
Gultekadi, Pune,
Maharashtra-411037

CRESCO HEALTHCARE

Multibrand Pathology

www.crescohealthcare.com

PATHOLOGY HOME COLLECTION
MEDICAL STORE - CHEMIST AND DRUGGIST

To avail the services
89564 66801/2/3/4/5

Download Cresco app

PATHOLOGY PARTNERS

Grant Medical Foundation Ruby Hall Clinic · DMH · Bharati Vidyapeeth's Bharati Hospital and Research Centre · Sahyadri Specialty Labs · TRUTEST Laboratories · METROPOLIS The Pathology Specialist

உள்ளே



42

சேவையால் சிறக்கும் வெள்ளிவிழா



12

ஆப்பிரிக்காவின் ஐம்பெரும் விலங்குகளைக் கண்ட கனவுப்பயணம்



54

கிராமத்திற்கு மறுவாழ்வளிக்கும் சண்டிகர் ரோட்டேரியர்கள்



22

ரோட்டரியின் மிகச்சிறந்த அத்தியாயம் இனிதான் எழுதப்பட வேண்டும்



60

விண்வெளி விஞ்ஞானிகளை உருவாக்கும் ரோட்டரி



34

கிளிமஞ்சாரோ சிகரத்தில் சென்னை அனெட்கள்

முக்கிய அறிவிப்பு

ஆண்டு சந்தா கட்டணத் திருத்தம்

அன்பார்ந்த சந்தாதாரர்களே,

ரோட்டரி நியூஸ் இதழின் ஆண்டு சந்தா கட்டணம் ஜூலை 1, 2026 முதல் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது:

- அச்சுப் பதிப்பு: **₹600**
- மின்னணு பதிப்பு: **₹360**

இதற்கேற்ப உங்கள் சந்தா ரசீது அனுப்பி வைக்கப்படும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், தாமத மின்றி இதழை உடனுக்குடன் பெறவும், ரோட்டேரியன்கள் **மின்னணு** (e-version) **பதிப்பைத்** தேர்வு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் தொடர்ந்த ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

Rotary

A publication of Rotary Global Media Network

Magazine

RIPN பாண்டியாவின் ஊக்கமளிக்கும் அறிமுகம்



RI தலைவர் நியமனதாரர் டாக்டர் பரத் பாண்டியாவையும் அவரது குடும்பத்தையும் எவ்வளவு அருமையாக அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள்! அவருடனான உரையாடல் என்னைக் கட்டிப்போட்டது. நாங்கள் இருவரும் 1989-ல் ரோட்டரியில் இணைந்தோம். அன்றைய RI தலைவர் ஹியூ M ஆர்ச்சர் வழங்கிய கருப்பொருள் 'ரோட்டரியை அனுபவித்து மகிழுங்கள்'. சொந்தச் சமூகத்திற்கும் பிற பகுதிகளுக்கும் சேவையாற்றி, உலகளவில் நட்பை வளர்ப்பவரே ரோட்டரியை உண்மையாக அனுபவிக்கிறார். அமைதியும் புன்னகையும் கொண்ட பாண்டியாவிற்கு இது முழுமையாகப் பொருந்தும்.

அவரது நினைவில் நிற்கும் கருத்துகள் சில: "சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணருக்குக் கழுகின் பார்வை, சிங்கத்தின் இதயம், பெண்ணின் கரம் வேண்டும். அறுவைச் சிகிச்சையில் பகுப்பாய்வு, அறிவு, ஆதாரம், துணிவு, நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் முடிவெடுக்கிறோம். இதையே ரோட்டரிக்கும் கொண்டுவந்துள்ளேன்."

"வாழ்க்கையின் மூன்று கட்டங்கள் கற்றல், ஈட்டல், திருப்பியளித்தல். ஈட்டிக்கொண்டிருக்கும்போதே திருப்பியளிக்க ரோட்டரி வாய்ப்பளித்தது. நான் வழங்கியதைவிட அதிகம் பெற்றுள்ளேன்; தொடர்ந்து கொடுக்க விரும்புகிறேன். ரோட்டரியின் சாரம் நம்பிக்கையும் வாய்ப்பும். குழந்தையைப் போலியோவிலிருந்து காக்கவும் சமூகங்களை மேம்படுத்தவும் முடியும் என்ற நம்பிக்கை; அதை நிறைவேற்றும் வாய்ப்பு."

அவரது தலைமையில் அர்த்தமுள்ள, சிறப்பான ஆண்டை எதிர்பார்க்கிறோம்.

சுரேஷ் குமார் சப்லோக்
RC நஹான் சிர்மோர் ஹில்ஸ் — D 3080

RI தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பரத் பாண்டியாவிற்கு வாழ்த்துகள். அவரது 37 ஆண்டுகால அர்ப்பணிப்பான, இடைவிடாத சேவை உயரிய பொறுப்பிற்கு அழைத்துச்சென்றுள்ளது. மற்றோர் இந்தியர் இப்பதவிக்கு வருவது பெருமையளிக்கிறது. பயணம் முழுவதும் துணைநின்ற மாதவியும் பாராட்டுக்குரியவர். சரியான பொறுப்பிற்குச் சரியானவர் வந்துள்ளார்.

S மோகன், RC மதுரை வெஸ்ட் — D 3000

பாண்டியாவின் நேர்காணலில் 'சிறந்த தலைவரின் பண்புகள்' பெட்டிச் செய்தி ஆழமான புரிதலை அளித்தது. அவரைப் பற்றிய PRIP K R ரவீந்திரனின் கருத்து சிறப்பானது. உறுப்பினர் எண்ணிக்கை, TRF பங்களிப்பில் இந்திய ரோட்டரி பெரிதும் வளர்ந்துள்ளது. வரவிருக்கும் தலைமையில் பொறுப்பான நிர்வாகத்திலும் முன்னேற்றம் காண்போம் என நம்புகிறேன்.

நெஸ்டர் செக்வேரா, RC பனாஜி — D 3170

தலையங்கங்களுக்குப் பாராட்டும் விமர்சனமும்

அக்டோபர் தலையங்கத்தில், பாண்டியாவின் முக்கியப் பண்புகளில் நேர்மையும் ஒன்று என்பதை ரஷீதா பகத் விளக்கியிருந்தார். அமெரிக்கக் கொடையாளரும் எழுத்தாளருமான கிளெமென்ட் ஸ்டோன் கூறியதுபோல், "உண்மையை எதிர்கொள்ளத் துணியுங்கள். சரியானதை, அது சரியானது என்பதற்காகவே செய்யுங்கள்." நேர்மையுடன் வாழ்வதற்கான திறவுகோல்கள் இவை.

K M K மூர்த்தி
RC செகந்திராபாத் — D 3150

நேர்மையும் ஊழலும் குறித்த சிறந்த அக்டோபர் தலையங்கத்திற்குப் பாராட்டுகள். செல்வத்தைக் குவிக்கும் தீராத ஆசை ஊழலுக்கு வழிவகுக்கிறது. உலகெங்கும் வெறுக்கப்பட்டாலும் எங்கும் நடைமுறையில் இருப்பது பெரும் முரண்பாடு. போக்குவரத்து விளக்குகள், வரிசைகள், விதிகளை மீறுவதில் மகிழ்கிறோம்; மனச்சாட்சியுடன் வாழ்வது கடினமாகிறது.

அரசு அதிகாரத்தைப் பணமாக்கும் போக்கு அறநெறியை அரிக்கிறது. நாட்டைக் கட்டுப்படுத்தும் சுமார் பத்து சதவீதத்தினரே உண்மையில் ஊழல்மிக்கவர்கள் என்பது என் கருத்து. அவர்களால் நாட்டிற்கே அவப்பெயர் ஏற்படுகிறது. மீதமுள்ளவர்கள் குரலெழுப்ப வேண்டும்.

களங்கமற்ற நேர்மையுடைய பாண்டியா நம்பிக்கையளிக்கிறார். யாரும் பார்க்காதபோதும் செயல்கள் சொற்களுடன் பொருந்தவேண்டும். நேர்மையானவர்கள் இரவில் நிம்மதியாக உறங்குவார்கள் என்பது உண்மை.

சுபேந்து மொஹந்தி, RC புவனேஸ்வர் எக்ஸலன்ஸ் — D 3262

ஆகஸ்ட் இதழின் கல்வி குறித்த தலையங்கம் சிந்திக்கவைத்தது. வினாத்தாள் கசிவுகள், மாணவர் போராட்டங்கள், காவல்துறை நடவடிக்கைகள் அதிகாரிகளை விழிக்கச்செய்தாலும், முழுமையான தீர்வு இன்னும் தெரியவில்லை. பொருளாதாரத்தில் நலிவுற்ற நடுத்தரக் குடும்பங்கள் அதிசயத்திற்காகக் காத்திருக்கின்றன. உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைத் தியாகம்செய்து குழந்தைகளைப் படிக்கவைக்கும் பெற்றோரின் நிலை நெகிழவைக்கிறது.

மடல்கள்

AI சில தொழில்நுட்பத் திறனாளர்களின் கைகளில் மட்டும் இருப்பதும் சமூக, பொருளாதாரச் சமத்துவம் குறித்த கேள்விகளை எழுப்புகிறது. ஜெனிஃபர் ஜோன்ஸின் 'எல்லைகளற்ற பராமரிப்பு' செய்தியும் இதனுடன் தொடர்புடையது. நாடுகளிலும் சமூகங்களிலும் சமமற்ற மருத்துவ வசதிகளைச் சுட்டிக்காட்டி, யாரும் பின்தங்காத உலகை உருவாக்குவதில் TRF-ன் பங்கை வலியுறுத்துகிறார்.

அபய் கிஷோர் சந்த்வார்
RC தன்பாத் மிட்டவுன் — D 3250

நட்பையும் நட்புறவையும் அடிப்படையாகக் கொண்ட தொண்டு அமைப்பாக, எண்ணம், செயல், சொற்களில் அரசியல் நடுநிலையைப் பேணவேண்டும். அக்டோபர் தலையங்கம் பாண்டியாவின் நேர்மையைப் பாராட்டித் தொடங்கி, பல்வேறு தலைப்புகளுக்குச் சென்றது. பசி, மனித உரிமைகள், ஊழல், மகிழ்ச்சி போன்ற குறியீடுகள் நியாயமற்ற முறையில் உருவாக்கப்படுவதாகவும் பொருத்தமற்றவை என்றும் நான் கருதுகிறேன்.

ஒவ்வொரு வாக்கும் முக்கியம், வீதிகளில் ஜென் Z போராட்டம் போன்ற குறிப்புகள், NEET வினாத்தாள் கசிவுப் போராட்டங்களை மறைமுகமாக ஆதரிப்பதாகாதா? அரசியல், சித்தாந்தத் தாக்கங்களிலிருந்து விலகி, வெளியீடுகளில் சேவைக்கும் நட்புறவிற்கும் முன்னுரிமையளிக்க வேண்டும்.

முரளி கிருஷ்ணா R V
RC மூட்பித்ரி — D 3181

ஊக்கமளிக்கும் நாகேஷின் வாழ்க்கைப் பயணம்

RI இயக்குநர் K P நாகேஷின் பயணத்தை ரஷீதா பகத் விவரித்த அட்டைப்படக் கட்டுரை ஆழமாக நெகிழச்செய்தது. அது சாதனைகளின் பட்டியலாக மட்டுமன்றி, உறுதி, துணிவு, மீண்டெழும் திறன், விடாமுயற்சியின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது. சவால்களை வாய்ப்புகளாக மாற்றிய விதம் நமக்குப் பாடமாகிறது.

சரியான அணுகுமுறையும் அர்ப்பணிப்பும் இருந்தால் தடைகளைத் தாண்டி முன்னேறலாம் என்பதை அவரது வாழ்க்கை உணர்த்துகிறது. குறிப்பாக இளைய தலைமுறைக்கு இது ஊக்கமளிக்கும். சிந்திக்கவைக்கும், ஈர்ப்பான நடையில் கதையை வழங்கிய ஆசிரியருக்குப் பாராட்டுகள். இத்தகைய பதிவுகள் ரோட்டரி இலக்கியத்தை வளப்படுத்துகின்றன.

கர்னல் (ஓய்வு) விஜயகுமார்
RC ஆலப்புழா கிரேட்டர் — D 3211

ஜெனிஃபர் ஜோன்ஸின் செப்டம்பர் மாத 'போலியோவை வரலாறாக்குவோம்' செய்தி புத்துணர்வளிக்கிறது. உலக போலியோ தினமான அக்டோபர் 24 அன்று, போலியோ ஒழிப்பிற்கான உறுதியை அனைவருக்கும் தெரிவிப்பது ரோட்டேரியர்களின் கடமை. அவரது வினாடிவினாவிற்கான பதில் பென்குயின்கள் என்று நினைக்கிறேன்.

P மோகன்குமார்
RC மெட்ராஸ் பல்லவா — D 3234

கீதா மத்தாயின் மூட்டுவலி மேலாண்மை குறித்த கட்டுரைக்கு நன்றி. சண்டிகர் பள்ளிக்கு 'பவன்ஸ் R K சாபு வித்யாலயா' என்று பெயரிடப்பட்டது, PRIP ராஜேந்திர சாபுவிற்கும் ரோட்டரி குடும்பத்திற்கும் பெருமையான தருணம்.

பிறவியிலேயே இதயநோயுள்ள 625க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு உயிர்காக்கும் அறுவைச் சிகிச்சைகள் வழங்கும் RC பாம்பே ஏர்போர்ட் திட்டக் குழுவிற்குப் பாராட்டுகள்.

சின்மய மகாபத்ரா
RC ராஜ்தானி புவனேஸ்வர் — D 3262

அட்டைப்படம்:
மசாய் மாரா-செரெங்கெட்டி பகுதியில் படம்பிடிக்கப்பட்ட வேங்கைச் சிறுத்தை (சீட்டா).
படம்: N ராமகிருஷ்ணன்

Have you read
Rotary News Plus?
Or does it go to your junk folder?



Every month we bring out the online publication **ROTARY NEWS PLUS** to feature your projects. This is sent to every member by e-mail by mid-month.

Read **Rotary News Plus** on our website
www.rotarynewsonline.org

We welcome your feedback Write to the Editor:
rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.
Mail your project details, along with hi-res photos, to
rotarynewsmagazine @gmail.com.
Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at
rushbhagat@gmail.com *or* **rotarynewsmagazine@gmail.com.**
WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

RI தலைவரிடமிருந்து...

அதிக உறுப்பினர்கள்; அதிக தாக்கம்

உலகில் நாம் உருவாக்க விரும்பும் தாக்கத்திற்கான முதல்படி, நமக்குள் நிகழும் மாற்றம்தான்.

ரோட்டரியுடனான எனது முதல் அறிமுகம் நினைவிருக்கிறது. பதின்பருவத்தில், வேறு சிந்தனைகளில் மூழ்கியிருந்தபோது, தொலைக்காட்சியில் ஒரு ரோட்டேரியரைப் பார்த்தேன். திடீரென எனது முழுக் கவனமும் அவர்மீது குவிந்தது. அந்தத் தருணம் என் வாழ்க்கையை மாற்றப்போகிறது என்பதை அப்போது அறியவில்லை.

நாம் செல்லும் சமூகத்திலோ நிதியளிக்கும் திட்டத்திலோதான் தாக்கத்தை உருவாக்குவதாக நினைக்கிறோம். ஆனால் நமக்குள் ஏற்படும் மாற்றமும் அதற்கு வழிவகுக்கிறது.

ரோட்டரியின் செயல் திட்டத்தின் முதல் தூண், நமது தாக்கத்தை அதிகரிப்பது. நன்மை செய்வதுடன், அது நீடிப்பதாகவும் அளவிடக்கூடியதாகவும் இருக்கவேண்டும். நமக்கு எளிதான திட்டங்களைவிட, மக்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட நிலையான திட்டங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, நமது பங்கேற்பின்றியும் இத்திட்டம் மக்களுக்குச் சேவையாற்றுமா என்று நேர்மையாகக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

'நீடித்த தாக்கத்தை உருவாக்குவோம்' என்பது திறப்புவிழாவுடனோ கிணறு தோண்டியதுடனோ முடிவதல்ல. பயனாளியின் வாழ்க்கையை மாற்றுவதுபோலவே, சேவையாற்றுபவரையும் மாற்றுவதே அதன் பொருள். ரோட்டரி நம் அனைவரையும் மாற்றுகிறது. தொலைக்காட்சி பார்த்த பதின்பருவச் சிறுவனை மாற்றியது. 1905 முதல் லட்சக்கணக்கான ரோட்டேரியர்களையும் ரோட்டராக்டர்களையும் மாற்றியுள்ளது. இன்றே தேவையான பணிகளைச் செய்தால், இந்த ரோட்டரி ஆண்டைக் கடந்தும் அந்த மாற்றம் தொடரும்.

அப்பணி உறுப்பினர் வளர்ச்சியிலிருந்து தொடங்குகிறது. மனிதர்கள் அதிகரிக்கும்போது தாக்கமும் பெருகுகிறது. இணையும் ஒவ்வொரு கரமும் கிணறு தோண்டவோ, குழந்தைக்கு வாசிக்கக் கற்றுத்தரவோ, தடுப்பூசி வழங்கவோ, உதவி தேவைப்படும் அண்டைவீட்டாருக்குத் துணைநிற்கவோ முடியும்.

2030-ல் நமது 125வது ஆண்டுவிழாவை நெருங்கும்போது, உலகளவில் 12.5 லட்சம் ரோட்டேரியர்களையும் 1.25 லட்சம் ரோட்டராக்டர்களையும் அடைவதே இலக்கு. இது பதாகைக்கான எண்ணிக்கை அல்ல. ஒன்றிணைந்து எவ்வளவு அதிக நன்மை செய்யலாம், நம்முடையது உட்பட இன்னும் எத்தனை வாழ்க்கைகளை மாற்றலாம் என்பதற்கான அளவுகோல்.

உங்களது சிறந்த சாதனையையும் விஞ்சுமாறு அடிக்கடி கேட்டிருக்கிறேன். உறுப்பினர் வளர்ச்சியில் அந்தச் சவால் இப்போது மிகவும் அவசரமானது. ரோட்டரி பற்றித் தொடர்ந்து கேட்கும் சக ஊழியரை அழையுங்கள். விலகிச்சென்ற உறுப்பினரை மீண்டும் வரவேறுங்கள். அருகிலுள்ள ரோட்டராக்ட் சங்கத்துடன் இணையுங்கள். ஒவ்வொரு உரையாடலும் நீடித்த விளைவுகளை உருவாக்கக்கூடிய சிறிய செயலாகும்.



என்னை மாற்றியதுபோல், தொடர்ந்து மனிதர்களை மாற்றும் ரோட்டரியை உருவாக்குவோம். ஒவ்வொரு புதிய உறுப்பினரும், ஒவ்வொரு திட்டமும், ஒவ்வொரு சேவையும் அதற்குப் பங்களிக்கட்டும். நமக்குப் பின்னால் நீண்ட வரலாறு இருக்கிறது; முன்னால் இன்னும் ஏராளமான பணிகள் காத்திருக்கின்றன. அந்தப் பணிகளைச் செய்யும் வலிமையை இன்றே வளர்ப்போம். அடுத்த தலைமுறைக்கும் சேவை செய்வதற்கான வாய்ப்புகளை உறுதிசெய்வோம். உறுப்பினர் வளர்ச்சி என்பது நமது எதிர்காலச் சேவைக்கான அடித்தளம் என்பதை நினைவில் கொள்வோம்.

ஒன்றிணைந்து, நீடித்த தாக்கத்தை உருவாக்குவோம்!

யிங்கா பாபலோலா
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்

புகைப்படம்: மோனிகா லோஜின்ஸ்கா



நம்பிக்கை தரும் கதைகளைத் தேடி

மோதல், வன்முறை, போர் ஆகியவற்றால் உலகம் சிதைந்துகொண்டிருக்கிறது. எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளப் போதுமானதாக இல்லாத கல்விமுறைகளால், தங்கள் நாளைய வாழ்க்கை குறித்து இளைஞர்கள் தீவிரமான கேள்விகளை எழுப்புகிறார்கள். உலகின் ஒரு பகுதியில் இரக்கமற்ற இனப்படுகொலை இடைவிடாமல் நடக்கிறது. இத்தகைய சூழலில், நம்பிக்கையூட்டும் ஒரு கதையைச் சொல்ல மனம் ஏங்குகிறது.

அப்படியொரு கதையை வாசிக்க, நல்ல செய்திகளையும் நேர்மறைக் கதைகளையும் வெளியிடும் 'தி பெட்டர் இந்தியா' இதழை நாடினேன். அதன் அண்மைய அட்டைப்படமும் கட்டுரையும் உடனடியாகப் புன்னகைக்க வைத்தன. பிரம்பு அல்லது வைக்கோலால் செய்யப்பட்டவைபோல் தோன்றும் கைப்பைகள், கூடைகள், வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்களுக்கு முன்பு பெண்கள் அமர்ந்திருந்தனர்.

ஆனால் ஆந்திராவின் கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்த 150 பெண்கள், தீங்கு விளைவிக்கும் நீர்க்களையான ஆகாயத்தாமரையைக் கைப்பைகளாகவும் வீட்டு அலங்காரப் பொருள்களாகவும் வருமானமாகவும் மாற்றுகிறார்கள் என்றது கட்டுரை. வேகமாகப் பரவி நீர்வழிகளை அடைக்கும் இந்தக் களை, அகற்றப்பட்டுத் தூக்கியெறியப்படுவது வழக்கம். உள்ளூர்க் கைவினைக் கலைஞரான கல்பனா, அதைத் திறமையாகக் கூடைகள், விளக்கு மூடிகள் உள்ளிட்ட பொருள்களாக மாற்றுகிறார். நாளொன்றுக்கு ரூ.500–700 வருமானம் கிடைக்கிறது. தொல்லைதரும் களை, பெண்களின் வாழ்வாதாரமாக மாறிய கதை ரோட்டரியின் கவனத் துறைக்கும் பொருத்தமானது.

உண்மையில், நல்ல கதைகளுக்காக அவ்வளவு தொலைவுகூடச் செல்லவேண்டியதில்லை. ரோட்டரி நியூஸுக்கு வரும் செய்திகளும், பின்னர் உங்கள் இதழில் வெளியாகும் கட்டுரைகளும், உலகெங்கும், குறிப்பாக இந்தியாவில், ரோட்டேரியர்களின் சமூகநலத் திட்டங்கள் உருவாக்கும் நம்பிக்கையைச் சொல்கின்றன.

இந்த இதழில் இடம்பெறும் RC பாம்பே பே வியூ, தனது வெள்ளிவிழாவை 25 முத்திரைத் திட்டங்களுடன் கொண்டாடுகிறது. குறிப்பாகக் காஷ்மீரின் கடினமான நிலப்பகுதிகளில் பணியாற்றும் ராணுவ வீரர்களுக்கான திட்டங்கள் நெகிழவைக்கின்றன. கட்டுப்பாட்டுக் கோட்டருகே இருண்ட பகுதிகளில் சூரிய விளக்குகள் அமைத்துள்ளனர்; வீரர்களுக்கெனத் தனி உடற்பயிற்சிக்கூடம் உருவாக்கியுள்ளனர். மேலும் 1,200 வீரர்களுக்கு ராக்கிகள் வழங்கி, அன்பும் அக்கறையும் நிறைந்த பந்தத்தில் இணைத்துள்ளனர்.

"நீங்கள் தனியாக இல்லை; 1,200 பெண்கள் உங்களை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்; நாட்டைப் பாதுகாப்பதற்காக உங்களுக்கு வணக்கம் செலுத்துகிறார்கள் என்பதை உணர்த்தவே இந்த முயற்சி" என்றார் ஓர் உறுப்பினர்.

இது முப்பதாண்டுகளுக்கு முந்தைய ஒரு காலைப்பொழுதை நினைவூட்டுகிறது. அப்போது இந்தியன் எக்ஸ்பிரஸில் செய்திப்பிரிவுத் தலைவராக இருந்தேன். சுற்றுலா வந்திருந்த பிரிட்டிஷ் தம்பதி, "நல்ல செய்தியொன்றைச் சொல்ல" அலுவலகத்திற்கு வந்தனர். தங்கள் நாட்டிலும் இந்தியாவிலும் நாளிதழ்கள் எதிர்மறைச் செய்திகளால் நிரம்பியிருப்பதாகக் கூறினர்.

போர்ட் பிளேரின் சவாலான ஓடுபாதையில், இந்தியன் ஏர்லைன்ஸ் விமானி கேப்டன் ஷம்ஷேர் சிங், ஒற்றை இயந்திரத்துடன் விமானத்தைத் திறமையாகத் தரையிறக்கியிருந்தார். வந்திருந்த கணவரும் விமானி என்பதால், அந்தச் சாதனையை உணர்ந்திருந்தார்.

"ஓர் இயந்திரம் செயலிழந்ததும், விபத்தைத் தடுத்து உயிர்களைக் காப்பாற்ற கேப்டன் எவ்வளவு விரைவாகவும் திறமையாகவும் செயல்பட்டார் என்பது பெரும்பாலான பயணிகளுக்குத் தெரிந்திருக்காது. என்னால் புரிந்துகொள்ள முடிந்தது; பின்னர் அவருடன் பேசி உறுதிசெய்தேன்" என்றார்.

அந்தச் செய்தியை எழுதினேன். நன்றியுடன் தொலைபேசியில் அழைத்த கேப்டன் சிங்குடனான அறிமுகம், நீண்டகால அருமையான நட்பாக மலர்ந்தது. கடந்தாண்டு அவர் மறையும்வரை அது தொடர்ந்தது.

ஆம், மெழுகுவர்த்திகள் இருளை அகற்ற உதவுகின்றன நம்மைச் சுற்றியுள்ள தீய சக்திகள் மேலும் இருளை உருவாக்கும்வரை. தீபாவளி நெருங்கும் இவ்வேளையில், நம்பிக்கையின் சிறிய அகல்விளக்குகளைத் தொடர்ந்து ஏற்றுவோம்!

தீபாவளி நல்வாழ்த்துகள்!

ரஷ்மீதா பகத்

ADVT.

MAKE A SIFerence.

FINSHERPA
Helping you reach your financial Peak

Your next investment move deserves a conversation.

EXPLORE SIF (SPECIALIZED INVESTMENT FUNDS) WITH FINSHERPA



Already investing in mutual funds?

Discover whether SIF strategies fit your goals, experience and appetite for risk.

Flexible investment strategies | Equity, debt and hybrid approaches | For experienced investors

Minimum investment: ₹10 lakh across SIF strategies of the same AMC.*

Could SIFs fit your portfolio?



Rtn. Babu Krishnamoorthy
Let's catch up over a coffee

Call FinSherpa. Let's explore.

91592 69500 | rotary@finsherpa.com

MUTUAL FUNDS | AIFs | GIFT CITY INVESTMENTS | INSURANCE | AND MANY MORE

Mutual funds are subject to market risks, please read the offer documents carefully before investing.

Alwarpet • Pallikaranai • Navalur • Mogappair • Bangalore

RI இயக்குனர் செய்தி



தனியொருவரால் பாலம் உருவாவதில்லை

ஒரு சங்கத்தின் சிறந்த திட்டத்தைப் பற்றிக் கேட்டால், யாரும் செலவிட்ட தொகையிலிருந்து தொடங்குவதில்லை. ஓர் உயிரைப் பற்றியோ இடத்தைப் பற்றியோதான் சொல்கிறார்கள். பச்சிளங்குழந்தைகள் பிரிவில் காப்பாற்றப்பட்ட குழந்தை, சீரமைக்கப்பட்ட குளம், மீண்டும் பள்ளிக்குத் திரும்பிய மாணவர், தூய கழிப்பறைகள் பெற்ற அரசு மகளிர் பள்ளி என்று தொடங்குவார்கள். புள்ளிவிவரங்கள் பின்னர்தான் வரும். ரோட்டேரியருக்குக் கொடையளிப்பதன் உண்மையான பொருள் என்ன என்பதை இது உணர்த்துகிறது.

வால்மீகியின் மூல ராமாயணத்தில் இல்லாவிட்டாலும், வட்டார மறுகதையாடல்களில் ஓர் அழகிய நிகழ்வு உண்டு. இலங்கைக்குப் பாலம் கட்ட வானரங்கள் கடலில் பாறைகளைச் சுமந்துபோட்டன. ஓர் அணில் தண்ணீரில் நனைந்து, மணலில் புரண்டு, கற்களுக்கு இடையே மணல்துகள்களை உதிர்த்தது. சிலர் சிரித்தனர். ராமரோ அணிலைக் கையில் ஏந்தி, முதுகை வருடினார். அணிலால் பாறையைச் சுமக்க முடியவில்லை; முடிந்ததைச் சுமந்தது. பாலத்தில் பாறைகளும் மணலும் இருந்தன.

நமது அறக்கட்டளையும் இப்படித்தான் உருவாகியுள்ளது. தொலைதூரத்தில் மருத்துவப் பிரிவு, குளச் சீரமைப்பு, குழந்தையின் கல்வி, பள்ளிக் கழிப்பறைகள் ஆகியவற்றின் முழுச் செலவையும் தனியொரு ரோட்டேரியர் ஏற்பதில்லை. உங்கள் பங்களிப்பு ஆயிரக்கணக்கானோரின் பங்களிப்புகளுடன் இணைந்து, மானியமாகத் திரும்புகிறது. நீங்கள் சந்தித்திராத ஒருவர் அதைச் செயல்படுத்துகிறார். அந்தக் கிராமத்தை நீங்கள் பார்க்காமலேயே போகலாம். கிராமத்திற்கு உங்கள் பெயர் தெரியாமலிருக்கலாம். ஆனாலும் பணி நிறைவேறுகிறது.

'நன்கொடை' என்ற சொல் இதற்குப் போதுமானதல்ல. அறக்கட்டளை மூலம் நாம் செய்வது, தனிமனிதராலோ சங்கத்தாலோ மாவட்டத்தாலோ தனித்துத் தீர்க்க முடியாத பிரச்னைக்குப் பொறுப்பேற்று, நமது பங்கைச் சுமப்பது. ஆண்டு நிதி, நிரந்தர நிதி, போலியோபிளஸ் நிதி, CSR கூட்டாண்மைகள் எனப் பல வழிகள் உள்ளன. இந்தியாவில் CSR வாய்ப்புகளை இன்னும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. கொடுக்க முடிவெடுப்பதும் தொடர்ந்து கொடுப்பதுமே முக்கியம்.

25 ஆண்டுகளுக்கு முன்பு $100 கொடுத்து TRF பங்களிப்பைத் தொடங்கியபோது, இவ்வளவு சிறிய தொகை எதற்குப் பயன்படும் என்று நினைத்தேன். அது தவறு. முதல் தொகையைவிட, ஆண்டுதோறும் தொடர்ந்து சேர்த்ததே முக்கியம். இன்று எனது பங்களிப்பு $475,000 ஆகியுள்ளது.

இளம் ரோட்டேரியர்களே, ரோட்டராக்டர்களே, பெரிய தொகையைக் கொடுக்க முடியும் நாள்வரை காத்திருக்காதீர்கள். இப்போதே இயன்றதைத் தாருங்கள். உங்களுடன் அந்தப் பழக்கமும் வளரட்டும். 1979-ல் பிலிப்பைன்ஸில் ஒரே தடுப்பூசித் திட்டத்துடன் போலியோ ஒழிப்பை ரோட்டரி தொடங்கி 47 ஆண்டுகளாகின்றன. கூட்டாளிகளுடன் இணைந்து, உலகளாவிய பாதிப்புகளை 99 சதவீதத்திற்கும் அதிகமாகக் குறைக்க உதவியுள்ளோம்.

வெற்றிக்கோட்டிற்கு அருகிலுள்ள கடைசிக்கட்டம்தான் மிகவும் கடினமானதும் செலவுமிக்கதும். பாலம் கட்டப்பட்டது போல, ஒவ்வொரு பங்களிப்பாகச் சேர்ந்துதான் பயணம் நிறைவடையும். சங்கமாகவும் தனிநபராகவும் போலியோ ஒழிப்பிற்குத் துணைநில்லுங்கள். இவ்வளவு தூரம் ஒன்றாக வந்துவிட்டோம். இப்போது நிறுத்திவிட வேண்டாம்.

நவம்பர் அறக்கட்டளை மாதம். எங்கோ ஒரு பாலம் கட்டப்படுகிறது - போலியோ, எழுத்தறிவின்மை, நோய் ஆகியவற்றைக் கடக்கவும், மக்களின் தேவைகளுக்கும் அவற்றைப் பெறும் வாய்ப்புகளுக்கும் இடையிலுள்ள தூரத்தைக் குறைக்கவும். அந்தப் பாலத்தில் உங்கள் பங்கும் இருக்கட்டும். தொடர்ந்து அளிக்கப்படும் சிறிய பங்களிப்புகளும் மற்றவர்களின் பங்களிப்புகளுடன் சேரும்போது பெரிய பணிகளைச் சாத்தியமாக்குகின்றன. அணிலின் மணல்துகள்களைப்போல, நீங்கள் அளிப்பதும் அந்தக் கூட்டுமுயற்சியின் ஓர் அங்கம். உங்கள் பெயர் தெரியாத இடத்திலும், நீங்கள் சந்திக்காத மனிதரின் வாழ்க்கையிலும் அது மாற்றத்தை உருவாக்கலாம்.

உங்களால் பாறையைச் சுமக்க முடியாமல் இருக்கலாம். முடிந்ததைச் சுமந்து வாருங்கள். தொடர்ந்து கொடுங்கள்!

முருகானந்தம் M
RI துணைத்தலைவர், 2026–27
RI இயக்குநர், 2025–27

TRF
தலைவரிடமிருந்து...

அமைதியின் விதைகள்



அண்மையில் உகாண்டா காவல்துறை அதிகாரி செலு பாலியைச் சந்தித்தேன். ஜப்பானின் சர்வதேச கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்தில் ரோட்டரி அமைதி ஆய்வாளர்களின் 25வது அணியில் பயில்கிறார்.

தெற்கு உகாண்டாவின் நகிவாலே அகதிக் குடியிருப்புக்கு அருகே வளர்ந்தவர் செலு. உலகின் மிகப் பழமையான, பெரிய அகதிக் குடியிருப்புகளில் ஒன்றான அங்குள்ள சிலரை அவர் அறிவார். தனது சமூகத்திற்குச் சேவையாற்றத் தயாராகும் வகையில், அமைதி ஆய்வுக்கான ஆராய்ச்சியை நகிவாலேவை மையமாகக் கொண்டு மேற்கொள்ள விரும்புகிறார்.

அவருடனான உரையாடல், 2022-ல் நான் அங்கு சென்ற நினைவுகளை மீட்டது. நாம் எதிர்பாராத இடங்களில்கூட அமைதியின் விதைகள் முளைக்கலாம் என்பதை நினைவூட்டியது.

காங்கோ ஜனநாயகக் குடியரசு, புருண்டி, ருவாண்டா உள்ளிட்ட நாடுகளின் மோதல்களிலிருந்து தப்பிய 2,86,000க்கும் மேற்பட்டோர் நகிவாலேயில் வசிக்கிறார்கள். அவர்களில் பலர் பாதுகாப்பைத் தேடிப் பல நாட்கள், பல வாரங்கள்கூட நடந்துவந்த பெண்கள்.

அவர்களது கதைகள் என்றென்றும் என்னுடன் இருக்கும். நான் சந்தித்த ஒவ்வொரு பெண்ணும் தனது கணவர் கொல்லப்பட்டதாகக் கூறினார். பலர் வன்முறை, பசி, களைப்பால் குழந்தைகளையும் இழந்திருந்தனர். அளவிடமுடியாத துயரத்திலும் அவர்கள் உறுதியுடனும் கண்ணியத்துடனும் நின்றனர்.

என்ன தேவை என்று கேட்டபோது, ஒருவர் கூட பணமோ உணவோ தங்குமிடமோ கேட்கவில்லை. வாய்ப்பைத்தான் கேட்டார்கள். குழந்தைகளுக்கு உணவளிக்கவும் பள்ளிக்கு அனுப்பவும் சிறுதொழில்களைத் தொடங்க விரும்பினர். “நிலைத்திருக்கும் ஒன்றை உருவாக்க எங்களுக்கு உதவுங்கள்” என்பதே அவர்களது எளிய, வலிமையான வேண்டுகோள்.

இதற்காக பால் முஷாஹோவுடன் இணைந்து பணியாற்றுகிறேன். உகாண்டாவின் மகரேரே பல்கலைக்கழக ரோட்டரி அமைதி மையத்தின் முதல் அணிப் பட்டதாரியான அவர், நகிவாலேயின் முதல் ரோட்டராக்ட் சங்கத்தைத் தொடங்கியவர்.

ரோட்டரி அறக்கட்டளையின் ஆதரவுடன், பெண்கள் தொழில் கற்று, வருமானம் ஈட்டி, வாழ்க்கையில் நிலைத்தன்மை பெறத் தையல் அறைக்கு நிதியளிக்கிறோம். ரோட்டராக்ட் சங்கங்கள் வழியாக நகிவாலே இளைஞர்கள் தங்களை உயிர்பிழைத்தவர்களாக மட்டுமின்றித் தலைவர்களாகப் பார்க்கிறார்கள்.

நவம்பரில் ரோட்டரி அறக்கட்டளை மாதத்தைக் கொண்டாடி, அமைதி ஆய்வாளர்கள் திட்டத்தின் 25வது ஆண்டில் அடியெடுத்துவைக்கிறோம். அறக்கட்டளை கடந்துவந்த பாதையையும், 1,900க்கும் மேற்பட்ட முன்னாள் அமைதி ஆய்வாளர்களின் பணிகளையும் நினைவுகூர்வோம்.

பால் போன்ற தலைவர்கள் அமைதிக்கான பயணத்தைத் தொடங்குகிறார்கள். நம்பிக்கையைக் கைவிடாத நகிவாலே பெண்கள் அதை வலுப்படுத்துகிறார்கள். செலு போன்ற அமைதி ஆய்வாளர்கள் முன்னெடுத்துச் செல்கிறார்கள்.

அமைதி வெறும் கருத்தல்ல; ஒவ்வொரு வாய்ப்பாக உருவாக்கப்படும் செயல்பாடு. கற்பனைக்கெட்டாத துயரங்களைத் தாங்கிய பின்னரும் நம்பிக்கையைத் தேர்ந்தெடுப்பவர்களே பெரும்பாலும் அதை உருவாக்குகிறார்கள். ரோட்டரி அறக்கட்டளை வழியாக நாமும் அவர்களுடன் நம்பிக்கையைத் தேர்ந்தெடுத்து, அது நிலைத்துப் பயனளிக்க உதவலாம்.

ஜெனிபர் ஜோன்ஸ்
TRF அறங்காவலர் தலைவர்

ஆளுநர் குழு

RID 2981	வைத்தியநாதன் K
RID 2982	செந்தில்குமார் C
RID 3000	R B S மணி
RID 3011	அஜீத் ஜலான்
RID 3012	அமித் குப்தா
RID 3020	ஸ்ரீராம் குட்டிகொண்டா
RID 3030	ராஜேஷ் V பாட்டீல்
RID 3040	சன்ஸ்கர் கோத்தாரி
RID 3053	பிரிஜ் மோகன் அகர்வால்
RID 3055	நைமிஷ் N ராவணி
RID 3056	அருண் பகாடியா
RID 3060	நிலேஷ் R ஷா
RID 3070	அனில் குமார் சிங்கல்
RID 3080	ரீட்டா கல்ரா
RID 3090	அமித் குமார்
RID 3100	பாயல் கௌர்
RID 3110	ஜஸ்பீர் சிங் பாட்டியா
RID 3120	பூனம் குலாட்டி
RID 3131	நிதின் S தாமலே
RID 3132	ஜெயேஷ் R படேல்
RID 3141	ராஜன் துவா
RID 3142	நிலேஷ் V ஜாவந்த்
RID 3150	உதய் சுதிர் பிலானி
RID 3160	கேசவ் ரெட்டி P
RID 3170	லென்னி டா கோஸ்டா
RID 3181	சதீஷ் போலார்
RID 3182	B M பட்
RID 3191	அனில் குப்தா
RID 3192	ரவிசங்கர் டகோஜு
RID 3203	K பூபதி
RID 3204	M V மோகன்தாஸ் மேனன்
RID 3205	ஜோஷி சாக்கோ
RID 3206	R S மாருதி
RID 3211	K G நாயர்
RID 3212	காந்தி கிருஷ்ணன்
RID 3231	T S ரவிக்குமார்
RID 3233	ஸ்ரீராம் துவ்வுரி
RID 3234	சுரேஷ் D ஜெயின்
RID 3240	அசிம் காந்தி A
RID 3250	அனு நரங்
RID 3261	ஆலம் S ரூப்ரா
RID 3262	அனில் குமார் சமல்
RID 3291	தபஸ் பட்டாச்சார்யா

அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.

ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

This periodical is published by **PT Prabhakar** from Dugar Towers 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008, on behalf of **Rotary News Trust**, edited by **Rasheeda Bhagat** and printed by **Rasi Graphics** at 40 Peters Road, Royapettah, Chennai 600 014, India.

அறங்காவலர் குழுவினர்

K P நாகேஷ் RI இயக்குனர் மற்றும் RNT தலைவர்	RID 3191
M முருகானந்தம் RI துணைத்தலைவர் மற்றும் இயக்குநர்	RID 3000
Dr பரத் பாண்ட்யா RI தலைவர் நியமனதாரர்	RID 3141
A S வெங்கடேஷ் TRF அறங்காவலர்	RID 3234
ராஜேந்திர K சாபூ	RID 3080
கல்யாண் பானர்ஜி	RID 3060
சேகர் மேத்தா	RID 3291
அசோக் மகாஜன்	RID 3141
P T பிரபாகர்	RID 3234
Dr மனோஜ் D தேசாய்	RID 3060
C பாஸ்கர்	RID 3000
கமல் சங்வி	RID 3250
Dr மகேஷ் கோட்பாகி	RID 3131
ராஜு சுப்ரமணியன்	RID 3141
அனிருதா ராய்சௌத்ரி	RID 3291
குர்ஜீத் சிங் சேகோன்	RID 3070
குலாம் A வஹன்வதி	RID 3141

செயற்குழு
உறுப்பினர்கள் (2026–27)

பாயல் கௌர் தலைவர், ஆளுநர் குழு	RID 3100
லென்னி டா கோஸ்டா துணைத்தலைவர், ஆளுநர் குழு	RID 3170
R சுப்ரமணி செயலாளர், ஆளுநர் குழு	RID 3000
அஜீத் ஜலான் பொருளாளர், ஆளுநர் குழு	RID 3011

ஆசிரியர்
ரஷ்மீதா பகத்

துணை ஆசிரியர்
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

நிர்வாகம் மற்றும்
விளம்பர மேலாளர்
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
rotarynews@rosaonline.org
www.rotarynewsonline.org

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

TRF
அறங்காவலர்
செய்தி



நீடித்த தாக்கமே நமது தாரக மந்திரம்

சேவையாற்றும் வாய்ப்பே பலர் ரோட்டரியில் சேர்வதற்கும் தொடர்ந்து இருப்பதற்கும் முக்கியக் காரணம். பல வடிவங்களில் கிடைக்கும் இந்த வாய்ப்புகளில் குறிப்பிடத்தக்கவை ரோட்டரி அறக்கட்டளை வழியாக வருகின்றன. அதன் முழு ஆற்றலையும் பயன்படுத்தும்போது அற்புதங்கள் நிகழ்கின்றன.

உறுப்பினர்கள் பயன்படுத்திக்கொள்ள அறக்கட்டளை பல வாய்ப்புகளை வழங்குகிறது. சேவை செய்யும் ஆர்வத்திலிருந்து சமூகப் பிரச்னைகளைத் தீர்க்கும் பெரிய இலக்குவரை நமது திட்டங்கள் விரிகின்றன. ஒவ்வொரு செயலும் முக்கியம்தான்; ஆனால் பணியின் தாக்கத்தில் கவனம் தேவை.

வெறும் சேவையைக் கடந்து பிரச்னைக்குத் தீர்வுகாண முயன்றதற்கு போலியோ ஒழிப்பு எடுத்துக்காட்டு. 'சேவை' மனப்பாங்கிலிருந்து 'தீர்வு' மனப்பாங்கிற்கு நகரும்போது தாக்கமும் அதிகரிக்கும். உலகெங்கும் அமைப்புகள் உடனடிப் பலன்களைவிடத் தாக்கத்தை அளவிடுகின்றன. நாமும் மாறவேண்டும்.

திட்டங்களுக்குச் செலவிட்ட பணத்தையும் சில நேரங்களில் உழைத்த மணிநேரங்களையும் தெரிவிக்கிறோம். அவற்றிற்குப் பணமதிப்பு கணக்கிடுவதும் உண்டு. ஆனால் தாக்கத்தைப் பதிவுசெய்வது அரிது.

சங்கங்களும் மாவட்டங்களும் திட்டங்களின் தாக்கத்தில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். எத்தனை வாழ்க்கைகள், எந்தளவிற்கு மாறியுள்ளன? நமது பணியின் பலன் எவ்வளவு காலம் நீடிக்கும்? பயனளிப்பதோடு நின்றுவிடுமா, அடிப்படை மாற்றத்தையும் ஏற்படுத்துமா? வருங்காலத் தலைமுறைகளும் பயனடையுமா?

சமூகச் சேவைத் திட்டத்தை வகுக்கும்போதே இக்கேள்விகளை நமக்குள் எழுப்பவேண்டும். இனி நமது தாரக மந்திரம் 'தாக்கம்' என்பதாகட்டும்; அதுவும் நீடித்த தாக்கமாகட்டும்!

A S வெங்கடேஷ்
TRF அறங்காவலர்



ஆப்பிரிக்காவின் ஐம்பெரும் விலங்குகளைக் கண்ட கனவுப்பயணம்

N. ராமகிருஷ்ணன்



டாய் மாரா, செரெங்கெட்டி என்ற பெயர்களைக் கேட்டாலே சிங்கக் கூட்டங்கள், யானைகள், வரிக்குதிரைகள், ஒட்டகச்சிவிங்கிகள், சீட்டாக்கள், சிறுத்தைகள் நினைவில் தோன்றும். வேட்டையாடும் விலங்கொன்று இரையைப் பிடிக்கும் காட்சியை நேரில் காணும் வாய்ப்பும் உண்டு. அதைவிட, வில்டபீஸ்ட் எனப்படும் காட்டுமாடுகள் ஆற்றைக் கடக்கும் காட்சி தனிச் சிறப்பு. காத்திருக்கும் முதலைகள் வரிக்குதிரைகளையோ வில்டபீஸ்ட்களையோ பிடிக்கும் சாத்தியம் அந்தக் காட்சியை மேலும் பரபரப்பாக்கும்.

நாங்கள் பத்துப் பேர் இவற்றையெல்லாம் காணும் எதிர்பார்ப்புடன் சென்றிருந்தோம். விரைவில் விலங்குகள் ஆற்றைக் கடக்கக்கூடும் என்ற தகவல் வாக்கி-டாக்கியில் வந்ததும், ஓட்டுநர்கள் எங்களை மசாய் மாரா பக்கத்திலுள்ள ஆற்றங்கரைக்கு அழைத்துச்சென்றனர். ஆற்றை நோக்கிச் சரிந்த நிலப்பரப்பிற்கு மேலே வரிக்குதிரைகளும் வில்டபீஸ்ட்களும் மேய்ந்துகொண்டிருந்தன. ஏதாவது நிகழப்போகிறது என்ற ஆவலுடன் காத்திருந்தோம்.


மாரா ஆறு அமைதியாகத் தெரிந்தது. அதன் விளிம்பில் சிறிய வரிக்குதிரைக் கூட்டம் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தது. எதிர்க் கரையில், மாற்றியமைக்கப்பட்ட இரண்டு டொயோட்டா லேண்ட்குரூசர் வாகனங்களிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். மேல்கூரைகள் திறந்திருந்தன. பெரும்பாலோர் இருக்கைகள்மீது நின்றபடி, கழுத்தை நீட்டி, அவை ஆற்றைக் கடக்குமா என்று கவனித்தனர்.

ஆனால், அந்த வரிக்குதிரைகளுக்கு மறுகரைக்குச் செல்வதைவிடத் தாகம் தீர்ப்பதில்தான் ஆர்வம் இருந்தது. குடித்துவிட்டு மீண்டும் கரையேறி மேயத் தொடங்கின. எங்களுக்கு

ஏமாற்றம். அவை முதலில் கடந்து சென்றால், பின்னாலிருந்த பெரிய வில்டபீஸ்ட் கூட்டமும் பின்தொடரும் என்று எதிர்பார்த்திருந்தோம்.

எங்கும் அமைதி. விலங்குகள் பெரிதாக ஒலியெழுப்பவில்லை; மனிதர்கள் தான் பேசிக் கொண்டி ருந்தனர். காற்று பலமாக வீசியது. சிறிய பறவைகள், பெரும்பாலும் பஞ்சுருட்டான்கள், உயரமான புற்களுக்கும் புதர்களுக்கும் இடையே பறந்து கீச்சிட்டன. எதுவும் மாறாததுபோலத் தோன்றியது. ஆனால் மாற்றம் நிகழ்ந்திருந்தது.

வரிக்குதிரைகளும் வில்டபீஸ்ட் களும் ஆற்றைக் கடக்கும்போது ஏற்படும் குழப்பத்தைப் பயன் படுத்தி வேட்டையாடும் முதலைகள், அவற்றின் வருகையை உணர்ந் திருந்தன. வரிக்குதிரைகள் தண்ணீர் குடித்த இடத்திற்கு அருகே நகர்ந்திருந்தன. எதிர்க்கரையிலிருந்து தொலைநோக்கி வழியே பார்த்த போது,









நீரில் அசைவின்றிக் காத்திருந்தவை தெளிவாகத் தெரிந்தன. அவை நகர்ந்து வந்ததைப் பார்த்திருக்காவிட்டால், பாறைகள் என்றே நினைத்திருப்போம்.

இப்போது வரிக்குதிரைகள் மீண்டும் மேயத் தொடங்கிவிட்டன. வேட்டையாடும் விலங்குகளைத் தேடி வேறிடத்திற்குச் செல்லலாமா, இங்கேயே காத்திருக்கலாமா? நல்ல வேளையாகக் காத்திருக்க முடிவு செய்தோம்.

அப்போதுதான் பரபரப்பு தொடங்கியது. நான்கு வரிக்குதிரைகள் கரையிறங்கி ஆற்றைக் கடக்கத் தொடங்கின. ஒன்று முன்னே செல்ல, மற்ற மூன்றும் சில அடி இடைவெளியில் பின்தொடர்ந்தன. கடக்காதே என்று எங்கள் வாகனங் களிலிருந்து பதற்றமான குரல்கள் எழுந்தன. நாங்கள் சுதாரிப்பதற்குள், காத்திருந்த முதலைக்கு இரை கிடைத்து விட்டது.

பாதை பாதுகாப்பாக இருப்பதாக நம்பி, மிகுந்த நிதானத்துடன் சென்ற முதல் வரிக்குதிரை, முதலையின் பயங்கரத் தாடைகளில் நேராகச் சிக்கியது. போராட்டம் நீடிக்கவில்லை. வெற்றி முதலைக்குத்தான். வரிக் குதிரையை நீருக்குள் இழுத்துக் கொண்டு, ஒதுக்குப்புறமான இடத்திற்குச் சென்றது. விருந்தில் சேர மேலும் இரண்டு முதலைகளும் வந்தன.

இன்னும் பல விலங்குகள் கடப்பதையும் வேட்டையாடப்படுவதையும் காணச் சிலர் விரும்பினர். சிலருக்கு வரிக்குதிரையை நினைத்துப் பரிதாபமாக இருந்தது. ஆனால் இதுதான் வாழ்க்கைச் சுழற்சி. இயற்கை இரக்கமற்றது. ஓர் உயிர் வாழ இன்னோர் உயிர் மடியவேண்டியிருக்கிறது.

ஆற்றைக் கடக்கும் பெருங்கூட்டம்

மசாய் மாரா, செரெங்கெட்டி, ங்கொரோங்கொரோ பகுதிகளுக்குச் சென்ற பத்துநாள் பயணத்தில், வில்டபீஸ்ட்கள் ஆற்றைக் கடக்கும் காட்சிகளைப் பலமுறை கண்டோம். ஒருமுறை குறைந்தது சில நூறு விலங்குகள் ஒரே கூட்டமாகக் கடந்தன. பிரமாண்டமான காட்சி அது.

ஆப்பிரிக்கப் புல்வெளியின் 'அழகற்ற ஐந்து' விலங்குகளில் வில்டபீஸ்டும் அடங்கும். மருப்பன்றிகள், பிணந்தின்னிக் கழுகுகள், புள்ளிக் கழுதைப்புலிகள், மராபூ நாரைகள் ஆகியவை மற்றவை.

மாரா ஆற்றைக் கடப்பதற்கு இவ்விலங்குகளுக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. மழையைப் பின்தொடரலாம்; அல்லது முன்னால் செல்லும் விலங்கைப் பின்பற்றலாம். பெரும்பாலும் வரிக்குதிரையே வழிகாட்டும். சில நேரங்களில் கரையோரம் பெருங்கூட்டம் சேர்ந்துவிடும். புதிதாக வருபவை இடத்திற்காகப் பின்னாலிருந்து நெருக்கும்போது, முன்னால் இருப்பவை ஆற்றில் இறங்கிவிடுகின்றன.

கரையோரம் சுற்றுலா வாகனங்கள் திரண்டிருந்தன. பலர் கைப்பேசிகளிலும், என்னைப் போன்ற சிலர் டிஜிட்டல் கேமராக்கள், தொலைதூரப் படப்பிடிப்பு லென்ஸ்களுடனும் காட்சிகளைப் பதிவுசெய்யக் காத்திருந்தோம். கூட்டத்தை ஒழுங்குபடுத்தப் பூங்காக் காவலர்கள் முயன்றனர். விலங்குகள் கடக்கப்போவதாகத் தெரிந்தால், வாகனங்களைக் கரையருகே அனுமதிப்பதில்லை.

ஆனால் விலங்குகள் நீரில் இறங்கியதும் பரபரப்பு வெடிக்கும். பயணிகளுக்குச் சிறந்த காட்சி கிடைக்குமிடத்தைப் பிடிக்க ஓட்டுநர்கள் விரைவார்கள்.

ஐம்பெரும் விலங்குகளுடன் சந்திப்பு

வில்டபீஸ்ட்கள் ஆற்றைக் கடப்பது, இங்குள்ள அற்புதங்களில் ஒன்றுதான். சிங்கம், ஆப்பிரிக்கக் காட்டெருமை, சிறுத்தை, யானை, காண்டாமிருகம் ஆகியவை 'பிக் ஃபைவ்' எனப்படும் ஐம்பெரும் விலங்குகள். இப்பட்டியலில் சீட்டாவை விட்டுவிட்டு காட்டெருமையைச் சேர்த்தது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அது வேறொரு விவாதம்!

முதல் நான்கையும் மசாய் மாராவிலும் செரெங்கெட்டியிலும் கண்டோம். ங்கொரோங்கொரோவில் நான்கு காண்டாமிருகங்களைக் கொண்ட கூட்டத்தைத் தொலைவிலிருந்து பார்க்க முடிந்தது.

இந்தியாவில் பல புலிகள் சரணாலயங்களுக்குச் சென்றுள்ள எனக்கு, புலிகள் எப்போதுமே வியப்பளிப்பவை. காட்டில் முதன் முறையாகச் சிங்கங்களை மிக அருகில் பார்த்த பிறகும், புலிகளே இன்னும் கம்பீரமாகவும் வசீகரமாகவும் தோன்றுகின்றன. அதற்காகச் சிங்கங்களைக் கண்டபோது உற்சாகமடைய வில்லை என்று பொருளல்ல.

வில்டபீஸ்ட் கூட்டத்தை வேட்டையாடத் தயாரான சிங்கக் கூட்டத்தையும் பார்த்தோம். நாங்கள் காத்திருந்த நேரத்தில் வேட்டை நிகழவில்லை. தாங்கள்தான் காட்டின் அரசர்கள் என்பது சிங்கங்களுக்குத் தெரியும். கம்பீரமான பிடரியுடன் ஓர் ஆண் சிங்கம் உட்படப் பல, எங்கள் வாகனங்களிலிருந்து சில அடி தூரத்தில் அலட்சியமாக





நடந்துசென்றன. மற்றவை, இரவில் பெய்த மழையால் சாலையோரம் தேங்கிய நீரை அமர்ந்தபடி நக்கிக் குடித்தன.

இந்தியாவின் பெரும்பாலான புலிகள் காப்பகங்களைப் போலல்லாமல், இங்கு நிலப்பரப்பு வறண்டும் திறந்தவெளியாகவும் இருந்தது. அது வறண்ட பருவம். செரெங்கெட்டியின் பரந்த புல்வெளியில், ஆங்காங்கே தனித்து நின்ற மரங்கள் அழகான வேறுபாட்டை உருவாக்கின.

தாம்சன்ஸ் கசெல், இம்பாலா, கோக்ஸ் ஹார்ட்பீஸ்ட், ஈலண்ட், கிரான்ட்ஸ் கசெல், புஷ்பக், வாட்டர்பக் எனப் பல்வேறு இரலை இனங்கள் மேய்ந்தன. வேட்டையாடும் விலங்கு வருகிறதா என்ற எச்சரிக்கை அவற்றிடம் எப்போதும் இருந்தது.

குறைந்தது இருமுறை யானைகள் எங்கள் வாகனங்களைத் தொட்டுவிடும் தூரத்திற்கு வந்தன. ங்கொரோங்கொரோவில் பெரிய தந்தங்களுடன் வந்த ஆண் யானையும் அவற்றில் ஒன்று. மனிதர்களைப் பற்றிக் கவலையே இல்லாமல், பிடித்தவற்றைத் தின்றபடி சத்தமின்றி நடந்தன. அது அவற்றின் வீடு. நாங்கள்தான் அத்துமீறி நுழைந்தவர்கள்.

பறவைகளும் புல்வெளியும்

இருபது லட்சத்திற்கும் அதிகமான ஆண்டுகளுக்கு முன் எரிமலைச் செயல்பாட்டால் உருவான ங்கொரோங்கொரோ பெரும்பள்ளத்தில், சிறிய, பெரிய பூநாரை இனங்களைக் காணலாம். ஏரி நீரில் அவை பாசிகளை வடிகட்டித் தின்கின்றன. அவற்றின் முக்கிய உணவான பாசிகளே உடல் நிறத்திற்கும் காரணம்.

மசாய் மாரா, செரெங்கெட்டி, ங்கொரோங்கொரோ பகுதிகளில் பறவைகள் ஏராளம். ஆனால் என்னைப் போன்ற தீவிரப் பறவை ஆர்வலர்களே அவற்றைத் தேடுகிறார்கள். பெரும் பாலோருக்குப் பெரிய விலங்குகளைக் காண்பதில்தான் ஆர்வம்.

வாகன ஓட்டுநர்களே வழிகாட்டி களாகவும் செயல்படுகிறார்கள். அதற்கான பயிற்சிகளைப் பெற்றவர்கள் அவர்கள். தொலைவிலுள்ள விலங்குகளைக் கண்டுபிடிப்பதில் வல்லவர்கள். வேட்டையாடும் விலங்குகள் தென்படும் இடம், ஆற்றைக் கடக்கத் தயாராகும் கூட்டம் ஆகிய தகவல்கள் வாக்கி-டாக்கியில் தொடர்ந்து ஒலிக்கின்றன. உடனே சிறந்த இடத்தைப் பிடிக்கும் ஓட்டம் தொடங்குகிறது.

பலருக்கு இது ஆசைப் பட்டியலில் மேலும் ஒன்றை நிறை வேற்றும் பயணம். எனக்கும் என் மனைவிக்கும் வாழ்நாள் முழுவதும் நினைத்து மகிழக்கூடிய அனுபவம். புகைப்படங்கள் அந்த நினைவுகளைப் பாதுகாக்கும். ஒரு விலங்கைக்கூடப் பார்க்காவிட்டாலும், புல்வெளியை நாள் முழுவதும் ரசித்துக்கொண்டிருக்க என்னால் முடியும்.

செலவுசெய்ய வசதியும், முதுகை உலுக்கும் வாகனப் பயணங்களைத் தாங்கும் திறனும், விலங்குகளுக்காகக் காத்திருக்கும் பொறுமையும் இருந்தால், இப்பயணம் நிச்சயம் மதிப்புடையது.

நைரோபியிலிருந்து பயணம் தொடங்கியது. ஓட்டுநர்கள் ஆமோஸ், ஐசக் எங்களை மசாய் மாராவிலுள்ள விடுதிக்கு அழைத்துச்சென்றனர். அங்கிருந்து சிறிய செஸ்னா விமானங்களில் இருகட்டப் பயணமாகச் செரெங்கெட்டியை அடைந்தோம். அங்கே கிலியட், பிலிப் எங்களை வரவேற்றனர். மீதிப் பயணம் முழுவதும் உடனிருந்து, இறுதியில் கிளிமஞ்சாரோ விமான நிலையத்தில் இறக்கிவிட்டனர்.

நெடுஞ்சாலைகள் சிறப்பாக இருந்தன. இந்தியாவைவிட அதிகமானோர் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவதையும் கண்டோம். நைரோபியிலிருந்து புறப்பட்டதுமே, பெரிய பூனை இனங்களைக் காண்போமா, ஆற்றைக் கடக்கும் காட்சி கிடைக்குமா என்பதே பேச்சு.

“காத்திருங்கள்; பார்க்கலாம்” என்பதுதான் எங்கள் வழிகாட்டியின் பதில். நல்லவேளையாகக் காத்திருந்தோம்; விரும்பிய அனைத்தையும் கண்டோம்!

கட்டுரையாளர் சென்னையைச் சேர்ந்த சுயாதீனப் பத்திரிகையாளர்.

Rotary PEOPLE OF ACTION

இளம் வில்வித்தை வீரர்களுக்குத் துணைநிற்கும் ரோட்டரி

கிரண் ஸெஹ்ரா



கயாவிலுள்ள மகத் வில்வித்தை அறக்கட்டளை மையத்தில் பயிற்சிபெறும் சிறுமிகள்.

பிகாரின் சிறிய கிராமமான உசாஸில், மூன்று வயதிலேயே தனது உறவினருடன் சேகரித்த குச்சிகளைக் கொண்டு முதல் வில்லையும் அம்பையும் உருவாக்கினார் ஆதர்ஷ் குமார். ராமாயணத்தால் ஈர்க்கப்பட்ட அவர், தன்னை ராமராகவோ லட்சுமணராகவோ கற்பனை செய்துகொண்டு மரங்களையும் பாறைகளையும் குறிவைப்பார். ஏழு வயதில், உள்ளூர் வில்வித்தைப் போட்டிகளை உறவினர் அறிமுகப்படுத்தியதும், சிறுவயது விளையாட்டு அடுத்தகட்டத்திற்குச் சென்றது.

"அப்போது முறையான பயிற்சியோ தொழில்முறை உபகரணங்களோ இல்லை. அம்பெய்வதை ரசித்தேன்" என்கிறார். இன்று, 17 வயதில் தேசிய அளவிலான வீரராக உயர்ந்துள்ள ஆதர்ஷ், 2025 தேசிய சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றுள்ளார்.

அரசுப்பள்ளி ஆசிரியரான தந்தை மறைந்ததும், கயாவிற்குக் குடிபெயர்ந்த ஆதர்ஷ், மகத் வில்வித்தை அறக்கட்டளையின் பயிற்சி மையத்தில் சேர்ந்தார். அவரது தாயார் அரசு எழுத்தராகப் பணியாற்றுகிறார். அறக்கட்டளையும் RC கயா சிட்டி, RID 3250 சங்கமும் அளிக்கும் ஆதரவால், கல்வியையும் விளையாட்டையும் தொடர்கிறார். கயாவின் நாசரேத் அகாடமியில் சேர்க்கை பெற்றுத்தந்த சங்கம், பள்ளிக் கட்டணத்தையும் செலுத்துகிறது. இதனால் படிப்பைக் கைவிடாமல் வில்வித்தையில் கவனம் செலுத்த முடிகிறது.

2022-ல் 14 வயதுக்கு உட்பட்டோருக்கான மாநிலப் போட்டியில் வெண்கலம் வென்றார். அடுத்தடுத்த ஆண்டுகளில் 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தங்கம், வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றார். 2025-ல் தேசியத் தங்கமும் சேர்ந்தது. அவரது திறமை வளர்ந்தபோது, தேவையான ஆதரவும் கிடைத்தது.

மையத்தில் முன்னேறும் இளம் வீரர் அவர் மட்டுமல்ல. துருக்கியில் நடைபெறும் சிறப்புப் பயிற்சி முகாமிற்காக இந்திய விளையாட்டு ஆணையம் நாடு முழுவதும் தேர்ந்தெடுத்த பத்து வில்வித்தை வீரர்களில் பூனம் சிங்கும் (15) ஒருவர். இங்கு பயிற்சிபெறும் மாநிலச் சாம்பியன்கள் ரன்வீர் ராஜ், சலோனி ராஜ் ஆகியோருக்குக் கேந்திரிய வித்யாலயாவில் சேர்க்கை பெறவும் ரோட்டரி உதவியுள்ளது.

“கல்வியைக் கைவிடாமல் விளையாட்டில் முன்னேறச் சங்கம் உதவுகிறது. வெற்றி என்பது பதக்கங்களை மட்டுமே சார்ந்ததல்ல. பள்ளிக்கல்வி, குடும்ப ஆதரவு, தொடர்ந்து பயிற்சிபெறத் தேவையான வளங்கள் ஆகியவையும் முக்கியம்” என்கிறார் பயிற்சியாளர் ஜெய் பிரகாஷ்.



ஜெய் பிரகாஷுடன் ஆதர்ஷ் குமார் (வலது).

பயிற்சிக்களத்தை உருவாக்கிய கூட்டுமுயற்சி

2022-ல் கயாவில் வில்வித்தை வசதிகளை மேம்படுத்த உதவிகோரி, சங்கத்தின் செயல் செயலர் ரத்தன் குமாரை அணுகினார் பிரகாஷ். மாநில அளவிலான முன்னாள் கிரிக்கெட் வீரரான குமார், சங்கத்தினரிடம் எடுத்துரைத்தார். முயற்சியை நிர்வகிக்க அறக்கட்டளை உருவாக்கப்பட்டது.



மிதிவண்டிகள் பெற்ற மாணவர்களுடன் PDGs S P பகாரியா (இடமிருந்து ஆறாவது), சஞ்சீவ் குமார் தாக்கூர் (பகாரியாவின் இடப்புறம்), RC கயா சிட்டி உறுப்பினர்கள்.

பயிற்சி மையத்திற்காக உள்ளூர் அரசு திறந்தவெளி மைதானத்தை ஒதுக்கியது. அங்கு கொட்டகை அமைக்கச் சங்கம் உதவியது. PDG சஞ்சீவ் தாக்கூர் ரூ.50,000 வழங்கினார். DG S P பகாரியா, பயிற்சிபெறும் மாணவர்களுக்கு 12 மிதிவண்டிகளை அளித்தார். 2025-ல் மைதானத்தையும் பிற வசதிகளையும் மேம்படுத்தச் சங்கம் ரூ.1.51 லட்சம் வழங்கியது.

சங்க உறுப்பினர்கள் விளையாட்டுச் சீருடைகளுக்கும் நிதியளித்தனர். சங்கமும் அறக்கட்டளையும் மாணவர்களுக்கு வில்கள், தண்ணீர் பாட்டில்கள், முதுகுப்பைகள் வழங்கின. சர்வதேச மகளிர் தினத்தில் சலோனி, வைஷ்ணவி கரண் ஆகிய இரு சிறுமிகளுக்குப் புதிய வில்கள் வழங்கப்பட்டன.

"வில்வித்தை செலவுமிக்க விளையாட்டு என்பதால் இந்த உதவி முக்கியம். தொழில்முறை வில்-அம்புத் தொகுப்பு ரூ.5 லட்சம்வரை விலைபோகும். மையம் ரூ.40,000 மதிப்பிலான அடிப்படைத் தொகுப்புகளை வழங்குகிறது. இதுவரை ஒரே மாணவருக்கு மட்டும் ரூ.80,000 மதிப்பிலான தொகுப்பு கிடைத்துள்ளது" என்கிறார் குமார்.

பள்ளிச் செலவுகளையும் வீட்டுத் தேவைகளையும் சமாளிக்கும் குடும்பங்களுக்கு இத்தகைய உபகரணங்களை வாங்குவது கடினம். அவற்றை வழங்குவதால் குழந்தைகள் தொடர்ந்து பயிற்சிபெற முடிகிறது.

தற்போது மூன்று முதல் பதினெட்டு வயது வரையிலான 86 குழந்தைகள் இங்கு பயிற்சி பெறுகின்றனர். பலர் வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

"குழந்தைகளின் ஆர்வம், திறன், தொடர்ச்சியான வருகை, செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வுசெய்கிறோம்" என்கிறார் பயிற்சியாளர்.



உதவி பெறுவதுடன் சேவையும்

2025 முதல் மையத்தில் இன்டராக்ட் சங்கமும் செயல்படுகிறது. உறுப்பினர்கள் உண்டியல்களில் சிறு தொகை களைச் சேமித்து, சமூகப் பணிகளுக்குப் பயன் படுத்துகின்றனர். மரக்கன்றுகள் நடுவதில் பங்கேற்றதுடன், ஆசிரியர் தினம், ஹோலி கொண்டாட்டங் களையும் ஏற்பாடு செய்துள்ளனர்.

சங்க உறுப்பினர்கள் ராஜ் குமார் துபே, டாக்டர் ரத்தன் குமார், விஜய் பலோட்டியா ஆகியோர் இன்டராக்ட் சங்கத்திற்கு ஆதரவளிக்கின்றனர். "உதவி பெறும் விளையாட்டு வீரர்களாக மட்டுமன்றி, சமூகத்திற்குப் பங்களிக்கக்கூடிய உறுப்பினர்களாகவும் இளைஞர்கள் தங்களை உணரவேண்டும் என்பதே நோக்கம்" என்கிறார் குமார்.

பாட்னாவிலுள்ள பிகார் மாநில விளையாட்டு ஆணையத்தின் இரண்டாம் நிலைத் தகுதிபெற்ற வில்வித்தைப் பயிற்சியாளரான பிரகாஷ், 2024, 2025 ஆண்டுகளில் மாநில அரசின் சிறந்த பயிற்சியாளர் விருதைப் பெற்றார். ஒவ்வொரு விருதுடனும் ரூ.2 லட்சம் ரொக்கப் பரிசு கிடைத்தது. அதில் ஒரு பகுதியை மையத்திற்கு உபகரணங்கள் வாங்கச் செலவிட்டார்.

அவரது வழிகாட்டுதலில், 2024-ல் பாட்னாவில் நடைபெற்ற ராஜா கர்ணா மாநில வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் கயா ஒட்டு மொத்தச் சாம்பியனானது. 400 வீரர்கள் பங்கேற்ற போட்டியில் கயா அணி ஒன்பது தங்கம், எட்டு வெள்ளி, பத்து வெண்கலப் பதக்கங்களை வென்றது.

இந்தாண்டும் சிறந்த பயிற்சியாளர் விருது கிடைக்கும் என்று நம்பும் பிரகாஷின் பெரிய கனவு, மாணவர்கள் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதுதான். மையத்தைச் "சாம்பியன்களின் மையம்" என வர்ணிக்கும் குமார், "அவர்களின் பயிற்சியைப் பார்க்கும்போது, ஒலிம்பிக் பதக்கம் நிச்சயம் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது" என்கிறார்.

பாகல்பூரில் நடைபெற்ற மாநிலப் பள்ளிகள் சாம்பியன்ஷிப்பில், இம்மையத்தின் மகத் பகுதி வீரர்கள் மூன்று வயதுப் பிரிவுகளில் 21 பதக்கங்களை வென்றனர்: ஒன்பது தங்கம், ஆறு வெள்ளி, ஆறு வெண்கலம். 2026 மார்ச் மினி தேசிய வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் அறக்கட்டளையின் வீரர்கள் இரண்டு தங்கமும் ஒரு வெண்கலமும் பெற்றனர்.

சிறப்பு வில்வித்தைப் பயிற்சிக்காக மூன்று மாணவர்களைத் தென்கொரியாவிற்கு அனுப்ப அறக்கட்டளை விரும்புகிறது. செலவு அதிகமென்பதால், இந்தியா மற்றும் தென்கொரிய ரோட்டரி சங்கங்களின் ஆதரவை நாடுகிறது.

"இளம் வீரர்களுக்குத் தொடர்ச்சியான பயிற்சி, தரமான உபகரணங்கள், போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்புகள், பயணத் திற்கான நிதியுதவி ஆகியவை தேவை" என்கிறார் குமார்.■

Rotary
Zones 4,5,6 & 7

AIM HIGH
Sri Lanka
ROTARY INSTITUTE 2026

AIM HIGH

Sri Lanka

ROTARY INSTITUTE 2026

18-20 DECEMBER

CITY OF DREAMS, COLOMBO



Yinka Babalola
Rotary International President 2026-2027



RI Vice President & Convenor
Muruganandam M. (MMM)
RI Director 2025-27
India



Co-Convenor
K.P. Nagesh (KPN)
RI Director 2025-27
India



Harriette Florence Verwey
RI Director 2025-27
Netherlands



Brian Hall
RI Director 2025-27
USA



Emmanuel Katongole
RI Director 2026-28
Uganda



Sofia Glsladottir
RI Director 2026-28
Iceland

Meet | Greet | Network

with the current
Rotary International
Directors



ரோட்டரியின் மிகச்சிறந்த அத்தியாயம் இனிதான் எழுதப்பட வேண்டும்: பரத் பாண்டியா

ரஷ்தா பகத்

“வாழ்க்கையில் சில தருணங்களில் உணர்வுகளை வெளிப்படுத்த வார்த்தைகள் போதுவதில்லை. 37 ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரியில் இணைந்தபோது, இந்தப் பயணம் என்னை 2028–29 RI தலைவராக உங்கள் முன் நிற்கவைக்கும் என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இங்கே பேசிய ஒவ்வொருவரின் பாராட்டுகளும் அறிவுரைகளும் வாழ்த்துகளும் என்னை நெகிழச்செய்துள்ளன; பணிவுடன் தலைவணங்குகிறேன்.”

மும்பையில் தம்மைப் பாராட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ‘அபிநந்தன்’ விழாவில், RI தலைவர் நியமனதாரர் (RIPN) பரத் பாண்டியா இவ்வாறு உரையைத் தொடங்கினார். 750 உறுப்பினர்கள் பங்கேற்ற விழாவை ஏற்பாடு செய்த



PRID *ராஜு சுப்ரமணியன், வித்யா*, RIDE *பாசு தேவ் கோல்யான், குமுத், அமன்தீப்*, RIDE *குர்ஜீத் சிங் செகோன், நயன்தாரா*, PRID *அசோக் மகாஜன்*, PRIP *கல்யாண் பானர்ஜி*, PRID P T *பிரபாகர், மாதவி*, RIPN *பரத் பாண்டியா*, PRIP *சேகர் மேத்தா*, RID K P *நாகேஷ்*, PRIP K R *ரவீந்திரன், வானதி*, RID 3141 DG *ராஜன் S துவா, பிரீத்தி, அமிதா*, PRID *மகேஷ் கோட்பாகி, முன்னாள்* TRF *அறங்காவலர் குலாம் வஹான்வதி*, PRID *அனிருத்த ராய் சௌத்ரி, காஞ்சன்*, RID 3142 DG *நிலேஷ் ஜெய்வந்த்.*

ஒருங்கிணைப்பாளர் PRID ராஜு சுப்ரமணியன், RID 3141 ஆளுநர் ராஜன் துவா, RID 3142 ஆளுநர் நிலேஷ் ஜெய்வந்த் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். ராஜு சுப்ரமணியனும் அவரது மனைவி வித்யாவும் 2028-29 ஆண்டிற்கான RI தலைவரின் உதவியாளர்களாகப் பின்னர் அறிவிக்கப்பட்டனர்.

இளம் ரோட்டேரியராக இருந்த போது ஏற்பட்ட ஓர் அனுபவம் பாண்டியாவின் நினைவில் ஆழமாகப் பதிந்துள்ளது. அப்போது சங்கத்தின் ஒரே மருத்துவராக இருந்த அவரிடம், புதிதாகத் தொடங்கப்பட்ட போலியோபிளஸ் திட்டத்தின் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது.

"குடிசைப்பகுதிகளின் இருண்ட தெருக்களுக்குச் சென்று, பெற்றோரிடம் எடுத்துரைத்து, குழந்தைகளின் வாயில் இரண்டு சொட்டுப் போலியோ தடுப்பு மருந்தை அளித்தேன். அந்த அனுபவம் என்னைத் தொட்டு, மாற்றியது."

ரோட்டரியில் சேவை என்பது வெறும் கருத்தோ சொற்றொடரோ அல்ல என்பதைப் படிப்படியாக உணர்ந்தார். "அதற்கு மனித முகம் உண்டு. குழந்தையின் புன்னகை, பெற்றோரின் கவலை, தாயின் நன்றி ஆகியவையே அது. ரோட்டரியால் அதிகாரம் பெற்றதால் வாழ்க்கை மாறிய பெண்களின் கண்ணியமும், அவர்களின் குழந்தைகள்மீது அக்கறை காட்டிய ரோட்டேரியரின் பரிவும் அதில் அடங்கும்."

பல ஆண்டுகளுக்குப் பிறகு, PRID அசோக் மகாஜனின் உதவியால் தேசிய போலியோபிளஸ் குழுவில் பணியாற்றினார். இந்தியா போலியோ இல்லாத நாடாக மாறிய காலம் அது.

"ஒவ்வொரு பொறுப்பும் எனக்கு ஏதோ ஒன்றைக் கற்றுத்தந்தது. ரோட்டரி தலைமை என்பது மக்கள் முன்னால் நின்று கைதட்டல்களைப் பெறுவதல்ல; அவர்களுடன் நிற்பது. செவிமடுத்துப் புரிந்துகொள்வது, மக்களை ஒன்றிணைப்பது. எல்லாவற்றையும்விட, பதவிகள் தற்காலிகமானவை; நமது பணியின் தாக்கமோ ஆண்டுக்கணக்கிலும் பல பத்தாண்டுகளிலும் நீடிக்கலாம் என்பதை நினைவில்கொள்வது."

லாவோ ட்ஸுவின் கருத்தை மேற்கோள் காட்டினார்: நல்ல தலைவரை மக்கள் பின்தொடர்வார்கள். ஆனால் ஞானமுள்ள தலைவரின் பணி நிறைவடைந்ததும், "இதை நாங்களே செய்தோம்" என்று மக்கள் சொல்வார்கள்.

பின்தொடர்பவர்களைவிடத் தலைவர்கள்

"அதிகமான பின்தொடர்பவர்களை அல்ல, அதிகமான தலைவர்களை உருவாக்குவதே எனது தொடர்ச்சியான முயற்சி. திரும்பிப் பார்க்கும்போது, ரோட்டரிக்கு நான் வழங்கியதைவிடப் பலமடங்கு பெற்றுள்ளேன் என்பதை உணர்கிறேன். மதிப்புமிக்க நட்புகள், கற்கவும் வளரவும் வாய்ப்புகள், சிறந்த மனிதர்களுடனும் தலைவர்களுடனும் பணியாற்றும் பெருமை ஆகியவற்றை ரோட்டரி வழங்கியுள்ளது."

தனது பார்வையைத் தொடர்ந்து விரிவுபடுத்தி, புதிய சிந்தனைக்கும் சிறந்த வாழ்க்கைக்கும் வழிவகுத்ததால், பெருமைமிக்க ரோட்டேரியராக இருப்பதாகக் கூறினார்.

ரோட்டரியை வழிநடத்திய சிறந்த தலைவர்களின் அடிச்சுவட்டில் தாம் செல்வதை உணர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார். நமது மண்டலங்களைச் சேர்ந்த ஐந்து தலைவர்கள் உட்பட, ராஜா சாபு, கல்யாண் பானர்ஜி, K R ரவீந்திரன், சேகர் மேத்தா போன்றோர் அமைப்பில் தங்களது முத்திரையைப் பதித்துள்ளனர் என்றார்.

தலைமை வாய்ப்பை எதிர் கொள்வதில் பணிவும் உற்சாகமும் கொண்டிருப்பதாகக் கூறிய பாண்டியா, வழிகாட்டிய பெற்றோருக்கும் ரோட்டரி குடும்பத்தின் மூத்தவர்களுக்கும் நன்றி



இடமிருந்து: PRID *ராஜு சுப்ரமணியன்,* RIPN *பரத் பாண்டியா, வித்யா சுப்ரமணியன், மாதவி பாண்டியா.*

தெரிவித்தார். தனது RC போரிவிலி சங்கத்தையும், அன்றைய RID 3140 மாவட்டத்தையும் குறிப்பாகப் பாராட்டினார். அது தற்போது RID 3141, 3142 எனப் பிரிந்துள்ளது.

"என்னிடம் வைத்த நம்பிக்கை, அளித்த ஆதரவு, ஊக்கம் அனைத்திற்கும் நன்றி. எல்லாவற்றிற்கும் மேலாக, எனது சிறகுகளுக்குக் கீழுள்ள காற்று என்று உறவினர் ஷ்யாம் வர்ணித்த ஒருவருக்கு நன்றி சொல்லவேண்டும். எனது வழிகாட்டி, ஆலோசகர், சிறந்த தோழி - என் மனைவி மாதவி."

ரோட்டரியின் ஒவ்வொரு வாய்ப்பும் பொறுப்புடன் வருவதாகக் குறிப்பிட்ட அவர், இலக்கில் கவனம் செலுத்த வேண்டும் என்றார். பாதையில் தடைகள் வந்தாலும் திசைமாறாத எறும்புகளிடமிருந்து கற்றுக்கொள்ளலாம் எனக் கூறினார்.

"அவற்றின் ஒரே கவனம் இலக்கை அடைவதுதான். கவனக்குவிப்பிற்குப் பெரும் சக்தி உள்ளது." சில வாட்ஸ் ஆற்றலுள்ள லேசர் கதிரைக்கூட ஒருமுகப்படுத்தினால் கண்ணாடியை வெட்டவும், மிகக் கடினமான வைரத்தில் துளையிடவும் முடியும் என்ற உதாரணத்தைப் பகிர்ந்தார்.

மக்கள், தாக்கம், நம்பிக்கை

வரும் ஆண்டுகளில் தாம் உட்பட அனைவரும் மக்கள், தாக்கம், நம்பிக்கை ஆகிய மூன்று அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

"உறுப்பினர்களே நமது மிக முக்கியமான சொத்து; ரோட்டரியின் வலிமை அவர்கள்தான். 2030 ஜூனுக்குள் 12.5 லட்சம் ரோட்டேரியர்களையும் 1.25 லட்சம் ரோட்டராக்டர்களையும் அடையும் இலக்கிற்காக அவர்கள்மீது கவனம் செலுத்த வேண்டும்."

மக்களின் துயரைத் தணிப்பதன் முக்கியத்துவம் குறித்த பழமையான நூல்களின் கருத்தை மேற்கோள் காட்டி, அதுவே ரோட்டரி சேவையின் சாரம் என்றார்.

தற்போது எத்தனை திட்டங்கள் செய்தோம், எவ்வளவு செலவிட்டோம் என்பதிலேயே சேவையின் மதிப்பீடு நின்றுவிடுவதாகக் குறிப்பிட்டார். "நமது சேவை மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். வாழ்க்கைகளை மாற்றி, சமூகத்தில் நீடித்த, அளவிடக்கூடிய தாக்கத்தை உருவாக்க வேண்டும்."

நம்பிக்கையே ரோட்டேரியர்களின் மிகப்பெரிய சொத்து என்றும் வலியுறுத்தினார். முறையற்ற செயல்பாடுகளால் நிறுவனங்கள் கேள்விக்குள்ளாகி நம்பிக்கையை இழக்கும் உலகில், நம்பிக்கையூட்டும் அமைப்பாக ரோட்டரி தொடரவேண்டும் என்றார்.

"நமது தலைமை, நேர்மை, பொறுப்பான நிர்வாகம் ஆகியவற்றில் நம்பிக்கை இருக்க வேண்டும். ரோட்டரிக்கு வழங்கப்படும் ஒவ்வொரு ரூபாயும் நன்றாகவும் விவேகமாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்தப்படும் என்ற நம்பிக்கையைப் பேண வேண்டும்."

ஒருவர் மறைந்தபிறகும் புதைக்கப்படாமல் அவரைத் தாண்டி வாழ்வது அவரது நற்பண்புதான் என்ற கருத்தையும் பகிர்ந்தார். நற்பண்பு நேர்மையை உருவாக்குகிறது; நேர்மை நம்பிக்கையை வளர்க்கிறது; நம்பிக்கையே தலைமைத்துவத்தின் அடித்தளம் என்றார்.

தனது நியமனத்தைக் கொண்டாடுவதைவிட, திறமையையும் நேரத்தையும் ரோட்டரிக்கு அளிக்கும் அனைவரையும் கொண்டாட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். "பரத் பாண்டியா RI தலைவராக என்ன செய்யப்போகிறார் என்பதல்ல

கேள்வி. 2028–29 பயணத்தில் நாம் ஒன்றிணைந்து என்ன சாதிக்கப்போகிறோம் என்பதுதான் கேள்வி."

நமது மண்டலங்கள் ரோட்டரியில் சிறப்பாகச் செயல்படுவதாகக் கூறினார். உறுப்பினர் வளர்ச்சி உறுதியாக உள்ளது; இளம் தலைவர்கள் உருவாகின்றனர்; TRF ஆதரவுடன் சிறந்த சமூக சேவை நடைபெறுகிறது. அறக்கட்டளை நிதியளிப்பில் இந்தியா பல ஆண்டுகளாக இரண்டாமிடத்தில் உள்ளது. கடந்தாண்டு பங்களிப்பு $45 மில்லியனைக் கடந்தது.

"சேகர் மேத்தா அடிக்கடி கூறுவதுபோல், சேவைத் திட்டங்களில் நாம் கோஹினூர் வைரம். இருந்தாலும் ஏதோ குறைகிறது. தேர்தல் தகராறுகளும் மோதல்களும் முன்னிலைக்கு வருகின்றன. கருத்து வேறுபடுவதில் தவறில்லை. ஆனால் K R ரவீந்திரன் சொல்வதுபோல், விரோதம் கொள்ளாமல் கருத்து வேறுபடக் கற்றுக்கொள்ள வேண்டும்."

கவனத்துடனும் நல்லிணக்கத்துடனும் செயல்பட்டால், அனைவரும் பெருமைப்படக்கூடிய ஒற்றுமையான, எதிர்கால நோக்கமுள்ள, திறன்மிக்க ரோட்டரியை உருவாக்கலாம் என்றார். அடிப்படை விழுமியங்களைப் பேணியபடியே உலக ரோட்டரியில் மைய இடத்தைப் பெறலாம்.

"ரோட்டரியின் மிகச் சிறந்த அத்தியாயம் இனிதான் எழுதப்பட வேண்டும் என்று உறுதியாக நம்புகிறேன். மனதில் துணிவு, இதயத்தில் பரிவு, செயல்களில் நேர்மை ஆகியவற்றுடன் அதை ஒன்றிணைந்து எழுதுவோம்."

பல ஆண்டுகளுக்குப் பிறகு, 2028–29-ல் யார் தலைவராக இருந்தார் என்பது நினைவில் இல்லாமல் போகலாம். ஆனால் தடுப்பூசி அளித்த குழந்தைகள், மாற்றிய வாழ்க்கைகள், சமூகத்தின் நம்பிக்கைகளை நிறைவேற்றப் பயன்படுத்திய வாய்ப்புகள் நினைவில் இருக்கும் என்றார். ராபர்ட் ஃப்ராஸ்டின், நிறைவேற்ற வேண்டிய வாக்குறுதிகளும் உறங்குவதற்கு முன் செல்ல வேண்டிய நீண்ட பயணமும் குறித்த கவிதை வரிகளுடன் உரையை முடித்தார்.

பதவி உயர்வல்ல; வேறுவிதமான பொறுப்பு

பாண்டியாவைப் பாராட்டிய PRIP ரவீந்திரன், சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு அவரது சங்க வெள்ளிவிழாவில் சந்தித்ததை நினைவுகூர்ந்தார்.

"மெலிந்த உருவம்; ஆனால் உயர்ந்த ஆளுமை. மென்மையான நடத்தை; அதற்குள் எஃகுபோன்ற உறுதி. பாராட்டைப் பெற்றுக்கொள்ள முந்தமாட்டார்; பொறுப்பை ஏற்கத் தயங்கமாட்டார். அறையில் உரக்கப் பேசுபவர் அல்ல; ஆனால் அவர் சொல்வதை அறையே ஏற்றுக்கொள்ளும். தலைவருக்கு இது மிகவும் பயனுள்ள பண்பு."

RI தலைமை என்பது பதவி உயர்வோ, ஏறிக்கொண்டிருக்கும் ஏணியின் உச்சியோ அல்ல என்றார். அது முற்றிலும் வேறுபட்ட பணி; இதுவரை செய்தவை அனைத்தும் அதற்கான முழுமையான தயாரிப்பாகிவிடாது என்று தனது அனுபவத்திலிருந்து கூறினார்.

"தனிப்பட்ட செல்வாக்கைவிட அமைப்பின் நலனை முன்னிறுத்த வேண்டிய தருணங்கள் வரும். அதற்கு விலையும் கொடுக்க வேண்டியிருக்கும். கடினமான முடிவை விளக்கவும், அதன் பொறுப்பை ஏற்கவும், அமைப்பில் அதைச் செயல்படுத்தவும் தலைவர் தயாராக இருக்க வேண்டும்."

தனது பதவிக்காலச் செலவுக்குறைப்பு குறித்து ரவீந்திரன் விளக்கினார். ஊழியர்களிடம் செலவைக் குறைக்கக் கேட்டபோது, மூத்த தலைவர்கள் என்ன



நான் அறிந்த பரத் - மாதவி



டாக்டர் மாதவி பாண்டியா.

'நான் அறிந்த பரத்' என்ற தலைப்பில் பேசச் சொன்னபோது, "அவர் புத்திசாலி, வசீகரமானவர், அழகானவர் என்று சொல்வேன் என எதிர்பார்த்தார்களோ? எனக்கு அவர் அப்படித்தான். ஆனால் அதைவிட மேலானவர். அக்கறையும் பரிவும் கொண்டவர்; எல்லாவற்றிற்கும் மேலாக முழுமையான குடும்ப மனிதர்" என்றார் மாதவி பாண்டியா.

Rயின் உயரிய பதவிக்கு நியமிக்கப்பட்ட முதல் பொது அறுவைச் சிகிச்சை நிபுணரும் இரண்டாவது மருத்துவரும் அவர்தான் என்று தெரிவித்தார்.

"அறுவைச் சிகிச்சைப் பயிற்சியும் பணியும் அவரது விழுமியங்களை வடிவமைத்துள்ளன. உள்ளுணர்வு, தீர்மானத் திறன், துல்லியம், ஆதாரங்களின் அடிப்படையிலான செயல்பாடு, குழுப்பணி, அறநெறி ஆகியவை அறுவைச் சிகிச்சைக்கு அவசியம். வாழ்க்கையில் செய்யும் அனைத்திலும் அதே திறன்களைக் கொண்டுவருகிறார்."

கணவர் தலைவர் நியமனதாரராக இருப்பது எப்படி உணரப்படுகிறது என்று பலர் கேட்பதாகச் சொன்னார். "அற்புதமாக இருக்கிறது. பெருமையும் மகிழ்ச்சியும் நன்றியுணர்வும் உள்ளன."

அதேநேரம், இந்நிலைக்குக் கொண்டுவந்த பயணத்தில் பல மனிதர்கள், அனுபவங்கள், பல ஆண்டுகளின் அர்ப்பணிப்பு இருப்பதையும் உணர்கிறார். குடும்ப ஆதரவும் பெற்றோர், பெரியோரின் ஆசிகளும் முக்கியக் காரணங்கள் என்றார். "எங்கள் மகள்கள் நிதியும் சஷ்மியும் குடும்பத்திற்கான தங்களது நேரத்தை விட்டுக்கொடுத்து, முழுமையாக ஆதரித்துள்ளனர்.



செய்துள்ளனர் என்று அவர்கள் கேட்டனர்.

"எனது பயணச் செலவை $1.2 மில்லியனிலிருந்து $700,000 ஆகக் குறைத்தேன். வாரியக் கூட்டங்களுக்கு வாழ்க்கைத்துணைகள் வருவதையும் நிறுத்தினேன். பிறரிடம் சொல்வதை நாமும் செய்யவேண்டும். ஊழியர்கள் $3.5 மில்லியனைச் சேமித்துக் காட்டினர்."

சில முடிவுகள் கடினமானவை. ஆப்பிரிக்காவில் இருந்தபோது, அன்றைய அமெரிக்கத் துணை அதிபர் ஜோ பைடனைச் சந்திக்க சக ஆளுநர் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் அதற்காக அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டியிருந்ததால், சந்திப்பைத் தவிர்த்தார்.

பாண்டியா தயாராவதற்கு இன்னும் 18 மாதங்கள் இருப்பது நீண்டகாலமாகத் தோன்றினாலும், விரைவாகக் கடந்துவிடும் என்றார். போர், நோய், நிலநடுக்கம் அல்லது திட்டமிடாத நிகழ்ச்சிகள் இடையே வரலாம். பயணங்களும் தடைப்படலாம். கோவிட் காரணமாக ஹோல்கர் நாக் தனது தலைமை ஆண்டில் வீட்டைவிட்டே வெளியேற முடியவில்லை என்பதை நினைவூட்டினார்.



முன்னாள் RI தலைவர்கள் கல்யாண் பானர்ஜி, சேகர் மேத்தா, K R ரவீந்திரன், வானதி ஆகியோருடன் RI தலைவர் நியமனதாரர் டாக்டர் பரத் பாண்டியா, மாதவி.

எதிர்பாராத பிரச்னைகளையும் சமாளிக்க வேண்டியிருக்கும் என்றார். தனது நெருங்கிய நண்பரான முன்னாள் RI தலைவர் ஒருவர் ஊழியர்களுக்கு எதிராகப் பேசி, அவற்றைப் பரப்பியபோது, பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை. கடுமையாக எச்சரிக்க வேண்டியதாயிற்று. "அதன்பிறகு அவர் என்னுடன் பேசுவதை நிறுத்திவிட்டார்."

பாண்டியாவுக்கு ரவீந்திரன் சில அறிவுரைகளை வழங்கினார்:

- ஆண்டைத் திட்டமிடுங்கள்; திட்டமிடாத நிகழ்வுகளுக்கும் இடம்வையுங்கள்.
- நீங்கள் செய்து முடிக்கவும், உங்களை நினைவுகூரவும் விரும்பும் இரண்டு அல்லது மூன்று செயல்களை இப்போதே தீர்மானியுங்கள்.
- உங்களைச் சுற்றித் தலையசைப்பவர்கள் இருப்பார்கள். கருத்து வேறுபடுபவர்களைத் தேடிக் கேளுங்கள்; ஒருநாள் தவறான முடிவிலிருந்து அவர்கள் உங்களைக் காப்பாற்றலாம்.
- தலைமைப் பொறுப்பு தனிமையானது. உங்களிடம் பதவியோ பொறுப்போ எதிர் பார்க்காத பழைய நண்பர்களை நாடுங்கள்.

ரோட்டேரியர்களும் உதவ வேண்டும் என்றார். பொறுப்புகள் கேட்டு பாண்டியாவை நெருக்கடிக்குள்ளாக்காதீர்கள்; தேர்தல்களை முறையாக நடத்தி சிக்கல்களைக் குறையுங்கள்; TRF, உறுப்பினர் இலக்குகளை அடைய உதவுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

பாண்டியா உயர்ந்த பொறுப்பை அடைவதில் மாதவியின் ஆதரவுக்கும் பாராட்டு உரியது என்றார். "உங்களது அபார நினைவாற்றலாலோ சாதனைப் பட்டியலாலோ மட்டும் நீங்கள் சிறப்பாகச் செயல்படுவீர்கள் என்று நம்பவில்லை. நீங்கள் நல்ல, கனிவான மனிதர். அதுவே மிக முக்கியமான தகுதியாக இருக்கலாம்."

"2028 ஜூலை முதல் பரத், பரத்துக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. போரிவிலிக்குச் சொந்தமான அளவிற்கு நைஜீரியா, பிரேசில், ஜப்பான், ஜெர்மனி, ஸ்காண்டிநேவியா உள்ளிட்ட அனைவருக்கும் சொந்தமானவர். இந்தத் தலைவரை உலகிற்கு வழங்குவோம்" என்று நிறைவுசெய்தார்.

இந்தியத் தலைமைக்குக் கிடைத்த அங்கீகாரம்

PRIP கல்யாண் பானர்ஜி, இந்தியாவின் முதல் RI தலைவர் 1962-ல் வந்ததை நினைவூட்டினார். இரண்டாவது தலைவர் 30 ஆண்டுகளுக்குப் பிறகும், மூன்றாவது 18 ஆண்டுகளுக்குப் பிறகும், நான்காவது மேலும் 12 ஆண்டுகளுக்குப் பிறகும் வந்தனர். ஐந்தாவது தலைவருக்கான இடைவெளி எட்டு ஆண்டுகளாகக் குறைந்துள்ளது என்றார். இடையில் சுஷில் குப்தா இந்த வரிசையை மாற்றவிருந்தாலும், துரதிர்ஷ்டவசமாகப் பொறுப்பை நிறைவேற்ற முடியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்த இடைவெளி குறைவது, சிறந்த தலைமைக்கான ரோட்டரியின் தேடல் தெற்காசியாவிலும் குறிப்பாக இந்தியாவிலும் அதிகம் நிறைவேறுவதைக் காட்டுகிறது என்றார்.

"இந்தியாவிலிருந்து வரும் முதல் தலைவர் பரத் அல்ல. ஆனால் அவருக்கு ஒரு தனிச்சிறப்பு

உண்டு. முந்தைய இந்தியத் தலைவர்கள் ஏதோவொரு வகையில் கொல்கத்தாவுடன் தொடர்புடையவர்கள். மும்பையிலிருந்து வரும் முதல் தலைவர் இவர்தான்."

இருப்பினும், தேர்வில் முக்கியமானது ஊரல்ல; மனிதரின் பண்புகள்தான் என்றார். ஆழ்ந்த சிந்தனை, பரந்த அறிவு, எளிமையான தலைமை, பொறுமையாகக் கேட்கும் திறன், ஈர்க்கும் பேச்சாற்றல் ஆகியவற்றைப் பாராட்டினார்.

"அவர் எப்போதும் பகட்டையும் பிரமாண்டத்தையும் நாடுவதில்லை. உதவும் புன்னகையுடன் இருப்பவர். அவரது தலைமையில் நினைவுகூரத்தக்க மற்றொரு சிறந்த ரோட்டரி ஆண்டை எதிர்பார்க்கிறேன்."

PRIP சேகர் மேத்தா, பாண்டியாவின் நியமனம் அவருக்கு மட்டுமன்றி இந்திய ரோட்டரி இயக்கத்திற்கே பெருமை என்றார். "இது எதிர்பார்த்ததுதான். நீங்கள் முழுமையாகத் தகுதியானவர். RI தலைவருக்குத் தேவையான ஒவ்வொரு பண்பும் உங்களிடம் உள்ளது."

அமைதி, நிதானம், கண்ணியம், ஆழமான அறிவு, நினைவாற்றல், சிறந்த பேச்சுத்திறன் ஆகியவற்றுடன் பணிவும் எளிமையும் இணைந்திருப்பதே பாண்டியாவைச் சிறந்த தலைவராக்குகிறது என்றார்.

"இது மிகுந்த உற்சாகமளிக்கும் பொறுப்பு. சில நாட்டுத் தலைவர்களுக்குக்கூட இத்தகைய வாய்ப்பு கிடைப்பதில்லை. மூன்றாண்டுகளில் நீங்கள் செல்லவிருக்கும் நாடுகளும் பெறவிருக்கும் அன்பும் அபாரமானவை. உலகெங்குமுள்ள 14 லட்சம் பேரின் பிரதிநிதியாக இருப்பீர்கள்."

எழுத்தறிவின்மை, சுகாதாரம், வேலைவாய்ப்பு, குறிப்பாகப் பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளித்தல், குடிநீர், துப்புரவு என உலகத் தலைவர்கள் எதிர்கொள்ளும் பெரிய பிரச்னைகளில் ரோட்டரி பணியாற்றுகிறது என்றார்.

பாண்டியாவின் ஆண்டு வரலாற்றில் ஒளிரும் என்று நம்பிக்கை தெரிவித்தார். நீண்டகால உழைப்பிற்குப் பலனாக 14 லட்சம் பேரின் அன்பும் பாசமும் கிடைக்கும் என்றார்.

நமது மண்டலங்களின் தற்போதைய, வரவிருக்கும் RI இயக்குநர்கள், உறுப்பினர் எண்ணிக்கையை இரண்டு லட்சமாக உயர்த்தப் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். "சேவைத் திட்டங்களிலும் TRF பங்களிப்பிலும் நாம் சிறப்பாகச் செயல்படுகிறோம். நமது பகுதியிலிருந்து புதிய தலைவர் வருவதால் இன்னும் அற்புதங்களை நிகழ்த்தலாம்."

RI தலைவர் தேர்வாளர் லாரி லன்ஸ்ஃபோர்ட், TRF அறங்காவலர் தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், முன்னாள் RI தலைவர்கள் ராஜேந்திர சாபு, கார்டன் மெக்கினலி, ஸ்டெஃபனி அர்ச்சிக், பொதுச் செயலர் ஜான் ஹெவ்கோ ஆகியோரின் காணொலி, எழுத்துப்பூர்வ வாழ்த்துகள் பகிரப்பட்டன.

படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

போட்டியே இருக்கவில்லை



PRIDs *அனிருத்த ராய் சௌத்ரி, ராஜு சுப்ரமணியன்.*

பாண்டியாவைத் தேர்ந்தெடுத்த நியமனக் குழுவில் இடம்பெற்ற PRIDs அனிருத்த ராய் சௌத்ரி, ராஜு சுப்ரமணியன் ஆகியோர் தேர்வு நடைமுறையை விளக்கினர்.

RIயின் தொடர்புடைய பிரிவுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள், தகவல் பரிமாற்றங்கள் நடைபெற்றன. விண்ணப்பக் கடிதங்களை மதிப்பிடுவது குறித்து இணையவழி அறிமுகப்பயிற்சியும் வழங்கப் பட்டது.

"RIயின் தகவல் தொடர்பு, கட்டமைக்கப்பட்ட நிர்வாகம், ஜனநாயக உணர்வு ஆகியவற்றைப் பாராட்ட வேண்டும். பொதுச் செயலரின் இரண்டு அறிவுறுத்தல்கள் தெளிவாக நினைவிருக்கின்றன: ஒவ்வொரு விண்ணப்பதாரருடனும் மிகுந்த உணர்வுபூர்வமாகப் பழகுங்கள்; ஆறு பேரில் சிறந்த வரைத் தேர்ந்தெடுங்கள்," என்றார்.

தேர்வு செய்யும் தருணத்தில் பாண்டியாவே சிறந்தவர் என்பது தெளிவானதாகச் சுப்ரமணியன் கூறினார். "சிறந்த மனிதர்களுக்குள்ளேயே அவர் மிக உயர்ந்து நின்றார். மற்றவர்கள் ஈடாகவில்லை. பின்னர் இரவு உணவின்போது குழு உறுப்பினர் ஒருவர் சொன்னதுபோல், போட்டியே இருக்கவில்லை."



எர்த் டீடாக்ஸ்' அறிமுக நிகழ்ச்சியில் இடமிருந்து: PDGs *செல்லா ராகவேந்திரன்,* Y *குமணன்,* DG R S *மாருதி, மாவட்ட முன்னுரிமைகள் இயக்குநர்* A M *ராமகிருஷ்ணன்,* PDG *ராஜசேகர் ஸ்ரீனிவாசன், ராமநாராயணா,* RC *நெம்மாரா தலைவர் ராமதாஸ்.*

Rotary PEOPLE OF ACTION

பரமபதத்தில் ஒரு பசுமைப்பயணம்

ஜெயஸ்ரீ

பாம்பும் ஏணியும் கொண்ட பரமபத விளையாட்டு நினைவிருக்கிறதா? RC நெம்மாரா, RID 3206 உறுப்பினர் ராமகிருஷ்ணன், இந்தப் பழக்கமான விளையாட்டிற்குச் சுற்றுச்சூழல் பரிமாணம் கொடுத்துள்ளார். 'எர்த் டீடாக்ஸ்' என்ற இவ்விளையாட்டு, இயற்கைக்கு உகந்த நடத்தைக்குப் பரிசளிக்கிறது; சுற்றுச்சூழலைப் பாதிக்கும் செயல்களுக்குத் தண்டனை வழங்குகிறது.

"வீட்டிற்கு வெளியே குப்பையை வீசுகிறேன்" என்ற கட்டத்தில் நின்றால், பாம்பு வழியாக இரண்டு வரிசைகள் கீழிறங்கவேண்டும். "எனது சுற்றுப்புறத்தில் மரக்கன்றுகளை நடுகிறேன்" என்ற கட்டத்தில் நின்றால், ஏணி வழியாக ஒரு வரிசை மேலே செல்லலாம். மொத்தமுள்ள 100 கட்டங்களிலும் சுற்றுச்சூழலுக்கு நன்மை அல்லது தீமை விளைவிக்கும் செயல் குறித்த செய்தி உள்ளது. பகடையில் விழும் எண்ணுக்கேற்ப நகரும் வீரர்கள், அந்தச் செய்திகளின்படி ஏறுகிறார்கள் அல்லது இறங்குகிறார்கள்.

"பழக்கமான விளையாட்டைச் சுற்றுச்சூழல் கற்றல் அனுபவமாக மாற்றுவதே நோக்கம். பொறுப்பான நடத்தை ஏணியில் உயர்த்துகிறது; தீங்கான பழக்கங்கள் பாம்பு வழியாகக் கீழிறக்குகின்றன" என்கிறார் ராமகிருஷ்ணன். WASRAG தூதர், WINS தலைவர், மாவட்ட நதிப் பாதுகாப்புத் தலைவர் உள்ளிட்ட சுற்றுச்சூழல் பொறுப்புகளில் பல ஆண்டுகள் பணியாற்றியவர் இவர்.

ஒவ்வொரு ரோட்டேரியரும் பொறுப்பான சுற்றுச்சூழல் நடத்தையைப் புரிந்து பின்பற்ற வேண்டும் என்ற RID 3206 DG R S மாருதியின் தொலைநோக்கிலிருந்து இம்முயற்சி உருவானது.

"வழக்கமான பிரசாரத்தைத் தாண்டி, ரோட்டேரியர்கள், குடும்பத்தினர், சமூகத்தினர் பங்கேற்று, நினைவில் வைத்துச் செயல்படக்கூடிய ஒன்றாகச் செய்தியைக் கொண்டுசெல்வது சவாலாக இருந்தது. அதிலிருந்து தான் மகிழ்ச்சியான பங்கேற்பின் மூலம் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும் 'எர்த் டீடாக்ஸ்' பிறந்தது" என்கிறார்.

உறுப்பினர் கருத்தரங்கில் DG மாருதி அறிமுகப்படுத்திய விளையாட்டு, தற்போது PDF வடிவில் ரோட்டேரியர்கள், ரோட்டராக்டர்கள், இன்டராக்டர்கள், பள்ளிகள், குடியிருப்புச் சங்கங்கள், சமூகக் குழுக்களிடையே பகிரப் படுகிறது. பலகையைப் பதிவிறக்கி அச்சிட்டு, அட்டையில் ஒட்டினால் விளையாடத் தொடங்கலாம்.

"சுற்றுச்சூழல் அக்கறை குறித்த உரையாடல்களைத் தொடங்கி, மக்கள் விழிப்புணர்வுடன் செயல் படும் மனப்பாங்கை உருவாக்குவதே எண்ணம்" என்கிறார்.

மாவட்டம் முழுவதும் பள்ளிகளுக்கிடையிலான போட்டிகள் நடைபெறுகின்றன. வாராந்திரக் கூட்டங்களுக்குப் பிறகு சங்க உறுப்பினர்களும் விளையாடுகின்றனர். இதன்மூலம் எளிமையாகவும் ஆர்வமூட்டும் வகையிலும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது.■

RIPN பரத் பாண்டியாவுக்குப் பாராட்டு விழா





PRIP *கல்யாண் பானர்ஜியை வாழ்த்தும் RIPN பாண்டியா, மாதவி. அருகில்* PRIP *சேகர் மேத்தா,* RI *இயக்குநர்* K P *நாகேஷ்.*

வலது: RIPN *பாண்டியா, மாதவியை வரவேற்கும்* PRID *அனிருத்த ராய் சௌத்ரி, முன்னாள்* TRF *அறங்காவலர் குலாம் வஹான்வதி,* PRID *மகேஷ் கோட்பாகி, அமிதா, வானதி,* PRIP K R *ரவீந்திரன்,* RID *நாகேஷ்.*

தங்களின் புதிதாக நியமிக்கப்பட்ட உதவி யாளர்கள் PRID *ராஜு சுப்ரமணியன், வித்யா ஆகியோரை வாழ்த்தும்* RIPN *பரத் பாண்டியா, மாதவி.*
வலது: RIPN *பாண்டியாவும் மகள்* Dr *நிதியும்.*





PRIP ரவீந்திரன், வித்யா, வானதி ரவீந்திரன்.





மேலே வலது: PRID சுப்ரமணியனுடன் RIPN பாண்டியா.

கீழே: இடமிருந்து: அமன்தீப் செகோன், RID நாகேஷ், RIDE குர்ஜீத் சிங் செகோன்.







இடமிருந்து: PRIP பானர்ஜி, PRID P T பிரபாகர், மாதவி, RIPN பாண்டியா, PRIP ரவீந்திரன்.



வானதியும் PRIP ரவீந்திரனும்.



நயன்தாராவும் PRID அசோக் மகாஜனும்.



PRID பிரபாகர், முன்னாள் அறங்காவலர் வஹான்வதி,
PRID கோட்பாகி, அமிதா, PRID ராய் சௌத்ரி.



RIPN பாண்டியாவும் மாதவியும்.

கீழே: RID 3141 DG ராஜன் துவா (இடது),
RID 3142 DG நிலேஷ் ஜெய்வந்த்.



RIDE பாசு தேவ் கோல்யானும் அவரது மனைவி குமுத்தும்.



படங்கள்: ரஷீதா பகத், Rtn பிரகாஷ் படேல்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி.

ADVT.

For what's precious, choose a place built on trust

Sakthi LOCKERS
Since 1988



State-of-the-art security

Convenient working Hours
10:00 AM - 06:00 PM | Monday - Saturday

Unlimited number of free locker operations in a year

Simple documentation & Immediate locker allotment

SECURE YOUR JEWELLERY DOCUMENTS & VALUABLES

Limited large and extra large lockers available

Reserve your locker today
73977 30308

OUR BRANCHES IN CHENNAI

- Anna Nagar West - Opposite to Babu towers
- Besant Nagar - Opp to Annai Velankanni Church Bus Stop
- KK Nagar - Near Art interiors.
- T. Nagar - Near Hotel Quality Inn Sabari
- Mylapore - Near Mylai Medical Center
- Nanganallur - Near GRT Jewellery

Sakthi Vaults & Wealth Ltd.

Protect . Preserve . Prosper

கிளிமஞ்சாரோ சிகரத்தில் சென்னை அனெட்கள்

ஜெய்ஸ்ரீ

அதிகாலை இரண்டு மணி. மலையெங்கும் இருள்; உடலைத் துளைக்கும் குளிர்காற்று. சிகரத்தை அடைய இன்னும் பல மணிநேரம் நடக்கவேண்டும். சென்னை தி ஸ்கூல் KFI பள்ளியின் பத்தாம் வகுப்பு மாணவர் ஓவியத்திற்கும், 13–18 வயதுடைய மற்ற மூன்று அனெட்களுக்கும் கிளிமஞ்சாரோவின் இறுதிக்கட்ட ஏற்றம் தொடங்க விருந்தது. “ஏறுவது மிகவும் கடினமாகத் தோன்றியபோதெல்லாம், இன்னும் பத்தடி நட; பிறகு மேலும் பத்தடி என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்” என்கிறார் ஓவியம்.

2026 மே 14–18 பயணத்தில், ஆப்பிரிக்காவின் மிக உயரமான, 5,895 மீட்டர் உயரமுள்ள கிளிமஞ்சாரோ சிகரத்தை இக்குழுவினர் அடைந்தனர். ஓவியத்தின் தந்தையும் Rtn வித்யா ரகுவின் கணவருமான லட்சுமணன் கிரிஷ் உடன் சென்றார். அவருக்கு மலையேற்றத்தில் கணிசமான அனுபவம் உள்ளது.

2022-ல் எவரெஸ்ட் அடிவார முகாம் பயணத்தை முடித்திருந்த ஓவியம், அடுத்த மலையேற்றத்தைப் பற்றிக் குடும்பத்தினர் விவாதித்தபோது கிளிமஞ்சாரோவைப் பரிந்துரைத்தார். தந்தையும் ஒப்புக்கொண்டார். Rtn செந்தில் பழனிசாமியின் மகன்கள் தமிழ் இனியன் (18), தமிழ் இன்பன் (14), Rtns அஞ்சலி, பிரவீன் தம்பதியின் மகன் அயான் (13) ஆகியோரும் இணைந்தனர். இந்த ரோட்டேரியர்கள் அனைவரும் RC குளோபல் நெக்சஸ், RID 3234 உறுப்பினர்கள்.

பொதுத்தேர்வு நெருங்கியதால், படிப்புடன் பயிற்சியையும் சமாளிக்க வேண்டியிருந்தது ஓவியத்திற்கு. கோடை விடுமுறையில் உடற்பயிற்சிக் கூடத்திற்குத் தொடர்ந்து சென்று, தனிப்பயிற்சியாளரின் உதவியுடன் உடல்வலிமையையும் சகிப்புத்தன்மையையும் வளர்த்தார். பயணத்திற்கு ஒருவாரம் முன்பு, சிறுவர்களைக் கர்நாடகத்தின் கோகர்ணாவிற்கு அழைத்துச்சென்றார் கிரிஷ்.

“கடற்கரையில் ஓடுவதையும் சுற்றியுள்ள குன்றுகளில் ஏறுவதையும் மகிழ்ச்சியான செயல்பாடுகளாக்கினோம். எங்கள் சகிப்புத்தன்மையை அதிகரிக்க அவை உதவின” என்கிறார் ஓவியம்.

ஆனால், எதிர்பாராத சவால்கள் மலையில் காத்திருந்தன. சிகரத்தை அடையும் நாளில் பலத்த காற்று இருக்கும் என்று நினைத்திருந்தனர். முந்தைய நாட்களிலும் நிலைமை கடினமாகவே இருந்தது. பள்ளத்தாக்கைக் கடக்கும்போது, சுற்றியிருந்த சரிவுகளிலிருந்து வீசிய கடுங்காற்றால் நிலையாக நடக்க முடியவில்லை. பாறைகளுக்குப் பின்னால் தஞ்சமடைந்து, சற்றுத் தேறிய பிறகே தொடர்ந்தனர்.

பள்ளத்தாக்கில் மதிய உணவுக்காக நின்ற தருணத்தை ஓவியம் நினைவுகூர்கிறார். சூடான உருளைக்கிழங்கு, இறைச்சிக் குழம்பு பரிமாறப்பட்டது. “காற்றில் உணவு உடனடியாகக் குளிர்ந்துவிட்டது. இரண்டு கரண்டி மட்டுமே சாப்பிட முடிந்தது. பிறகு விட்டுவிட்டேன்” என்கிறார்.

மே 18 அன்று அதிகாலை இரண்டுமணிக்குப் புறப்பட்டனர். விடிந்து சிகரம் கண்ணுக்குத் தெரிவதற்குள் முடிந்தவரை முன்னேறிவிட எண்ணினர். “சிகரம் தெரியாதபோது நடந்துகொண்டே இருப்போம்; இறுதியில் சென்றடைந்து விடுவோம். பகலில் பார்க்கும்போது, அவ்வளவு உயரம் ஏறவேண்டுமே என்ற எண்ணமே சோர்வடையச் செய்யலாம்” என்கிறார் ஓவியம்.

சூரியன் உதித்த போது



இடமிருந்து: ஓவியம், தமிழ் இனியன், அயான், தமிழ் இன்பன்.

களைப்பு தொடங்கியது. ஒருமுறைக்குப் பத்தடிகள் என்பதில் ஓவியம் கவனம் செலுத்தினார். நண்பர்களும் ஒருவரையொருவர் ஊக்குவித்தனர். “ஒன்றாகவே இருந்தோம்; ஒருவருக்கொருவர் உதவினோம். வழிகாட்டிகள் ஒலிக்கவிட்ட தான்சானிய இசையும் உற்சாகமளித்தது.” பல அடுக்குகளில் ஆடைகள் அணிந்திருந்தாலும், கடுங்காற்று குளிரை மேலும் தீவிரமாக்கியது.

மெதுவாக, நிதானமாக போதிய தூக்கம், தேவையான உணவு, உடலில் நீர்ச்சத்தைப் பேணுதல் ஆகிய மூன்று அடிப்படை அறிவுறுத்தல்களை கிரிஷ் முன்பே வழங்கியிருந்தார்.

“இரவில் கைப்பேசியைப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. மறுநாள் நீண்ட நடைப்பயணத்திற்குத் தூக்கம் அவசியம். பிடித்த உணவைச் சாப்பிடுங்கள்; மாவுச்சத்துதான் ஆற்றலைத் தருகிறது. ஆனால் அளவுக்கு மீறிச் சாப்பிடாதீர்கள். தாகம் இல்லாவிட்டாலும் தினமும் இரண்டு முதல் மூன்று லிட்டர் தண்ணீர் குடியுங்கள் என்று கூறினேன்.”



கிளிமஞ்சாரோ மலையேற்றத்திற்குப் பிறகு வனவிலங்குச் சஃபாரியில் இன்பன், இனியன், ஓவியம், அயான்.



மலையில் அடிக்கடி கேட்கவிருக்கும் ‘போலே போலே’ என்ற சொற்றொடரையும் அறிமுகப்படுத்தினார். ஸ்வாஹிலி மொழியில் அதன் பொருள் ‘மெதுவாக, மெதுவாக’. “தொடக்கத்திலிருந்து இறுதிவரை அதே வேகத்தில்தான் சென்றோம். மூச்சைச் சீராக்கிக்கொள்ள அது உதவியது” என்கிறார்.

2016இல் இந்தியா முழுவதும் காரில் பயணித்தபோது கிரிஷுக்கு மலைகள்மீது ஆர்வம் ஏற்பட்டது. அதன்பிறகு இமயமலை, ரஷ்யாவின் காகசஸ் மலைகளில் நடந்துள்ளார். எவரெஸ்ட் அடிவார முகாமுக்கும் பலமுறை சென்றுள்ளார். அவரது மனைவி வித்யாவும் மலையேற்ற ஆர்வலர்.

“நான்கு வயதில் ஓவியத்தை முதன்முதலாக மலையேற்றத்திற்கு அழைத்துச்சென்றோம். உத்தராகண்டில் 10,000 அடி உயரம்வரை நடந்தான். கடினமான பகுதிகளில் தூக்கிச்செல்வதாகக் கூறியதையும் மறுத்துவிட்டான்” என்று புன்னகைக்கிறார்.

பழக்கமான சூழலுக்கு வெளியே கடினமான அனுபவத்தைச் சிறுவர்கள் எவ்வாறு எதிர்கொள்வார்கள்

என்பதை அறியவும் இப்பயணம் உதவியது. அவர்களின் சுயசார்பும் பொறுப்புணர்வும் கிரிஷை மகிழ்ச்சியுடன் ஆச்சரியப்படுத்தின.

“நான்கு சிறுவர்களைச் சமாளிப்பது கடினமாக இருக்கும் என்றார்கள். ஆனால் ஒருநிமிடம்கூட அவர்களை நிர்வகிக்க வேண்டியிருக்கவில்லை. உண்மையில் அவர்கள்தான் என்னை நன்றாகக் கவனித்துக்கொண்டார்கள்” என்கிறார்.

கடினமான வானிலையிலும் பாதையிலும் விடாமுயற்சியுடன் சென்ற அவர்களைப் பாராட்டுகிறார். “காற்று, வானிலை, நிலப்பரப்பு என எல்லாச் சவால்களையும் எதிர்கொள்ள அவர்கள் முன்வந்தது பாராட்டுக்குரியது. மலை நம்மைவிடப் பெரியது; வலிமையானது. பெரும்பாலோருக்குக் குறைந்த மலையேற்ற அனுபவமே இருந்தாலும், அவர்களது மனஉறுதியும் விடாமுயற்சியும் வியக்கவைத்தன.”

மலையேற்றத்திற்குப் பிறகு, இருநாட்கள் வனவிலங்குகளைக் காணச் சஃபாரி சென்றனர். ஒருவருக்குப் பயணச் செலவு $3,000. ஐந்து மலையேற்ற வீரர்களுக்கு உதவியாக 22 பணியாளர்கள் இருந்தனர். உணவு தயாரித்தல், சுமைகளை எடுத்துச்செல்லுதல், வழிகாட்டுதல் ஆகியவற்றைக் கவனித்தனர். “குழுவினரைக் கவனமாகத் தேர்ந்தெடுத்தேன். செலவைக் குறைப்பதற்காகத் தரத்தில் சமரசம் செய்து சிரமப்பட விரும்பவில்லை” என்கிறார் கிரிஷ்.



கிளிமஞ்சாரோ சிகரத்தில் சங்கக் கொடியுடன் அனெட்கள்.



மதிய உணவு இடைவேளையில் மலையேற்றக் குழுவினருடன் லட்சுமணன் கிரிஷ் (இடது).

ஓவியத்திற்கு இது “மறக்க முடியாத அனுபவம்”. அடுத்து ரஷ்யாவின் எல்ப்ரஸ் அல்லது ஆல்ப்ஸ் மலைத்தொடரிலுள்ள மோன்ட் பிளாங்க் சிகரத்தில் ஏற விரும்புகிறார்.

இறுதிக்கட்ட ஏற்றமே மிகவும் கடினமானது; அதற்கடுத்து கிபோவிற்குச் சென்ற பாதை என்கிறார் அயான். “ஓரிடத்தில் சாய்வு சுமார் 70 டிகிரி இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். அங்கே நடப்பது மிகவும் கடினமாக இருந்தது.” உடல்ரீதியாகச் சவாலானாலும், அனுபவம் அற்புதமானது என்கிறார்.

சிகரத்தில் RID 3234 கொடியை நாட்டி, ஆப்பிரிக்காவின் மிக உயரமான இடத்திற்கு அதைக் கொண்டுசென்றனர் இந்த இளைஞர்கள்.■

Rotary PEOPLE OF ACTION

சாதனைகளை உயர்த்திய RID 3262

V முத்துக்குமரன்

சமூகங்களில் மாற்றத்தை ஏற்படுத்திய சேவைத் திட்டங்களுக்காக, RID 3262 IPDG மனோஜ் குமார் திரிபாதிக்கு, புவனேஸ்வரில் ஒடிசா ஆளுநர் கம்பம்பாட்டி ஹரி பாபு 'டைம்ஸ் ஐகான்' விருது வழங்கினார். "ஒடிசாவின் 25 வருவாய் மாவட்டங்களிலுள்ள 120 சங்கங்களுக்கும் 4,000-க்கும் மேற்பட்ட ரோட்டேரியர்களுக்கும் பெருமையான தருணம்" என்கிறார் RC ஸ்ரீ ஜகந்நாத் தாம் உறுப்பினரான திரிபாதி.

மாவட்டத்தின் முதல் CSR திட்டம், உலக அமைதிக்கான கின்னஸ் மணற்சிற்பம், முதல் AKS உறுப்பினர், கிராமப்புறப் பெண்களுக்கு வீட்டுப் பயன்பாட்டுக் கருவிகள் வழங்கிய 'மதத்கார்' ஆகியவை அவரது பதவிக்காலச் சாதனைகள்.

ரூ.2.1 கோடியில் மூன்று GG திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன: புரியில் $50,000 மதிப்பிலான நோயறிதல் மையம், ரோட்டரி ஜலேஸ்வர் கண் மருத்துவமனைக்கு $65,000 திட்டம், பாலசோர் கண் மருத்துவமனைக்கு $48,000 மதிப்பிலான பாகோ கருவி. எத்தியோப்பியாவில் உணவு வழங்கும் கென்யா RID 9216 திட்டத்திற்கு DDF-லிருந்து $6,000 வழங்கப்பட்டது.

'மிஷன் சக்ஷயம்' மூலம் உறுப்பிழந்த 2,500 பேருக்கு மூன்றுசக்கர வண்டிகளும் செயற்கை உறுப்புகளும் வழங்கப்பட்டன. IOCL நிறுவனத்தின் $50,000 CSR நிதியில் பாலசோர் கண் மருத்துவமனைக்கு மேம்பட்ட உயிர்காப்பு ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டது.

புரி தயா நதியருகிலுள்ள கலிங்கப் போர் நினைவிடத்தில், 144x53 அடி சயன புத்தர் மணற்சிற்பம் உருவாக்கப்பட்டது. ஒருவாரத்தில் பத்து லட்சம் பார்வையாளர்களை ஈர்த்த, 'போர் வேண்டாம்; அமைதி வேண்டும்' என்ற செய்தியுடன் அமைந்த சிற்பம் கின்னஸ் சாதனை படைத்தது.

173 புதிய உறுப்பினர்களும் ஐந்து சங்கங்களும் சேர்க்கப்பட்டன. ரூ.12 கோடியில் 250–270 பெரிய சேவைத் திட்டங்கள் நடைபெற்றன.

TRF பங்களிப்பு $262,000. மாவட்டத்தின் முதல் AKS உறுப்பினருடன், 12 பெருங்கொடையாளர்கள், 565 பால் ஹாரிஸ் ஃபெலோக்கள், 31 பால் ஹாரிஸ் சொசைட்டி உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். தலா $25,000 மதிப்பிலான இரண்டு நிரந்தர நிதிகளையும் திரிபாதி நிறுவினார்.■



ஒடிசா அமைச்சர் கணேஷ் ராம் சிங் குன்டியா, தையல் இயந்திரங்கள், ஈரமாவு அரைப்பான்கள், சக்கர நாற்காலிகள், செவித் துணைக் கருவிகளை வழங்குகிறார். உடன் PDG மனோஜ் குமார் திரிபாதி (இடமிருந்து மூன்றாவது), அவரது மனைவி மதுஸ்மிதா.

இசையால் இணையும் ரோட்டேரியர்கள்

ரஷீதா பகத்

பல ரோட்டேரியர்களுக்கு இசை மீதுள்ள ஆர்வம், பாடல்களைக் கேட்டு ரசிப்பதையும் குளியலறையில் பாடுவதையும் தாண்டியது. "எங்களில் சிலர் பாடகர்கள். சிலர் இசை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்கள். ஆனால் பெரும்பாலோருக்குப் பிறர் முன்னிலையில் பாடுவதற்கான வாய்ப்போ மேடையோ கிடைப்பதில்லை. அவர்களுக்குத் தங்கள் திறமையை இசை ஆர்வலர் களுடன் பகிர்ந்துகொள்ளச் சிறந்த தளம், ரோட்டரி இசைக்கலைஞர்களின் சர்வதேச நட்புறவுக் குழுவான IFRM" என்கிறார் RC பெங்களூர் சவுத் பரேட், RID 3191 முன்னாள் தலைவர் ரவி சக்ரவர்த்தி.

ரோட்டரி சங்கங்களிலும் சமூகத்திலும் இசையின் பயன் பாட்டையும் ரசனையையும் ஊக்குவித்து, உலகப் புரிதலை வளர்ப்பதற்காக 1972-ல் அமெரிக்காவில் இக்குழு தொடங்கப் பட்டது. இந்தியாவில் முதன்முதலாக, பெங்களூரைச் சேர்ந்த ரோட்டேரியர் நாகேஷ் சித்தாந்தி, 2010-ல் RID 3190 மாவட்டத்தில் இதைத் தொடங்கினார்.

குழுப்பாடல்கள், இசை நிகழ்ச்சிகள், உலகெங்கும் இசைத் திட்டங்கள் மூலம் ரோட்டரியில் இசையின் பண்பாட்டு, கல்விப் பயன்பாட்டை விரிவுபடுத்துவதே IFRM உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளின் நோக்கம். ஆண்டு தோறும் RI தலைவரின் கருப்பொருள் பாடல்களைத் தயாரித்து வெளியிடு வதுடன், பல்வேறு ரோட்டரி நிகழ்ச்சி களில் இசை நிகழ்ச்சிகளையும் நடத்துகிறது.

பாடுதல், நடனம், இசைக்கருவி களை வாசித்தல், நேரடி இசைக்குழு நிகழ்ச்சிகள் ஆகியவை இதன் முக்கியச் செயல்பாடுகள். இசையை ரசிப்பவர்கள் முதல் மேடையில் நிகழ்த்துபவர்கள் வரை அனைவரையும் இணைக்கும் அமைப்பாக இது செயல்படுகிறது.

உலகத் தலைவர் பத்மநாபன் 'பேடி' ஐயர் கூறுகையில், "ரோட்டேரியர்கள், ரோட்டரி முன்னாள் திட்டப் பங்கேற்பாளர்கள், வாழ்க்கைத்துணைகள், நண்பர்கள் எனப் பலரையும் இசையின் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள IFRM ஒன்றிணைக்கிறது. புதிய ரோட்டரி பாடல் தொகுப்பை உருவாக்கிவருகிறோம். இணைய தளம், சமூக ஊடகங்கள் மூலம் ஆண்டு முழுவதும் தொடர்பிலிருக்கிறோம். 'IFRM Sings' என்ற Zoom இணையவழிப் பாடற்குழுவும் உள்ளது. 'ஸ்டக்காட்டோ', 'மியூசிக் நோட்ஸ்' செய்தி மடல்கள் மூலம்

இடமிருந்து: IFRM *வாபி கிளையின் பிராந்தியத் தலைவர்* PDG *கைலாஷ் ஜெதானி,* PRIP *கல்யாண் பானர்ஜி,* IFRM *உலகத் தலைவர் பத்மநாபன் ஐயர், வாபி* IFRM *செயலர் அமிஷா மேத்தா, தலைவர் ரூபால் தமானி,* RID 3060 DGN *வீபுல் படேல்.*





பெங்களூர் இசை நிகழ்ச்சியில் RID 3191 IFRM உறுப்பினர்களுடன், மண்டலம் 7 பிராந்திய ஒருங்கிணைப்பாளர் ரவி சக்ரவர்த்தி (நடுவில், கறுப்புச் சட்டை).

உறுப்பினர்களின் செயல்பாடுகளைப் பகிர்கிறோம்" என்கிறார்.

மூன்றாண்டு உறுப்பினர் கட்டணம் $35. உலகெங்கும் இசையை நேசிக்கும் ரோட்டேரியர்களைச் சந்தித்து நட்பை வளர்த்துக்கொள்ள இது வாய்ப்பளிப்பதாகச் சொல்கிறார் சக்ரவர்த்தி. 2020-ல் ரோட்டரியில் சேர்ந்த சில மாதங்களிலேயே IFRM-ல் இணைந்த அவர், தற்போது அதன் பிராந்திய ஒருங்கிணைப்பாளராக உள்ளார்.

"இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் ஏழெட்டு ஆண்டுகளில் பெரிய செயல்பாடுகள் இல்லை. RID 3190-க்கு வெளியே விரிவ டையவும் இல்லை. பின்னர் தானே நகரைச் சேர்ந்த பேடி ஐயர், இதை RID 3142-க்குக் கொண்டு சென்றார். IFRM இந்தியாவின் துணைத்தலைவராகி, விரிவாக்கத்தில் ஈடுபட்டார். நிர்வாக மறுசீரமைப்புகளுக்குப் பிறகு, இன்று இந்தியாவில் 54 கிளைகளும் சுமார் 1,800 உறுப்பினர்களும் உள்ளனர்" என்கிறார்.

உலகளவில் IFRM-ன் சுமார் 3,400 உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் இந்தியர்கள் என்பதே இங்கு அதன் வரவேற்பைக் காட்டுகிறது.



பாடுவதற்கு ஒரு மேடை

பெங்களூரில் 85க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். மாதந்தோறும் உணவகத்திலோ வேறொரு இடத்திலோ சந்திக்கிறார்கள். ஐந்தாறு மணிநேரம் இசை, பாடல்கள், உணவு, மகிழ்ச்சி எனப் பொழுது கழிகிறது.

பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெறும் சந்திப்புகளில் 40–45 பேர் பங்கேற்பார்கள். இந்தி மற்றும் தென்னிந்தியத் திரைப்படப் பாடல்களைப் பாடுவார்கள். வழக்கமாகக் கரோக்கே பின்னணி இசையுடன் பாடினாலும், ஆண்டிற்கு இருமுறை நேரடி இசைக்குழுவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

"அனைத்து உறுப்பினர்களுக்கும் மற்றவர்கள் முன்னிலையில் பாட வாய்ப்பளிப்பதே நோக்கம். நேரடி இசையுடன் பாடுவது தனி மகிழ்ச்சி. இசை என்ற பொதுவான ஆர்வத்தின்

மூலம் நாங்கள் இணையும் இடம் இது” என்கிறார் சக்ரவர்த்தி.

கர்நாடகத்தில் இருப்பதால் செவ்வியல் அல்லது கர்நாடக இசைக்கும் இடமுண்டா என்று கேட்டபோது, இந்தாண்டின் தொடக்கத்தில் செவ்வியல் இசைக்கெனப் புதிய கிளை தொடங்கப் பட்டுள்ளதாகக் கூறுகிறார். “ஆனால் அதில் பயிற்சிபெற்ற உறுப்பினர்கள் மிகச் சிலரே. எனவே, இப்போது அனைவரையும் செவ்வியல் இசை பாடுமாறு கேட்பதில்லை.”

பெங்களூர் கிளை, தொழில்முறைப் பாடகர்களின் இரண்டுமணிநேர இசை நிகழ்ச்சிகளையும் அவ்வப்போது நடத்துகிறது. சென்னையின் புகழ் பெற்ற டிசம்பர் இசைவிழாவிற்கு இன்னும் வரவில்லை. ஆனால் 2024 டிசம்பரில் லோனாவாலாவில் இருநாள் சுற்றுலாவை ஏற்பாடு செய்தனர். அனைத்து IFRM கிளைகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதில், சில கிளைகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

2026 ஜூனில் நடைபெற்ற தென்மண்டல ‘IFRM ஐடல்’ போட்டியில், தென்னிந்தியாவின் எட்டுக் கிளைகளிலிருந்து சுமார் 40 உறுப்பினர்கள் பங்கேற்றனர். பழைய RID 3190 பிரிந்து உருவான RID 3191, 3192 மாவட்டங்களில், கடந்த ஓராண்டில் ஆறு புதிய கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே இருந்த இரண்டையும் சேர்த்து இப்போது எட்டுக் கிளைகள் உள்ளன.

இந்தியாவின் 1,800 உறுப்பினர் களில் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதியினர் பெண்களாக இருக்கலாம் என சக்ரவர்த்தி மதிப்பிடுகிறார். அவர்கள் சந்திப்புகளில் ஆர்வமாகப் பங்கேற்பது மகிழ்ச்சியளிக்கிறது. “அவர்களை ஊக்குவிக்கிறோம். இருகுரல் பாடல்களுக்குப் பெண் பாடகர்களும் தேவைப்படுகிறார்களே!” என்கிறார்.

வாபியில் ‘சுர் மைத்ரி’

இந்தியாவின் அண்மைய IFRM கிளை, RID 3060 மாவட்டத்தின் வாபியில் 2026 ஆகஸ்டில் தொடங்கப்பட்டது. ‘சுர் மைத்ரி’ என்ற இக்கிளையை உருவாக்குவதில் DGN விபுல் படேலும், அதன் பிராந்தியத் தலைவராகப் பொறுப்பேற்கும் PDG கைலாஷ் ஜெதானியும் முக்கியப் பங்காற்றினர்.

75 உறுப்பினர்களைக் கொண்ட கிளையில், முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜியை வாழ்நாள் உறுப்பினராக வரவேற்றதில் மகிழ்ச்சியடைவதாகப் படேல் கூறினார். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை உறுப்பினர்கள் சந்திக்கத் திட்டமிட்டுள்ளனர்.

“எங்கள் மாவட்டம் மிகப் பெரியது. எனவே பல்வேறு பகுதிகளில்





ரோட்டரி மாநாட்டில் இசை நிகழ்ச்சி வழங்கும் IFRM உறுப்பினர்கள்.

நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளோம். பெரும்பாலான உறுப்பினர்கள் பங்கேற்று, இசை, நடனம், பாடல்களுடன் ஒரு மாலைப்பொழுதை அனுபவிக்க இது உதவும்" என்கிறார்.

அக்டோபர் 3 அன்று சூரத்தில் நடைபெற்ற கிளையின் முதல் நிகழ்ச்சியில், குஜராத்தின் துடிப்பான கர்பா பண்பாடு அறிமுகப்படுத்தப் பட்டது. அப்பகுதியின் பாரம்பரிய இசையும் நடனமும் நிகழ்ச்சியை வண்ணமயமாக்கின.

"வார்த்தைகள் தோற்கும் இடத்தில் இசை பேசுகிறது; இதயங்கள் பிரிந்திருக்கும் போது இசை இணைக்கிறது என்ற நம்பிக்கையே IFRM-ன் அடிப்படை. நாம் கொண்டாடுவது ஓர் அமைப்பை மட்டுமல்ல. இசை, நட்பு, நட்புறவு, உலகப் புரிதலுக்கான பொதுமொழியாக முடியும் என்ற அழகிய எண்ணத்தையும் கொண்டாடுகிறோம். 1972-ல் பிறந்த அந்த எண்ணம், ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக எல்லைகள், பண்பாடுகள், கண்டங்களைக் கடந்து ரோட்டேரியர்களையும் இசை ஆர்வலர்களையும் ஒன்றிணைத்துள்ளது" என்றார் படேல்.

IFRM-ல் சேர தொழில்முறை இசைக்கலைஞராக இருக்க வேண்டிய தில்லை; இசையை நேசித்தால் போதும் என்பதே அதன் உண்மையான சிறப்பு என்கிறார் ஜெதானி.

தொடக்கவிழாவில் பங்கேற்ற பேடி ஐயர், "அழகாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி, மகிழ்ச்சியும் நட்புறவும் அற்புதமான இசையும் நிறைந்ததாக இருந்தது. சிறந்த நிகழ்ச்சிகளும் மனதைத் தொட்ட பாடல்களும் அந்த மாலையை மறக்க முடியாததாக்கின" என்றார்.■

பெங்களூரில் புற்றுநோய் விழிப்புணர்வு ஓட்டம்

ரோட்டரி நியூஸ் குழு

காந்தி ஜெயந்தியன்று RC பெங்களூரு ஜாலஹள்ளி, RID 3192 நடத்திய ஆறாவது புற்று நோய் விழிப்புணர்வு 5K அமைதி ஓட்டத்தில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இந்தியப் புற்றுநோய் சங்கம், செயின்ட் கிளாரெட் கல்லூரி, அதன் ரோட்டராக்டர்கள் இணைந்தனர். DG ரவிசங்கர் டாகோஜு, DGN ரேணுகேஷ்வரசுவாமி S R தொடங்கி வைத்தனர்.



அமைதி ஓட்டத்தைத் தொடங்கி வைக்கும் RID 3192 DG ரவிசங்கர் டாகோஜு (வலமிருந்து மூன்றாவது).

முதல்வர் தாமஸ் தென்னாடியில், டாக்டர் S பவித்ரா, சங்கத் தலைவர் நீல் ராஜன் பங்கேற்றனர். தேசிய நீச்சல் வீராங்கனை சித்ரா, உலக பென்டத்லான் வெள்ளிப் பதக்க வீரர் தைர்யா நவீன் கௌரவிக்கப் பட்டனர்.

Rotary PEOPLE OF ACTION

சேவையால் சிறக்கும் வெள்ளிவிழா

ரஷ்தா பகத்



சேவையில் புதுமைகளைப் புகுத்துவதில் சிறந்த வரலாறு கொண்டது மும்பையின் RC பாம்பே பே வியூ, RID 3141. நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இச்சங்கம், தனது வெள்ளிவிழா ஆண்டை 'பேவியூ அக்கறை கொள்கிறது' என்ற எளிய, ஈர்ப்பான கருப்பொருளுடன் கொண்டாடுகிறது. குறிப்பிடத்தக்க பல சமூகநலத் திட்டங்களை மேற்கொண்டுள்ள சங்கம், இந்தச் சிறப்பாண்டின் பன்னிரண்டு மாதங்களையும் சேவையால் நிரப்பத் திட்டமிட்டுள்ளது.

உறுப்பினர்கள் தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடும் போது, சங்கத்தின் சமூகநல முயற்சிக்காக ரூ.2,500 வழங்கலாம் என்று தலைமைக் குழு கேட்டுக்கொண்டுள்ளது. பிறந்த நாள் விருந்தில் இன்னொருவருக்கு ஓர் இடம் ஒதுக்குவதாக நினைத்துக்கொள்ளுங்கள் என்பதே இதன் எளிய தத்துவம். இந்தச் சிறிய பங்களிப்பு, வெள்ளி விழாவிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 சேவைச் செயல்பாடுகளுக்குத் தேவையான பொருள்கள், உதவித் தொகுப்புகள், மக்களைச் சென்றடையும் நிகழ்ச்சிகளுக்குப் பயன்படும்.

இத்திட்டத்தை வடிவமைத்த முன்னாள் தலைவரும் தற்போதைய மக்கள் தொடர்பு இயக்குநருமான ராக்கி குப்தா கூறுகிறார்: "வெள்ளி விழா என்பது 25 ஆண்டுகாலச் சேவையைக் கொண்டாடுவதுடன் நின்றுவிடக் கூடாது. உறுப்பினர்கள் ரோட்டரியை அனுபவிக்கும் விதத்திற்குப் புதிய பரிமாணம் அளிக்கும் வாய்ப்பாக அமையவேண்டும் என்று விரும்பினோம்."

தேசிய, சர்வதேச முக்கிய தினங்களில் மேற் கொள்ளப்படும் இந்த 25 செயல்பாடுகள் மூலம், 'இன்று சிறியதாக இருந்தாலும் ஒரு நல்ல செயலைச் செய்யுங்கள்; அது உங்களுக்குள் ஏற்படுத்தும் ஆழமான மாற்றத்தைக் கவனியுங்கள்' என்ற எண்ணத்தை உறுப்பினர்களிடம் வலுப்படுத்த விரும்புகின்றனர்.

அந்த நல்ல செயல் பல வடிவங்களில் இருக்கலாம்: சேவை நிறுவனங்களுக்குச் செல்லுதல், மக்களுடன் கலந்துரையாடுதல், உதவி தொகுப்பு களைத்தயாரித்தல், கையால் வாழ்த்துச் செய்திகள் உருவாக்குதல், இளைஞர்களுடன் தொழில்முறை அறிவைப் பகிர்தல் அல்லது நேரடிச் சேவையில் பங்கேற்றல். ஒவ்வொன்றும் மதிப்புமிக்க அனுபவமாக அமையும்.

மருத்துவர்கள் முதல் கடற்படையினர் வரை

தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி, சங்க உறுப்பினர்கள் காமா அண்ட் ஆல்ப்லெஸ் மருத்துவ மனைக்குச் சென்றனர். மருத்துவர்கள், MBBS மாணவர்கள், பயிற்சி மருத்துவர்கள், ஆசிரியர்களுடன் கலந்துரையாடி, "வெள்ளை அங்கிக்குப் பின்னாலுள்ள பரிவைக் கொண்டாடினர்."

உலக மக்கள்தொகை தினத்தில், ஸ்திரீ மண்டல்,

காஷ்மீர் குப்வாராவின் மச்சல் பள்ளத்தாக்குச் சிற்றூரில் சூரியசக்தித் தெருவிளக்கு.

நவஜீவன் மையம் ஆகியவற்றில் ஆதரவு தேவைப்படும் பெண்கள், குழந்தைகளுக்காக இரண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. குடைகள், பள்ளிப்பைகள், எழுதுபொருள்கள், நலவாழ்வுத் தொகுப்புகள் வழங்கப் பட்டன. குழந்தைகளுடன் உரையாடியும் கொண்டாடியும் ஓர் இனிய மதியப்பொழுதைக் கழித்தனர்.

சுதந்திர தினத்தில் 'கடலுக்கு ஒரு வணக்கம்' நிகழ்ச்சியில், 50 உறுப்பினர்களுக்குக் கடற்படைத் தலைமையகத்திற்குச் சென்று INS சென்னை போர்க்கப்பலில் ஏறும் அரிய வாய்ப்பு கிடைத்தது. இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு குறித்து கடற்படையினர் விளக்கினர்.

"எனது கணவரின் நண்பரான வைஸ் அட்மிரல் ராகுல் விலாஸ் கோகலே அங்கிருந்தார். கப்பல் முழுவதையும் பார்வையிட்டு, வீரர் களுடன் கலந்துரையாட அருமையான ஏற்பாடுகளைச் செய்தார். ஆனால் லெப்டினன்ட் கமாண்டர் தில்னாவைச் சந்தித்ததே மிகச் சிறப்பான அனுபவம்" என்கிறார் ராக்கி.

268 நாட்களில் உலகைச் சுற்றிவந்த தனது கடற்பயண அனுபவங்களைத் தில்னா பகிர்ந்து கொண்டார். "அவரது பயணத்தைக் கேட்டபோது துணிச்சலுக்கு வணக்கம் செலுத்தினோம். எங்கள் ஐம்பது



கானன் மற்றும் ரஜ்னி ஒரு பெண்ணுக்கு குடை அளிக்கின்றனர்.



ராணுவ முகாமின் உடற்பயிற்சி மையத்தில் 'பேவியூ கேர்ஸ்' தலைவர் ராக்கி மேத்தா, கானன் நஹேதா, ஜெயேஷ் விதானி, சங்கத் தலைவர் பிரணித் நஹேதா, 'ஜெய் ஜவான்' திட்டத் தலைவர் விமல் ஷா, பவன் பராசியா, ரஜ்னி பராசியா, இளைஞர் சேவை இயக்குநர் நம்ரதா பாரிக்.





அமைதியை மையமாகக் கொண்ட ஓவியப் போட்டியில் மாணவர்கள்.



குப்வாராவில் வீரர்களுடன் ரக்ஷா பந்தன் கொண்டாட்டம்.

இடது: நவஜீவன் மையக் குழந்தைகளுடன் சங்க உறுப்பினர்கள்.

பேருக்கும் அந்தச் சந்திப்பு பெரும் ஊக்கமளித்தது.”

செப்டம்பரில் சர்வதேச அமைதி தினத்தையொட்டி, ஏழு பள்ளிகளைச் சேர்ந்த 1,500 மாணவர்கள் ஓவியங்கள் மூலம் அமைதியின் பொருளை ஆராய்ந்தனர். ‘அமைதியை வரைவோம்’ நிகழ்ச்சி, ஐந்து முதல் எட்டாம் வகுப்பு மாணவர்களை அன்றாட வாழ்வில் அமைதி என்றால் என்ன என்று சிந்திக்கச் செய்தது. அன்பு, நட்பு, அனைவரையும் உள்ளடக்குதல், பாதுகாப்பு, நல்லிணக்கம், ஒற்றுமை, நம்பிக்கை ஆகிய கருத்துகள் ஓவியங்களில் வெளிப்பட்டன.

“ஒவ்வொரு இளம் ஓவியரும் தனித்துவமான பார்வையைக் கொண்டுவந்தார். ஒரு சாதாரணக் காகிதம், அவர்கள் வாழ விரும்பும் உலகின் வெளிப்பாடாக மாறியது” என்கிறார் சங்கத் தலைவர் பிரணித் நஹேதா.

அக்டோபர் 1 சர்வதேச முதியோர் தினத்தில், லோயர் பரேலிலுள்ள கிங் ஜார்ஜ் நினைவகத்தின் முதியவர்களுக்கும் நோய்த்தணிப்புப் பராமரிப்பிலிருந்தவர்களுக்கும் இசை,

சிரிப்பு, தோழமையை வழங்கினர். ‘மெலடீஸ் அண்ட் மொமென்ட்ஸ்’ என்ற இசை-நடன மாலையை, ரோட்டரி இசைக்கலைஞர்களின் சர்வதேச நட்புறவுக் குழுவான IFRM-ன் தெற்கு மும்பைக் கிளை நேரடி இசையால் உயிர்ப்பித்தது.

“முதியவர்கள் இணைந்து பாடினர், நடனமாடினர், கலைஞர்களுடன் உரையாடினர். ஒவ்வொரு இசைத் துளியையும் கொண்டாடி, இயல்பான மகிழ்ச்சியையும் நெருக்கத்தையும் உருவாக்கினர்” என்கிறார் ராக்கி. பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டு, சிறப்பு உணவும் ஏற்பாடு செய்யப் பட்டது. மளிகைப் பொருள்கள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், அத்தியாவசியப் பொருள்களும் வழங்கப்பட்டன.

எல்லையில் ஒளியும் அன்பும்

ரோட்டேரியர்களின் மனதில் ஆழமாகப் பதிந்த முயற்சி, ஜம்மு-காஷ்மீரில் பணியாற்றும் 1,200 ராணுவ வீரர்களுக்கு ராக்கிகள் வழங்கிய ‘மேரா வீர் பாய்’ திட்டமாக இருக்கலாம்.

“கரடுமுரடான மலைகள், கடுமையான குளிர், தனிமை ஆகியவை காஷ்மீர் எல்லைக் கட்டுப் பாட்டுக் கோட்டுப் பகுதியின் அன்றாட வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. எல்லையைக் காக்கும் வீரர்களுக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் சிறிதளவு ஒளிகூடப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று உணர்ந்தோம்” என்கிறார் ராக்கி.

‘ஜெய் ஜவான்’ உறுதிப்பாட்டைச் செயலாக்க, ராக்கி, சங்கத் தலைவர் உள்ளிட்ட எட்டு உறுப்பினர்கள் குப்வாராவின் தொலைதூர மச்சல் பள்ளத்தாக்கிற்குச் சென்றனர். கிராமங்களில் தெருவிளக்குகள் நிறுவுதல், வீரர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் மறுவாழ்வு மையம் அமைத்தல், ரக்ஷா பந்தன் மூலம் 1,200 பெண்களையும் 1,200 வீரர்களையும் அன்பால் இணைத்தல் ஆகிய மூன்று பணிகளை மேற்கொண்டனர்.

உறுப்பினர் விமல் ஷா தலைமையிலான ‘உஜாலா’ திட்டத்தில், எல்லையோர வீரர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் உதவ 120 சூரியசக்தித் தெருவிளக்குகள் நிறுவப்பட்டன. மச்சல் பள்ளத்தாக்கின் 15 சிற்றூர்களில் சுமார் 25,000 மக்கள் பயன்பெறும் இத்திட்டத்தின் செலவு ரூ.7.56 லட்சம். நேரில் சென்ற எட்டு உறுப்பினர்கள் முன்னிலையில், புஷ்வாரி கிராமத்தில் முதல் பத்து விளக்குகள் தொடங்கிவைக்கப்பட்டன.

“இத்தகைய பகுதிகளில் இருள் வெறும் அசௌகரியம் அல்ல. செங்குத்தான பாதைகளிலும் குறைந்த வெளிச்சத்திலும், சூரியன்



மறைந்தபிறகு அவசியமான நடமாட்டம்கூடச் சிரமமாகவும் பாதுகாப்பற்றதாகவும் இருக்கும். இந்த விளக்குகள் நம்பகமான வெளிச்சத்தை வழங்கி, பாதுகாப்பு, நடமாட்ட வசதி, தன்னம்பிக்கையை மேம்படுத்தும்" என்கிறார் நஹேதா.

கிராம மக்கள் தூய்மையைப் பேணவும் 'தூய்மை இந்தியா' நெறிகளைப் பின்பற்றவும் இவை ஊக்கமளிக்கும் என்று உறுப்பினர்கள் நம்புகின்றனர். "திறப்புவிழா சமூகக் கொண்டாட்டமானது. கிராமவாசிகள், குழந்தைகள், உள்ளூர் மௌலவி, பஞ்சாயத்துத் தலைவர் காட்டிய அன்பு, இந்த எளிய முயற்சி அவர்களை எவ்வளவு ஆழமாகத் தொட்டுள்ளது என்பதை உணர்த்தியது" என்கிறார் ராக்கி.

மச்சல் பள்ளத்தாக்கில் உடற்பயிற்சி மற்றும் மறுவாழ்வு மையத்திற்கு ரூ.8.73 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. கைத் தசைப் பயிற்சிக் கருவி, படியேறும் பயிற்சிக் கருவி, துடுப்பு வலிக்கும் பயிற்சி அமைப்பு, ஒலிம்பிக் எடைத் தண்டுகள், கிராஸ் டிரெய்னர் உள்ளிட்ட பல்வேறு கருவிகள் உள்ளன. சுமார் 300 வீரர்கள் உடற் தகுதியைப் பேணவும் காயத்திற்குப் பிறகு மீளவும் தனிப்பட்ட இடம் கிடைத்துள்ளது.

பதில் வந்த அஞ்சலட்டைகள்

வீரர்களை மிகவும் நெகிழச் செய்தது, 1,200 பேருக்காகக் கையால் செய்யப்பட்ட ராக்கிகள். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் கடிதங்களுடன் ராக்கிகள் வருவது வழக்கம்தான் என்றனர் வீரர்கள். ஆனால் இம்முறை ஒவ்வொரு ராக்கியுடனும் கடிதம் மட்டுமன்றி, பதில் முகவரி எழுதப்பட்ட, அஞ்சல் கட்டணம் செலுத்தப்பட்ட அட்டையும் இருந்தது. தங்கள் 'ராக்கி சகோதரிகளுக்கு' நன்றி தெரிவிக்க அது உதவியது.

சிறப்பு நிகழ்ச்சியில் சுமார் நூறு வீரர்களுக்கு ரோட்டேரியர்கள் ராக்கி கட்டினர்; மற்றவற்றை ஒப்படைத்தனர். "இந்தக் கடினமான பகுதியில் நீங்கள் தனியாக இல்லை; 1,200 பெண்கள் உங்களை நினைக்கிறார்கள், உங்களுடன் நிற்கிறார்கள், நாட்டைக் காப்பதற்காக வணங்குகிறார்கள் என்பதை உணர்த்த விரும்பினோம். பதில் எழுதுவதாக வீரர்கள் உறுதியளித்தனர். எழுதவும் செய்தனர்."


இந்தி, மராத்தி, ஆங்கிலத்தில் அன்பையும் நன்றியையும் வெளிப்படுத்திய கையெழுத்து அஞ்சலட்டைகள், காஷ்மீரிலிருந்து மும்பை வந்துசேர்ந்தன. ராக்கி அனுப்பிய பெண்களிடம் அவை வழங்கப்பட்டன.

"மீண்டும் சந்திக்க வாய்ப்பில்லாத ஒரு வீரச் சகோதரனுடனான உறவின்



இடமிருந்து: மச்சல் பள்ளத்தாக்கில் வீரர்களுடன் ரக்ஷா பந்தன் கொண்டாடும் ராக்கி மேத்தா, கானன் நஹேதா, ரஜ்னி பராசியா, நம்ரதா பாரிக்.

‘கடலுக்கு ஒரு வணக்கம்’ நிகழ்ச்சியில் INS சென்னை கப்பலில் சங்க உறுப்பினர்கள்.



ராக்கி சகோதரிகளுக்கு நன்றி தெரிவித்து வீரர்கள் அனுப்பிய அஞ்சலட்டைகள்.

அடையாளமாக, பலர் அவற்றைப் பொக்கிஷமாகப் பாதுகாக்கிறார்கள். சிலர் சட்டமிட்டும் வைத்துள்ளனர்” என்கிறார் திட்டத்தை வடிவமைத்த ராக்கி.

“மச்சல் பள்ளத்தாக்குப் பயணம், திட்டங்களை வழங்குவதற்காக மட்டுமல்ல. சவால்மிக்க பகுதியில் வாழும் மக்களையும் வீரர்களையும் புரிந்துகொண்டு, அர்த்தமுள்ள, நிலையான, இதயபூர்வமான சேவையால் பதிலளிப்பதற்காகவும் அமைந்தது” என்கிறார் நஹேதா.

“மலைக்கிராமத்தில் ஒளிரும் சூரிய விளக்காகட்டும், ராக்கியைப் பெற்ற வீரரின் புன்னகையாகட்டும், செய்தி ஒன்றுதான்: நாட்டிற்காகக் காவல்நிற்பவர்கள், நாடும் தங்களுக்குத் துணைநிற்கிறது என்பதை அறியவேண்டும்.”■

உயிரியல் பாடத்திற்கு உயிரூட்டிய முகாம்

ஜெய்ஸ்ரீ

நாசிக் ஆதர்ஷ் வித்யா மந்திர் பள்ளியின் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் 25 பேருக்கு, 'பயோ டிஸ்கவர்' முகாம் உயிரியல் பாடத்தைப் புத்தகங்களுக்கு அப்பால் கொண்டு சென்றது. விதைகளையும் கருக்களையும் ஆராய்ந்தனர்; நுண்ணோக்கியில் நுண்ணுயிர்களைக் கண்டனர்; பல கோடி ஆண்டுகள் பழமையான புதைபடிவங்களைக் கையாண்டனர்; மனித உடற்கூறியல் மாதிரிகளைப் பார்த்தறிந்தனர். RC நாசிக் வெஸ்ட், RID 3030, ஆச்சார்யா கிளாஸஸ் நிறுவனத்துடன் இணைந்து இந்தச் செய்முறை அமர்வுகளை நடத்தியது. ஐம்பதாண்டுக் கற்பித்தல் அனுபவமுள்ள உயிரியல் பேராசிரியர் S L ஆச்சார்யா வழிகாட்டினார்.

விதைகளும் முளைத்தலும் பற்றிய அமர்வு சிறப்பம்சமாக அமைந்தது. "ஒரே விதைக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட கருக்கள் உருவாகும் பல்கருத் தன்மையுடைய நாவல் செடிக்கன்றைப் பார்த்தது அவர்களுக்கு வியப்பளித்தது. முற்றிலும் புதிய கண்டுபிடிப்பாக இருந்தது" என்கிறார் திட்டத் தலைவர் உதய் கேட்கர்.

பூஞ்சைகள், பாக்டீரியாக்கள், ஈஸ்ட், பாரமீசியம் மாதிரிகளைப் பார்வையிட்டதுடன், நுண்ணோக்கியைப் பயன்படுத்தவும் மாணவர்கள் கற்றனர். நுண்ணுயிர் வளர்ப்பு ஊடகங்கள், பாக்டீரியாக் கூட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. நீர்வழி நோய்கள் பரவும் விதத்தையும், நீர் மாதிரிகளில் மாசுபாடு இருக்கிறதா என்பதைக் கண்டறியும் பரிசோதனைக் கருவிகளின் பயன்பாட்டையும் அறிந்தனர்.

உலகின் பல பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட புதைபடிவங்களை மாணவர்கள் தொட்டு ஆராய்ந்தனர். சில புதைபடிவங்கள் சுமார் 30 கோடி ஆண்டுகள் பழமையானவை எனக் கருதப்படுகின்றன.

எலும்புகள், எலும்புக்கூடுகள் மூலம் மனித உடலமைப்பு விளக்கப்பட்டது. ஆட்டின் கண்கள், இதயம், மூளை, சிறுநீரகங்கள் உள்ளிட்ட உறுப்பு மாதிரிகளையும் பார்த்தனர். பித்தப்பைக் கற்கள், காற்றுப்பைகள், புற்றுநோயற்ற கட்டி, மனித இனப்பெருக்க உறுப்புகளின் மாதிரிகள் ஆகியவை உயிரியல் கட்டமைப்புகளை நெருக்கமாக அறிய உதவின.

சமச்சீர் உணவின் அவசியம், ஆரோக்கியமற்ற உணவுகளை அளவுக்கு அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமைகள் குறித்த அமர்வுகளும் இடம் பெற்றன. ஓய்வு பெற்ற நுண்ணுயிரியல் பேராசிரியர் ஸ்மிதா கேட்கர், நாசிக்கின் அறிவியல் கல்வி நிறுவனமான இன்சைட் சயின்ஸ் சென்டரின் இணை நிறுவனர் கௌஸ்துப் சுனில் ஹிரே ஆகியோரும் பயிற்சியளித்தனர்.

ஒவ்வொரு மாணவரும் மாதிரிகளைக் கையாண்டு, அறிவியல் கருத்துகளை நேரடியாக ஆராய முடிந்ததே முகாமின் முக்கியப் பயன் என்கிறார் உதய் கேட்கர்.

"பள்ளிகளில் நுண்ணோக்கிகளும் பிற கருவிகளும் குறைவாக இருக்கலாம். எனவே எல்லாக் குழந்தைகளுக்கும் அவற்றைப் பயன்படுத்த வாய்ப்பு கிடைப்ப தில்லை. பெரும்பாலும் ஆசிரியர் செயல்விளக்கம் அளிப்பார்; மாணவர்கள் பார்ப்பார்கள். தாங்களே தொட்டுணர்ந்து கற்கும் அனுபவம் கிடைப்பதில்லை. அந்த அனுபவம்தான் பாடத்தை நன்றாகப் புரிந்துகொள்ளவும் அதில் ஆர்வம் வளரவும் உதவுகிறது."

மாணவர்களின் வரவேற்பு, முயற்சியை விரிவுபடுத்த ஏற்பாட்டாளர்களை ஊக்குவித்துள்ளது. பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும் இதேபோன்ற நிகழ்ச்சியை நடத்துமாறு பள்ளி முதல்வர் கேட்டுள்ளார். சுமார் 100 மாணவர்கள் கொண்ட பெரிய குழுவிற்கு இடமளிக்கக்கூடிய பள்ளியின் உயிரியல் ஆய்வகத்தில் நிகழ்ச்சியை நடத்தத் தயாராகிறார்கள்.

மாணவர்கள் செய்முறைகளில் பங்கேற்க வசதியாக நுண்ணோக்கிகள், புதைபடிவங்கள், எலும்புத் தொகுப்புகளைப் பள்ளிக்குக் கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளனர்.■



பயோ டிஸ்கவர் முகாமில் பள்ளி மாணவர்களுக்கு உயிரியல் கற்பிக்கும் பேராசிரியர் S L ஆச்சார்யா.

ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

மத்தியப் பிரதேசத்தில் மாபெரும் ராஹத் முகாம்

பல நிறுவனங்களின் நிதிசார் பணிகளைக் கவனிக்கும் பிரிஜ் அகர்வால், “உலகிலேயே மிகவும் வெளிப்படையான, நம்பகமான அறக்கட்டளை ரோட்டரியுடையது. சமூகங்களுக்குச் சேவையாற்ற இதுவே சிறந்த அமைப்பு” என்கிறார்.

தனது பதவிக்காலத்தில் 4–5 புதிய சங்கங்களைத் தொடங்கி, நிகர உறுப்பினர் எண்ணிக்கையில் பத்து சதவீத வளர்ச்சியை அடையத் திட்டமிட்டுள்ளார். ஜூன் 30-க்குள் மாவட்டத்தில் 85 சங்கங்களும் சுமார் 3,800 ரோட்டேரியர்களும் இருப்பது இலக்கு.

ஜோத்பூர் மதுரா தாஸ் மாத்தூர் மருத்துவமனையின் இதயவியல் பிரிவுக்கு $35,000 GG திட்டத்தில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆல்வார், ஜோத்பூரின் வறண்ட கிராமங்களில் பாசனம், குடிநீர்த் தேவைகளுக்காக $50,000 GG நிதியில் 8–10 தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. கர்ப்பப்பை வாய்ப் புற்று நோயைத் தடுக்க ரூ.25 லட்சம் CSR நிதியில், 10–12 முகாம்கள் மூலம் 5,000 பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு HPV தடுப்பூசி வழங்கப்படுகிறது.

மாவட்டத்தின் முக்கியமான ‘ராஹத்’ திட்டத்தில், 2027 பிப்ரவரி-மார்ச்சில் மத்தியப் பிரதேசத்தின் மொரேனா அல்லது சிவபுரியில் ஒருவார மருத்துவ முகாம் நடைபெறும். “அதற்கு முன் இரு மாதங்கள் கிராமங்களுக்குச் சென்று, குறைந்தது 250 முதற்கட்டப் பரிசோதனைகளை நடத்தி, நோயாளிகளின் மருத்துவ விவரங்களைப் பதிவுசெய்வோம்” என்கிறார்.

மத்தியப் பிரதேச அரசும் RID 3060 மாவட்டமும் முகாமுக்குப் பங்களிக்கின்றன. மருத்துவர்கள், உபகரணங்கள், தன்னார்வலர்களையும் RID 3060 வழங்குகிறது. ரூ.40 லட்சம் செலவில் சுமார் 3,500 அறுவைச் சிகிச்சைகளும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட புறநோயாளர் பரிசோதனைகளும் நடத்தப்படவுள்ளன.

1998 டிசம்பரில் ரோட்டரியில் இணைந்த அகர்வாலின் TRF நிதி இலக்கு $300,000.



பிரிஜ் மோகன் அகர்வால்
பட்டயக் கணக்காளர்
RC பிவாடி, RID 3053

பீதரில் ரோட்டரி ரத்த வங்கி



P கேசவ் ரெட்டி
பெட்ரோலியப் பொருள் சில்லறை வணிகம்
RC அனந்தபூர் சென்ட்ரல்
RID 3160

“2002-ல் ரோட்டரியில் இணைந்ததிலிருந்து என் வாழ்க்கையே மாறிவிட்டது. ஒவ்வொரு சேவைத் திட்டமும் நட்புறவு நிகழ்ச்சியும், கூட்டுமுயற்சியால் நாம் தொடும் ஒவ்வொரு வாழ்க்கையும் சமூகங்களை மாற்றும் வல்லமை கொண்டவை” என்கிறார் கேசவ் ரெட்டி.

நிகரமாக 250 உறுப்பினர்களைச் சேர்த்து, 3-4 புதிய சங்கங்களைத் தொடங்குவது அவரது இலக்கு. இதன்மூலம் ஜூன் 30க்குள் 2,850க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் சுமார் 85 சங்கங்கள் இருக்கும்.

உள்ளூர் மருத்துவமனைகளின் ரத்தக் கூறுகளுக்கான தேவையை நிறைவேற்ற, ஜனவரிக்குள் பீதரில் $30,000 GG நிதியில் ரோட்டரி ரத்த வங்கி அமைக்கப்படும். மாணவிகளுக்கும் கிராமப்புறப் பெண்களுக்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாதவிடாய் சுகாதாரப் பொருள்களை வழங்க, குல்பர்காவில் $60,000 GG திட்டத்தில் சானிட்டரி நாப்கின் தயாரிப்பு ஆலை தொடங்கப்படுகிறது. “இரண்டு அல்லது மூன்று மாதங்களில் உருவாகும் ஆலை, மாணவிகளுக்கும் கிராமவாசிகளுக்கும் பெரிதும் உதவும்” என்கிறார்.

மாவட்டத்தின் ‘மாற்றத்திற்கான முன்னோடிகள்’ கருப்பொருள், RIயின் ‘நீடித்த தாக்கத்தை உருவாக்குவோம்’ நோக்கத்திற்கு வலுசேர்க்கிறது. “ஒவ்வொரு ரோட்டேரியரும் நல்ல மாற்றத்திற்குத் தூண்டுகோலாவார் என்ற நம்பிக்கையே ஆர்வத்துடனும் பணிவுடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றச் செய்கிறது.”

‘தன்னலம் கருதாத சேவை’ என்ற கொள்கையும் நேர்மையும் தனது நேரம், ஆற்றல், வளங்களைச் சமூகத்திற்காக அர்ப்பணிக்க ஊக்குவிப்பதாகக் கூறுகிறார். பதவிக்காலத்தில் GG, CSR திட்டங்கள் உட்பட ரூ.3.5-4 கோடி மதிப்பில் 650-700 சேவைத் திட்டங்களைச் சங்கங்கள் மேற்கொள்ளும். TRF நிதி இலக்கு $100,000.

பெண்களுக்கு ஆட்டோக்களும் தையல் இயந்திரங்களும்

தென் தமிழகத்தின் ஏழு வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய RID 3212-ல், ஜூலை நிலவரப்படி 124 சங்கங்களும் 4,600 உறுப்பினர்களும் இருந்தனர். “மாதம் ஒன்றாக 12 புதிய சங்கங்களைத் தொடங்கி, குறைந்தது 500 ரோட்டேரியர்களைச் சேர்ப்பதே இலக்கு” என்கிறார் காந்தி கிருஷ்ணன். உலகளாவிய மானியங்களுக்கான திட்டங்களை உருவாக்குமாறு சங்கங்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

நிர்வாகக் குழுவுடன் ஆலோசித்து மூன்று முக்கியத் திட்டங்களை வகுத்துள்ளார். தையல் தெரிந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய 1,000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு ரூ.60 லட்சம் நன்கொடைகள், CSR நிதியில் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. குடும்பங்களுக்கு நிலையான வருமானம் கிடைக்கச் செய்வதே நோக்கம்.

உள்ளூர் தொண்டு நிறுவனம் அளிக்கும் ஓட்டுநர் பயிற்சியை முடிக்கும் 124 பெண்களுக்கு, ரூ.2.5 கோடி GG, CSR நிதியில் இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் வழங்கப்படும். கழிப்பறையில்லாத 100 கிராமப்புற வீடுகளில், ரூ.1 கோடி GG, CSR நிதியில் மேல்நிலைத் தொட்டிகளுடன் முன்தயாரிப்புக் கழிப்பறைகள் நிறுவப்படும்.

TRF நிதி இலக்கு $1.2 மில்லியன். 1991 முதல் சமூக ரோட்டராக்ட் சங்கத்தில் செயல்பட்ட கிருஷ்ணன், 2000-ல் ரோட்டரியில் இணைந்தார்.

“ரோட்டரியின் இரு தூண்களான நட்பும் சேவையும் சிறப்பாகப் பணியாற்ற ஊக்குவிக்கின்றன. ஆளுநராகச் சங்கங்களை வழிநடத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இலக்குகளைக் குறித்த காலத்தில் அடைய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்” என்கிறார்.



காந்தி கிருஷ்ணன்
கட்டுமானப் பொறியாளர்
RC ராம்நாட், RID 3212



ஜஸ்பீர் சிங் பாட்டியா
பட்டயக் கணக்காளர்
RC கான்பூர் சவுத், RID 3110

சுற்றுச்சூழலுக்கு உகந்த தகன வசதிகள்

“எனது சேவைப் பரப்பை விரிவாக்க 2002-ல் ரோட்டரியில் இணைந்தேன். பயனாளிகளின் புன்னகையே தொடர்ந்து பணியாற்ற ஊக்கமளிக்கிறது” என்கிறார் ஜஸ்பீர் பாட்டியா.

உத்தராகண்ட், மேற்கு உத்தரப்பிரதேசத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய மாவட்டத்தில், அவர் பொறுப்பேற்றபோது 130 சங்கங்களும் 3,600 உறுப்பினர்களும் இருந்தனர். ஜூன் 30-க்குள் பத்துப் புதிய சங்கங்களை உருவாக்கி, 400 உறுப்பினர்களைச் சேர்க்கத் திட்டமிட்டுள்ளார்.

ரூ.2 கோடி GG நிதியில், RO சுத்திகரிப்புக் கருவியும் குளிரூட்டியும் கொண்ட சுமார் 400 குடிநீர் மையங்கள் அமைக்கப்படுகின்றன. ரூ.4 கோடி GG திட்டத்தில் பத்து மயானங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த தகன இயந்திரங்கள் நிறுவப்படும். “இவை வழக்கமான விறகுத் தேவையில் 20 சதவீதத்தை மட்டுமே பயன்படுத்தும்; மாசில்லாதவை” என்கிறார்.

ஆண்டுமுழுவதும் சங்கங்கள் நடத்தும் 200–250 மருத்துவ முகாம்களில், நாள்பட்ட நோய்கள் உள்ளிட்ட பாதிப்புகளுக்காக 25,000 பேர் பரிசோதிக்கப்படுவர். ரூ.3.5 கோடி செலவிற்கு சங்க நன்கொடைகள், தனியார் ஆதரவாளர்கள், CSR மானியங்கள் உதவுகின்றன.

கல்வித்துறையில், ரூ.1.5 கோடி சங்க நன்கொடைகள், CSR நிதியில் 20 ‘ஹேப்பி ஸ்கூல்’ திட்டங்கள் செயல்படுத்தப்படும். கிராமப்புற அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனி கழிப்பறைகள் அமைத்தல் அல்லது மேம்படுத்துதல், வகுப்பறைகளைப் புதுப்பித்தல், கட்டடம் மற்றும் குழாய்ப்பணிகள் மேற்கொள்ளப்படும். பள்ளிகளின் தோற்றமும் வசதிகளும் மேம்படும். பாட்டியாவின் TRF நிதி இலக்கு $500,000.■

லேவில் இமாலய உயரத்தை எட்டிய ரோட்டரி

ரோட்டரி நியூஸ் குழு

லடாக்கின் லே நகரில் முதல் ரோட்டரி சங்கமான RC லே லடாக் தொடங்கப்பட்டிருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லாக அமைந்துள்ளது. RID 3070 மாவட்டத்தைச் சேர்ந்த இச்சங்கத்தின் தொடக்க, பதவியேற்பு விழாவை RI இயக்குநர் K P நாகேஷ் நடத்திவைத்தார்.

DG அனில் சிங்கால், மண்டலம் 4 ரோட்டரி உறுப்பினர் ஒருங்கிணைப்பாளர் PDG துஷ்யந்த் சௌத்ரி, PDG ஜீதேந்திர அனேஜா ஆகியோர் பங்கேற்றனர். லே-லடாக் காவல்துறைத் தலைமை இயக்குநர் ஆனந்த் ஜெயினும் கலந்து கொண்டார்.

"இப்பகுதியில் ரோட்டரியின் வளர்ந்துவரும் இருப்பையும், அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கும் அதன் திறனையும் ஆனந்த் ஜெயினின் பங்கேற்பு வலியுறுத்துகிறது. RC லே உருவாகியிருப்பது பலவகைகளில் சிறப்பானது. உயரமான பகுதியில், கம்பீரமான இமயமலை சூழ அமைந்துள்ள லே, தனித்துவமான புவியியல், தட்பவெப்பச் சவால்களைக் கொண்டது. தொலைதூரத்தில், முக்கியத்துவமிக்க இப்பகுதிக்கு ரோட்டரியைக் கொண்டு வந்திருப்பது, சேவை மனப்பான்மைக்கு எல்லைகளில்லை என்ற அடிப்படை நம்பிக்கையை உறுதிசெய்கிறது" என்றார் நாகேஷ்.

இச்சங்கத்தின் மூலம் தன்னலம் கருதாத சேவை, நட்புறவு, சமூகத் தலைமை ஆகிய ரோட்டரியின் கொள்கைகள் லடாக்கில் வேரூன்றுகின்றன. உள்ளூர்த் தேவைகளைப் புரிந்து கொண்டு, அர்த்தமுள்ள, நீடித்த தாக்கத்தை உருவாக்கும் நிலையான திட்டங்களை வகுக்கும் வாய்ப்பு சங்கத்திற்குக் கிடைத்துள்ளது.



லே-லடாக் DGP ஆனந்த் ஜெயினுக்கு ரோட்டரி சின்னம் அணிவிக்கும் DG அனில் சிங்கால். அருகில் RI இயக்குநர் K P நாகேஷ். PDGs துஷ்யந்த் சௌத்ரி (வலது), ஜீதேந்திர அனேஜா (வலமிருந்து மூன்றாவது) ஆகியோரும் உள்ளனர்.



DGP *ஜெயின், DG சிங்காலுடன் புதிதாகத் தொடங்கப்பட்ட RC லே லடாக் உறுப்பினர்கள்.*





RC லே லடாக் தலைவர் புன்ட்சோக் வாங்டனுக்கு ரோட்டரி சின்னம் அணிவிக்கும் இயக்குநர் நாகேஷ். அருகில் DG சிங்கால். வலப்புறம் உமா நாகேஷ்.

சுகாதாரம், கல்வி, துப்புரவு, இளைஞர் மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பெண்களுக்கு அதிகாரமளித்தல், சமூக நலன் ஆகிய துறைகளில் சேவையாற்ற வாய்ப்புகள் உள்ளன. உள்ளூர் மக்களுடனும் தொடர்புடைய அமைப்புகளுடனும் இணைந்து செயல்பட்டால், இப்பகுதியின் சவால்களுக்குப் புதுமையான, நிலையான தீர்வுகளைக் காணலாம் என்றார்.

உள்ளூர்த் தலைமையை வளர்த்து, மக்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதன் மூலம், லடாக்கின் தனித்துவமான தேவைகளை நிறைவேற்றும் திட்டங்களைச் செயல்படுத்தலாம். அவை ரோட்டரியின் உலகளாவிய சேவை நோக்கத்தையும் பிரதிபலிக்கவேண்டும் என நாகேஷ் குறிப்பிட்டார்.

"லேவின் முதல் ரோட்டரி சங்கம் தொடங்கப்பட்டிருப்பது ஆரம்பம்தான். வரும் ஆண்டுகளில் உருவாகும் தாக்கமே இந்த வரலாற்று மைல்கல்லின் உண்மையான அளவுகோல். எத்தனை வாழ்க்கைகளைத் தொட்டோம், சமூகங்களை வலுப்படுத்தினோம், இளைஞர்களை ஊக்குவித்தோம், கூட்டாண்மைகளை உருவாக்கினோம் என்பதுதான் முக்கியம்" என்றார்.

ரோட்டரி குடும்பத்திற்கும் RID 3070-க்கும் இது முக்கியமான புதிய வரவு என்று DG சிங்கால் கூறினார். "லே சங்கத்தின் உருவாக்கம் மாவட்டத்தின் புவியியல் எல்லையை விரிவுபடுத்துகிறது. ஜம்மு, காஷ்மீர், லடாக் பகுதிகளில் ஒத்துழைப்பு, நட்புறவு, சமூகப் பங்கேற்புக்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ரோட்டேரியர்கள் ஒன்றுகூடி, கருத்துகளைப் பரிமாறிக்கொண்டு, இமயமலைப் பகுதி மக்களுக்குப் பயனளிக்கும் கூட்டாண்மைகளை உருவாக்கவும் தளமளிக்கிறது."

எதிர்வரும் பயணத்திற்கு அர்ப்பணிப்பு, குழுப்பணி, வலுவான உள்ளூர்த் தலைமை அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். அங்கீகாரப் பட்டயம் பெறுவதுடன் சங்கத்தின் வெற்றி முடிந்துவிடுவதில்லை. துடிப்பான சேவைப் பண்பாட்டை வளர்த்தல், உறுப்பினர்களை ஈடுபடுத்துதல், தாக்கமுள்ள திட்டங்களை உருவாக்குதல், சமூகத்துடனான தொடர்பை வலுப்படுத்துதல் ஆகியவையே வெற்றிக்கு அடிப்படை என்றார்.

RC லே ஓர் அமைப்பாக மட்டுமல்லாமல், சேவை, நட்பு, தலைமை, நல்ல மாற்றம் ஆகியவற்றின் மையமாகவும் உருவாக முடியும் என்றார் PDG சௌத்ரி.


"லடாக்கின் தனித்துவமான சூழலியல் அமைப்பு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, இயற்கை வளப் பாதுகாப்பு, பொறுப்பான சுற்றுலா, மருத்துவச் சேவைகளை அணுகும் வசதி, இளைஞர்களின் கல்வி மேம்பாடு ஆகியவற்றில் ரோட்டரி பணியாற்ற வாய்ப்பளிக்கிறது."

உள்ளூர் தொழில்முறை நிபுணர்கள், தொழில்முனைவோர், கல்வியாளர்கள், சமூகத் தலைவர்கள், இளைஞர்கள் ஆகியோரை ஒரே நோக்கத்தின்கீழ் ஒன்றிணைப்பதும் முக்கியம் என்றார். சமூகத்திற்குச் சேவையாற்றி, நீடித்த தாக்கத்தை உருவாக்குவதற்கான பொதுவான தளமாக இச்சங்கம் விளங்க முடியும்.

"ஒரு சமூகம் இருக்கும் இடமெல்லாம் சேவை செய்வதற்கான வாய்ப்பும் இருக்கிறது என்பதே இச்சங்கத்தின் தொடக்கம் உணர்த்தும் வலுவான செய்தி. சமவெளிகள் முதல் மலைகள்வரை, பரபரப்பான நகரங்கள் முதல் தொலைதூர இமயமலைக் குடியிருப்புகள்வரை, மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் பொதுநோக்கத்துடன் ரோட்டரி தனது சேவைப் பரப்பை விரிவுபடுத்துகிறது" என்றார் சௌத்ரி.■

கிராமத்திற்கு மறுவாழ்வளிக்கும் சண்டிகர் ரோட்டேரியர்கள்

ரஷீதா பகத்



பீர் கக்கர் கிராம மக்களுடன் கலந்துரையாடும் RC சண்டிகர் மிட்டவுன் உறுப்பினர்கள்.



2022–23-ல் RID 3080 ஆளுநராக இருந்த வேத் பிரகாஷ் கல்ரா, 'ரோட்டரி கிராமங்களை நோக்கிச் செல்லட்டும்' என்று அழைப்புவிடுத்தார். அதை முழுமனதுடன் ஏற்றுச் செயல்பட்ட சங்கங்களில் RC சண்டிகர் மிட்டவுனும் ஒன்று.

அப்போதைய தலைவர் சஞ்சய் கல்ராவின் தலைமையில், சண்டிகரிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவிலுள்ள பீர் கக்கர் கிராமத்தில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுடன்

தொழிற்பயிற்சி மையத்தையும் அமைக்கச் சங்கம் முடிவுசெய்தது. ஏற்கெனவே அங்கு சமூகநலத் திட்டங்களை மேற்கொண்டிருந்ததால், இக்கிராமத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

ஒவ்வொரு சங்கமும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து, அங்குள்ள வாழ்க்கைச் சூழலை மேம்படுத்த வேண்டும் என்று ஆளுநர் வலியுறுத்தியிருந்தார். "அருகில் இருப்பது வசதிதான். ஆனால் அந்தக் காரணத்திற்காக மட்டுமே இக்கிராமத்தைத் தேர்ந்தெடுக்க வில்லை" என்கிறார் அப்போதைய துணைத் தலைவர் பிரதீப் சிசோடியா.

சண்டிகருக்கு மிக அருகிலிருந்தும் பீர் கக்கரில் பல அடிப்படை வசதிகள் இல்லை. மின்சாரமும் தெருவிளக்குகளும்கூட இல்லை. முதலில் சூரியசக்தி மின்வசதித் திட்டத்தைச் செயல்படுத்திய சங்கம், தொடர்ந்து உள்ளூர் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப பிற திட்டங்களையும் மேற்கொண்டதாகச் சஞ்சய் கல்ரா கூறுகிறார்.

பெரிய, நவீன நகரத்திற்கு அருகிலிருப்பதால், பல்வேறு தொழில்களைச் செய்யும் மக்கள் இங்கு வசிக்கின்றனர். விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தினக்கூலிகள், வீட்டு வேலை செய்யும் பெண்கள் ஆகியோர் உள்ளனர்.

"மழைநீர் சேகரிப்பு, உள்ளூர்ப் பள்ளிக்குப் பூங்கா அமைத்தல், அங்கன்வாடி தொடங்குதல் போன்ற முக்கியத் திட்டங்களைச் செய்தோம்.



சங்கத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் செய்தித்தாள்களைப் பயன்படுத்தி வெட்டும் நுட்பங்களைக் கற்கும் பெண்கள்.









மையத்தில் நடைபெறும் கணினிப் பயிற்சி.

ஆனால் தாசில்தார் உள்ளிட்ட கிராமத் தலைவர்களுடன் தேவைகளை மதிப்பிட்ட போது, குறிப்பாக இளைஞர்களுக்காகத் தொழிற்பயிற்சி மையத்தைத் தொடங்குமாறு கேட்டுக்கொண்டனர்" என்கிறார் கல்ரா.

இளைஞர்களுக்குப் புதிய பாதை

கிராமத்தில் போதைப்பொருள் பழக்கம் பெரும் பிரச்னையாக இருப்பதாகவும், இளைஞர்கள் அதற்கு அடிமையாகிவருவதாகவும் தாசில்தாரும் உள்ளாட்சி உறுப்பினரும் ரோட்டேரியர்களிடம் தெரிவித்தனர். உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு உயர்கல்வியைத் தொடர்வதில் மிகச் சிலரே ஆர்வம் காட்டினர். பயனுள்ள செயல்பாடுகள் இல்லாததால், போதைப்பொருள் பயன்பாடு மட்டுமன்றி திருட்டு உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்களிலும் சிலர் ஈடுபட்டனர்.

"முறையான தொழிற்பயிற்சி அளித்தால், இளைஞர்களும் குறிப்பாகப் பெண்களும் பொருளாதாரச் சுதந்திரம் பெறுவதுடன், நேரத்தையும் பயனுள்ளதாகச் செலவிட முடியும் என்று வலியுறுத்தினர்" என்கிறார் முன்னாள் தலைவர்.

அதையடுத்து தொழிற்பயிற்சி

மையத்திற்கான திட்டத்தைச் சங்கக் குழுவினர் உருவாக்கினர். பெண்களின் பொருளாதாரச் சுயசார்புக்கு வலுவான வாய்ப்பளிக்க வேண்டும் என்பதில் அனைவரும் உடன்பட்டனர்.

"பெண்களுக்குத் தையல், அழகுக்கலைப் பயிற்சிகளையும், ஆண், பெண் இருபாலருக்கும் கணினி வகுப்புகளையும் தொடங்க முடிவுசெய்தோம். இசைப் பயிற்சியும் சேர்க்கப்பட்டது. தபேலா, ஆர்மோனியம், கீபோர்டு வாங்கி, பாடக் கற்றுத்தர ஆசிரியரையும் நியமித்தோம்" என்கிறார் கல்ரா.

இந்த எண்ணத்தை நனவாக்க அர்ப்பணிப்பும் விடாமுயற்சியும் பொறுப்புணர்வும் தேவைப்பட்டதாகச் சிசோடியா கூறுகிறார். "கிராமத்தை அடையாளம் காண்பது, மக்களின் தேவைகளைப் புரிந்துகொள்வது, வளங்களையும் கூட்டாண்மைகளையும் திரட்டுவது வரை, எங்கள் முன்னாள் தலைவர் அசோக் புரி முக்கியப் பங்காற்றினார்."

சர்வதேசக் கூட்டாண்மையின் பலன்

'ஹுன்னர் தொழிற்பயிற்சி மையம்' எனப் பெயரிடப்பட்ட இத்திட்டத்திற்கு நிதிதிரட்ட, அமெரிக்காவிலுள்ள தனது சகோதரர் அனில் புரியை அணுகினார் அசோக் புரி. அனில், RID 5020 மாவட்டத்தின் RC ட்வின் சிட்டீஸ் (சென்ட்ரேலியா-செஹேலிஸ்) முன்னாள் தலைவர்.

பின்னர் ரோட்டரி உலகளாவிய மானியத்தின் மூலம் திட்டத்திற்கு ஆதரவு கிடைத்தது. ரோட்டரி சங்கங்களின் பங்களிப்புகள், மாவட்ட ஒதுக்கீட்டு நிதி, ரோட்டரி அறக்கட்டளையின் உலக நிதி ஆகியவை ஒன்றிணைந்தன.

"மொத்தம் $40,000 கிடைத்தது. உள்ளூரில் உருவான ஒரு கனவை, ரோட்டரியின் கூட்டாண்மையும் சர்வதேச ஒத்துழைப்பும் எவ்வாறு வலுப்படுத்துகின்றன என்பதற்கு இத்திட்டம் ஊக்கமளிக்கும் உதாரணம்" என்கிறார் சிசோடியா.

மையத்திற்காக மோசமான நிலையில் இருந்த பஞ்சாயத்துக் கட்டடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ரோட்டேரியர்கள் அதைச் சீரமைத்துப் புதுப்பித்தனர். தையல், கணினிப் பயிற்சிகளில் தலா 20 பேரும், அழகுக்கலைப் பயிற்சியில் பத்துப் பெண்களும் சேர்க்கப்பட்டனர். இவற்றுடன் பாடல் பயிற்சியும் தொடங்கப்பட்டது.



மூன்று தொழிற்பயிற்சிகளும் தலா மூன்று மாதங்கள் நடைபெறும். மாதக் கட்டணம் ரூ.100. "அதையும் செலுத்த முடியாதவர்களுக்கு விலக்களிக்கிறோம். முற்றிலும் இலவசமாக வழங்குபவற்றின் மதிப்பு சில நேரங்களில் உணரப்படுவதில்லை என்பதால் சிறிய கட்டணம் வைத்துள்ளோம்" என்கிறார் கல்ரா.

ஜூலை 1 அன்று மையம் திறக்கப்பட்டது. DG ரீட்டா கல்ரா, சங்கத் தலைவர் ரேணு சோப்ரா, IPP ஜக்விந்தர் பாவா, சஞ்சய் கல்ரா, அசோக் புரி, பிரதீப் சிசோடியா, கிராமத் தலைவர்கள், பயனாளிகள் பங்கேற்றனர்.

"கவனமான திட்டமிடலும் கூட்டுப்பணியும் ஓர் எளிய, வலிமையான எண்ணத்தைச் செயலாக்கியுள்ளன. உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதுடன், பெண்களும் இளைஞர்களும் நடைமுறைத் திறன்களைக் கற்று, தன்னம்பிக்கையும் சுயசார்பும் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம்" என்கிறார் சிசோடியா.

"எங்கள் மையம் புதுப்பிக்கப்பட்ட கட்டடம் மட்டுமல்ல. மூன்று பயிற்சிகளின் முதல் அணியில் சேர்ந்துள்ள 50 மாணவர்களின் ஆற்றல், எதிர்பார்ப்புகள், கனவுகளால் ஏற்கெனவே உயிர்ப்புடன் இயங்கத் தொடங்கிவிட்டது."

ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் தையல் கற்கும் 28 வயது சஷி பாலாவை உதாரணமாகக் குறிப்பிடுகிறார். "அவருக்கும் மற்ற மாணவர்களுக்கும் இவை வெறும் பயிற்சிகள் அல்ல. வேலைவாய்ப்பு, தொழில்முனைவு, ஒளிமயமான எதிர்காலத்திற்கான பாதைகள். அவர்களுடைய வாழ்க்கை மட்டுமன்றி, குடும்பங்களின் வாழ்க்கையும் மாறுவதற்கான வாய்ப்புகள் இவை."■



பாட்னாவில் ரோட்டரி மணிக்கூண்டு

ரோட்டரி நியூஸ் குழு

RC பாடலிபுத்ரா, RID 3250 சங்கத்தின் பொன்விழாவையொட்டி, பாட்னாவின் பரபரப்பான டாக் பங்களா சௌராஹா சந்தைப் பகுதியில் ரோட்டரி மணிக்கூண்டு நிறுவப்பட்டது.

உயர்தர வார்ப்பிரும்பால் உருவாக்கப் பட்ட கோபுரத்தின் நான்கு பக்கங்களிலும், GPS வசதியுள்ள 42 அங்குல விட்டக் கடிகாரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பின்னொளியுடன் கூடிய முகப்புகள் நேரத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. தடையற்ற செயல்பாட்டிற்கு UPS மின்காப்பு வசதியும் உள்ளது.

ரோட்டரியின் பொதுப்பிம்பத்தை மேம்படுத்தும் இத்திட்டத்தை முன்னாள் தலைவர் ஸ்வாதி மோடி முன்மொழிந்தார். திட்டத் தலைவர் நவீன் குப்தா, PDG பிபின் சாசன் தலைமையிலான குழு செயல்படுத்தியது.

"மக்கள் நடமாட்டமிக்க இவ்விடத்தில் மணிக்கூண்டு அமைப்பது பெரும் சவாலாக இருந்தது. பிகார் உள்துறை, காவல்துறைத் தலைமை இயக்குநர், போக்குவரத்து மற்றும் அழகுபடுத்தல் கூடுதல் தலைமை இயக்குநர், பாட்னா மாநகராட்சி, நகர ஆணையர் ஆகியோரின் அனுமதிகள் தேவைப்பட்டன. மூன்று மாதத் தொடர் முயற்சியும் ஒருங்கிணைப்பும் தேவைப்பட்டன" என்றார் குப்தா.

அங்குள்ள விளம்பரப் பலகைகளால் கணிசமான வருவாய் ஈட்டிய உள்ளூர் விளம்பரதாரர் ஒருவரும் மணிக்கூண்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

"சங்கத்தின் திட்டக்குழுவினர் மேற்கொண்ட இடைவிடாத முயற்சிகளால் இந்தச் சவால்களை வெற்றிகொண்டோம்" என்றார் குப்தா. உறுதியும் அழகும் இணைந்த இந்த மணிக்கூண்டு, சங்கத்தின் ஐம்பதாண்டுப் பயணத்தை நகர மக்களுக்கு நினைவூட்டுகிறது.■

PDG பிரேம் அகர்வாலுக்கு உயரிய விருது

IPDG பூபேஷ் மேத்தா தலைமையிலான RID 3090 விருது விழாவில், PDG பிரேம் அகர்வாலுக்கு RI-யின் 'தன்னலம் கருதாத சேவை' விருதை இயக்குநர் K P நாகேஷ் வழங்கினார்.

RC மான்சா ராயல் உறுப்பினரான அகர்வால், மாவட்டத்தின் DRFC-யாகவும் (2025–28) உள்ளார். பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் ரோட்டேரியர்களின் 2025–26 பங்களிப்புகளும் பாராட்டப்பட்டன.



PDG பிரேம் அகர்வாலுக்கு விருது வழங்கும் RI இயக்குநர் K P நாகேஷ். உடன் (இடமிருந்து): PDGs பூபேஷ் மேத்தா, துஷ்யந்த் சௌத்ரி, உமா நாகேஷ், மது மேத்தா.

ஆண்டுதோறும் மாவட்டத்திற்கு ஒருவர் பரிந்துரைக்கப்படலாம்; உலகளவில் அதிகபட்சம் 150 பேருக்கே இவ்விருது வழங்கப் படுகிறது. "RI-யின் உயரிய தனிநபர் விருதைப் பணிவுடன் ஏற்கிறேன். 2022 ஏப்ரலில் சிகாகோ சட்டப்பேரவையில் என்னுடன் பங்கேற்ற நாகேஷுக்கு நன்றி" என்றார் அகர்வால்.■

Rotary PEOPLE OF ACTION

விண்வெளி விஞ்ஞானிகளை உருவாக்கும் ரோட்டரி

V முத்துக்குமரன்

கோவைக்கு மேலுள்ள வளிமண்டலத்தின் கீழடுக்கில் அதிகரிக்கும் மாசை ஆராய, இரண்டு கிலோ எடையுள்ள சிறிய செயற்கைக் கோள் ஆய்வுக் கருவித்தொகுப்பு, ஹீலியம் பலூன் மூலம் 34,000 அடிக்கும் அதிகமான உயரத்திற்கு அனுப்பப்பட்டது. நகரின் 11 அரசுப் பள்ளிகளில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் 55 மாணவர்கள் இணைந்து இதை வடிவமைத்து உருவாக்கினர்.

விண்வெளி விஞ்ஞானிகளை உருவாக்கும் தொலைநோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்திற்கு, வானியல் கல்வி வழங்கும் ஓபன் ஸ்பேஸ் ஃபவுண்டேஷன் (OSF) நிபுணர்கள் தொடர் பயிலரங்குகள் மூலம் வழிகாட்டினர் என்கிறார் ரோட்டரி ஈ-சங்கம் மெட்ரோ டைனமிக்ஸ், RID 3206 தலைவர் மற்றும் திட்டத் தலைவர் வித்யா நடராஜன்.

'உயர்வு' திட்டத்தில் இந்த ஆய்வுக்கருவி அனுப்பப்பட்டது. தொலைநோக்கிகளை உருவாக்கி விண்மீன்களை ஆராயக் கற்றுத்தரும் சங்கத்தின் இரண்டாண்டுகால 'விண்வெளி' திட்டத்தின் அடுத்த கட்டமே இது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வானியலில் ஆர்வ மூட்டும் புதுமையான முயற்சி என்கிறார் வித்யா.

OSF நிபுணர்கள், திட்டமிட்ட பாடத்தொகுப்புடன் 40 அரசுப் பள்ளிகளில் நடத்திய நிகழ்ச்சிகளில் சுமார் 1,600 மாணவர்கள் தொலை நோக்கிகளை உருவாக்கப் பயிற்சி பெற்றனர். வானியற்பியல், விண்வெளி அறிவியலின் அடிப்படை களுடன், பிரபஞ்சத்தின் விண்மீன் பேரடைகள் குறித்த அனுபவக் கல்வியும் வழங்கப்பட்டது. சிறப்பாகச் செயல்பட்டவர்கள் ISRO போட்டிகளில் பங்கேற்கச் செய்யப்பட்டனர்.

சங்கத்தின் ஆதரவில் போட்டிகளில் பங்கேற்ற சில மாணவர்கள் புதிய வால்நட்சத்திரங்களையும் சிறுகோள் களையும் கண்டறிந்ததாகக் கூறுகிறார் வித்யா. "இந்த விண்பொருள்களுக்கு அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த இளம் ஆராய்ச்சியாளர்களின் பெயர்களைச் சூட்டும் பணியில் ISRO ஈடு பட்டுள்ளது" என்கிறார்.

'உயர்வு' திட்டத்தில், வளி மண்டலத்தின் உயரடுக்குகளில்



மாணவர்கள் வழிகாட்டுதலில் தொலைநோக்கியில் பார்க்கும் ரோட்டரி ஈ-சங்கம் மெட்ரோ டைனமிக்ஸ் தலைவர் வித்யா நடராஜன்.



கோவை அரசுப் பள்ளிகளுக்குத் தொலைநோக்கிகள் வழங்கும் மெட்ரோ டைனமிக்ஸ் உறுப்பினர்களும் வாக்கரூ ஃபவுண்டேஷன் CSR பங்காளிகளும்.



மிதக்கும் நுண்துகள்களின் அளவு குறித்த கருவியின் பதிவுகளை 330 மாணவர்கள் ஆய்வுசெய்வார்கள். “பயிற்சி பெற்ற மாணவர்களுடன் மற்றவர்களும் கலந்துரையாடுவதால், ‘விண்வெளி’ திட்டம் 4,000-க்கும் மேற்பட்டோரைச் சென்றடைந்துள்ளது. ஆய்வகங்களில் நிறுவப்பட்ட தொலை நோக்கிகளையும் பயன்படுத்துகிறார்கள்.”

அன்றைய RID 3201 மாவட்டத்தின் முதல் ஈ-சங்கமாக இது தொடங்கப்பட்டது. தற்போது கோவையும் சுற்றுப்புறங்களும் RID 3206-ல் உள்ளன. தொடக்க உறுப்பினர்கள் RC கோயம்புத்தூர் மெட்ரோபொலிஸ் அனெட்கள்.

“அமெரிக்கா, கனடா, பிரிட்டன், நெதர்லாந்து, மும்பை, பிறந்த ஊரான கோவை என உலகெங்கும் வாழும் மூன்றாம் தலைமுறை ரோட்டேரியர்கள் நாங்கள்” என்கிறார் வித்யா.

ஏழு மாநகராட்சிப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட ஸ்மார்ட் பலகைகளின் உதவியுடன், 350 மாணவர்களுக்கு எட்டு இணையவழி அமர்வுகள் நடத்தப்பட்டன. ‘கம்யூனிட்டி ஆஃப் பிராக்டிஸ்’ என்ற இந்நிகழ்ச்சிகளில் வாழ்க்கைமுறை, பண்பாடு, இயற்கை, வனவிலங்குகள், பயணம் போன்ற தலைப்புகளுடன் தொழில் தேர்வுக்கான வழிகாட்டுதலும் வழங்கப்பட்டது. மனிதவளம், உயர்கல்வி, நிதித் திட்டமிடல் உள்ளிட்ட துறை நிபுணர்களும் பிற சங்க ரோட்டேரியர்களும் வழிநடத்தினர்.

அண்மையில், ஸ்வர்கா ஃபவுண்டேஷனின் சௌக்யா வலி மறுவாழ்வு மையத்திற்கு, ‘ஸ்பார்க்’ திட்டத்தில் ரூ.1 லட்சம் மதிப்பிலான செயல்திறன் சிகிச்சைக் கருவிகள் வழங்கப்பட்டன. ஆட்டிசம், பெருமூளை வாதம், அறிவாற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான உணர்வுத்தூண்டல் சிகிச்சைப் பகுதியை உருவாக்க இவை உதவும். தனியார் நன்கொடையாளர்களும் ஆதரவாளர்களும் நிதியளித்ததாகப் பொருளாளர் M சேதுராமன் கூறுகிறார்.

குழந்தைகளின் நீரிழிவுக்கு உதவி

குழந்தைகளின் நீரிழிவு குறித்த

விழிப்புணர்வுக்காக, நான்காண்டு களாக நடத்தப்படும் ‘கிட்-அ-தான்’ நடைப்பயணம் நவம்பரில் நடை பெறுகிறது. இதில் 15 வயது வரை யிலான குழந்தைகள் பங்கேற்கலாம்.

“முந்தைய மூன்றாண்டுகளில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் சுமார் 1,250 பேர் பங்கேற்றனர். இவ்வாண்டு நவம்பர் 15-ல் கோவையில் 2,000-க்கும் மேற்பட்ட குழந்தைகளை எதிர்பார்க்கிறோம்” என்கிறார் சேதுராமன்.

முந்தைய நடைப்பயணங்களில் திரட்டிய நிதியில், நீரிழிவுள்ள குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்கும் இதயங்கள் அறக்கட்டளைக்கு இன்சுலின் பம்புகளும் மருத்துவப் பொருள்களும் வழங்கப்பட்டன.

“கிட்-அ-தான் உள்ளிட்ட நிதிதிரட்டல்கள், CSR உதவி, கொடையாளர்களின் ஆதரவுடன் இதுவரை சுமார் ரூ.2 கோடி மதிப்பிலான மருத்துவக் கருவி களையும் பொருள்களையும் வழங்கியுள்ளோம். சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரியில் நாங்கள் ஆதரவளித்த சிறப்பு மையம், வகை 1 நீரிழிவுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு உடனடிச் சிகிச்சையும் மாதாந்திர மருந்துகளும் வழங்குகிறது” என்கிறார் வித்யா.

கோவிட் காலத்தில், பெற்றோரை இழந்த அல்லது நீண்டகாலம் வீட்டிற்குள் தனிமைப்படுத்தப்பட்ட குழந்தைகளுக்காக ‘பிரிங் அ ஸ்மைல்’ திட்டம் நடத்தப்பட்டது. உலகெங்குமிருந்த 250 தன்னார்வலர்கள் ஒரு மணிநேர இணையவழி அமர்வுகளை நடத்தினர். நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளின் மனநலனுக்கு முன்னுரிமையளித்து, பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுத்தினர்.

எல்லைகளைக் கடந்த சேவை

உலகெங்கும் பரவியுள்ள சங்கத்தின் 33 உறுப்பினர்களுக்கு, சேவையாற்றப் புவியியல் எல்லைகள் தடையில்லை. “டொராண்டோவில் நான் செய்வது போல், வசிக்கும் நாட்டின் உள்ளூர் சங்கங்களுடன் இணைந்து பணியாற்றுகிறோம். அதேசமயம், பள்ளிப்பருவத்தைக் கழித்த, குடும்ப வேர்களைக் கொண்ட கோவைக்கும் உதவுகிறோம்” என்கிறார் வித்யா. சுகாதாரம், தொடக்கக் கல்வி, மனிதநேயத் தேவைகள் சார்ந்த திட்டங்கள் பெரும்பாலும் மாணவர்களுக்குப் பயனளிக்கின்றன.

சில மாதங்களுக்கு முன்பு, மும்பை, கோவை, வடக்கு கரோலினா, ஃபுளோரிடாவிலுள்ள அனெட்கள் ஒரே நாளில் ஆதரவற்றோர் இல்லங்களுக்கும் சிறப்பு இல்லங்களுக்கும் அதிகம் பயன்படுத்தப்படாத ஆடைகளை வழங்கினர். கோவையில் குறைந்த வருமானக் குடும்பங்களின் குழந்தை



டொராண்டோ சங்கங்களுடன் இணைந்து, பேரிடர் பாதித்த நாடுகளுக்கு அனுப்ப உலர் உணவுகளைப் பொதியிடும் வித்யா.

களுக்காக சாந்தி ஆசிரமம் நடத்தும் எட்டு பால சாந்தி கேந்திரங்களுக்கு ரூ.18,000 மதிப்பிலான எழுது பொருள்களும் பள்ளிப்பொருள்களும் வழங்கப்பட்டன.

ஆண்டுதோறும் சராசரியாக ரூ.40 லட்சம் மதிப்பில் குறைந்தது 20 சேவைத் திட்டங்களைச் சங்கம் மேற்கொள்கிறது. பெரும்பாலான வற்றுக்கு நன்கொடையாளர்கள், ஆதரவாளர்கள், CSR மானியங்கள் உதவுகின்றன.

2020 நவம்பரில் தொடங்கப்பட்ட சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் தற்போது TRF-க்கு நிதியளிக்கின்றனர். கடந்த இரண்டாண்டுகளாக ஒவ்வொருவரும் போலியோ நிதிக்கும் ஆண்டிற்குக் குறைந்தது $30 வழங்குகிறார்கள். சங்கத்தில் 18 பால் ஹாரிஸ் ஃபெலோக்களும் ஒரு பெருங்கொடையாளரும் உள்ளனர். மொத்த TRF பங்களிப்பு $23,600.

துடியலூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி ஆசிரியை S சித்ரா கூறுகிறார்: “தொலைநோக்கிகளை உருவாக்கியதும் வானியல் கலந்துரையாடல்களும் மாணவர்களுக்குச் செயல்முறைத் திறனையும் விண்மீன்களை ஆராயும் ஆர்வத்தையும் அளித்துள்ளன. கியூப்சாட் முயற்சி, அவர்களின் ஆர்வத்தைச் சாதிக்கக்கூடிய விண் வெளிக்கனவுகளாக மாற்றுகிறது.”■



அரசுப் பள்ளிகளுக்கு அலமாரிகளும் நூல்களும் வழங்கும் ‘புக் நூக்’ திட்டத்தில் செயலர் திவ்யா ஹரிகிருஷ்ணன் (வலது), ஸ்வர்ணலதா, ராஜ் சித்தார்த்.

தற்காப்புப் பயிற்சி

RC இந்தூர் அப்டவுன், RID 3040, 'சங்கல்ப் சுரக்ஷா' திட்டத்தில் மூன்று பள்ளிகளில், பார்வைத்திறன் குறைபாடுள்ள 52 மாணவிகள் உட்பட 1,245 பேருக்குத் தற்காப்புப் பயிற்சியளித்தது.



தற்காப்புப் பயிற்சி.

புற்றுநோய் விழிப்புணர்வு

RC ஹியூமானிட்டி கொல்கத்தா, RID 3291, வீலர் டைரியுடன் கொல்கத்தா-லடாக் பயணத்தில் கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய்த் தடுப்பு, HPV தடுப்பூசியை வலியுறுத்தியது.



கர்துங் லாவில் பயணிகள்.

தாய்ப்பால் தானத்தில் சாதனை

RC ஈரோடு நெக்சஸ், RID 3203, வரம் தாய்ப்பால் வங்கியுடன் லோட்டஸ் மருத்துவமனையில் நடத்திய முகாமில் 153 தாய்மார்கள் பங்கேற்று, ஆசியச் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றனர்.



சான்றிதழுடன் PDGs E K சகாதேவன், A கார்த்திகேயன், சங்கத்தினர், தன்னார்வலர்கள்.

பொதுப் பூங்கா

RC துருவேகெரே, RID 3192, மரங்கள், நடைபாதை களுடன் பூங்காவை உருவாக்கியது. TS பிரகாஷ் குப்தா ரூ.8 லட்சத்தில் குழந்தைகளுக்கான விளையாட்டு, முதியோருக்கான உடற்பயிற்சி வசதிகளை வழங்கினார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி நேரமுண்டு.





கன்ஹா சாந்தி வனத்தில் அமைதிக் கம்பத்தைத் திறந்துவைக்கும் ஹார்ட்ஃபுல்னெஸ் நிறுவனர் கம்லேஷ் படேல் (நடுவில்). உடன் (வலமிருந்து): DG உதய் பிலானி; மாவட்ட அமைதி மற்றும் மோதல் தீர்வுத் தலைவர் ஜான்சி பிரேமானந்த்; மாவட்ட பொதுப்பிம்பத் தலைவர் K சேஷசாய் குமார்; RC ஹைதராபாத் எலைட் தலைவர் விஜய் மட்டிரெட்டி; மாவட்ட நிகழ்ச்சிகள் செயலர் ரஞ்சித் தாக்கூர்.

அமைதிக்காக இணைந்த ரோட்டரியும் ஹார்ட்ஃபுல்னெஸும்

ரஷீதா பகத்

சர்வதேச அமைதி தினத்தையொட்டி, உலகெங்கும் தியான மையங்களை நடத்தும் ஹார்ட்ஃபுல்னெஸ் அமைப்புடன் இணைந்து RID 3150 சிறப்பு நிகழ்ச்சியை நடத்தியது. ஹைதராபாத்தில் 1,400 ஏக்கரில் பரந்துள்ள கன்ஹா சாந்தி வனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நூற்றுக்கணக்கான ரோட்டேரியர்களும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பங்கேற்றனர். RC ஹைதராபாத் எலைட், RC செகந்திராபாத் ஆதரவளித்த இந்நிகழ்ச்சியில் ரோட்டரி அமைதிக் கம்பம் நிறுவப்பட்டது.

உலகளாவிய லாபநோக்கற்ற அமைப்பான ஸ்ரீ ராம் சந்திர மிஷன், கன்ஹா சாந்தி வனத்தை நிர்வகிக்கிறது. அதன் தலைவர் கம்லேஷ் படேல் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கினார். உலகில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் வளர்க்க, ரோட்டரி மேற்கொள்ளும் முயற்சிகளைப் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதே நிகழ்ச்சியின் நோக்கம். புனே சிம்பயாசிஸ் பல்கலைக் கழகம் உட்பட உலகெங்குமுள்ள ரோட்டரி அமைதி மையங்கள், இதற்காக அமைதி அறிஞர்களுக்குப் பயிற்சியளிக்கின்றன.

தியானத்தை மையமாகக் கொண்ட ஹார்ட்ஃபுல்னெஸ் இயக்கத்தை நிறுவியவர் படேல். கன்ஹா சாந்தி வனத்திலுள்ள ஹார்ட்ஃபுல்னெஸ் நிறுவனத்தின் 30 ஏக்கர் தியான வளாகம், ஒரே நேரத்தில் ஒரு லட்சம் பேர் அமர்ந்து தியானிக்கும் வசதியுடையது. உலகின் மிகப்பெரிய தியான மையமாக இது விளங்குகிறது.

அமைதிக் கம்பத்தைத் திறந்து வைத்த படேல், வளாகத்தின் கட்டடக்கலைச் சிறப்புகளையும் பிற அம்சங்களையும் ரோட்டேரியர்களுக்கு விளக்கினார். அமைதியை வளர்க்க அவர்களுடன் இணைவதில் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். “உங்கள் அனைவருடனும் இணைந்து பல கன்ஹாக்களை உருவாக்க விரும்புகிறேன். அதற்கு நீங்கள் தயாரா?” என்று கேட்டார்.

உலக அமைதியை வளர்ப்பது குறித்து பல்வேறு தளங்களில் விவாதங்கள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டார். “1956-லேயே எனது குரு ஐக்கிய நாடுகள் சபைக்கு எழுதிய கடிதத்தில், தனிமனித அமைதியின்றி உலக அமைதி சாத்தியமில்லை என்று கூறியிருந்தார். தனிமனிதர்கள் இல்லாமல் ‘உலகம்’ என்று எதுவுமில்லை. அனைத்தும் ஒரு மனிதரிடமிருந்தே தொடங்குகின்றன.”

போர்க்களத்தில் அர்ஜுனனிடம் கிருஷ்ணர் கேட்ட கேள்வியை உதாரணமாகக் கூறினார்: மனஅமைதி இல்லாத ஒருவரால் எவ்வாறு மகிழ்ச்சியைப் பெற முடியும்?

“ஒவ்வோர் உயிரும் மகிழ்ச்சியை நாடுகிறது. வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும், இதயத்தில் அமைதி இல்லாவிட்டால் மகிழ்ச்சி கிடைக்காது.

மனம் அலைபாயும் நிலையில் அமைதியும் இருக்காது. தனக்குள்ளும் குடும்ப உறுப்பினர்களிடையேயும் நல்லிணக்கம் இல்லாவிட்டால், குடும்பத்தில் அமைதி இருக்க முடியாது.”

தியானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், ஆழ்ந்து சிந்திக்கும், ஒருமுகப்பட்ட மனதிலிருந்தே நல்லிணக்கம் உருவாகிறது என்றார். அத்தகைய கவனக்குவிப்பிற்குத் தியானம் அவசியம் எனக் குறிப்பிட்டார். “தியானம், ஒருமுகப்பட்ட சிந்தனை, நல்லிணக்கம், அமைதி, இறுதியாக மகிழ்ச்சி ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை இப்போது புரிந்துகொள்ளலாம்.”

தனது மனைவிக்குக்கூட மனஆறுதலையோ அமைதியின் மகிழ்ச்சியையோ தன்னால் நேரடியாக வழங்க முடியாது என்றார். “அதை அவர்தான் தனக்குள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதுவே நமது அடிப்படை இயல்பு. இயல்பிற்கு எதிராகச் செல்லும்போது, மனிதர்களாக நாம் தரம் தாழ்கிறோம்.”

இத்தியான முறையைச் சரியாகப் பயில, பயிற்றுநரிடம் குறைந்தது மூன்று அல்லது நான்கு அமர்வுகளில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கூறினார். சிறிய கிராமங்களில்கூட ஹார்ட்ஃபுல்னெஸ் பயிற்றுநர்கள் இருப்பதாகத் தெரிவித்தார். தனது மின்னஞ்சல் முகவரியான daaji@daaji.org; mail to: daaji@daaji.org-ஐ பகிர்ந்த அவர், தொடர்புகொள்பவர்களை அவர்களது பகுதியில் உள்ள பயிற்றுநருடன் இணைத்துவைப்பதாகக் கூறினார்.

சேவையில் வேரூன்றும் அமைதி

40,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக மதிப்பிடப்பட்ட கூட்டத்தில் உரையாற்றிய DG உதய் பிலானி, உலக அமைதி தினத்தைக் கொண்டாட இதைவிடச் சிறந்த வழி என்ன இருக்க முடியும் என்று கேட்டார். வளாகத்தில் கூடியிருந்தவர்களுக்கு மட்டுமன்றி, உலகெங்கும் நேரலை வழியாகப் பங்கேற்றவர்களுக்கும் அமைதி, நல்லிணக்கச் செய்தி சென்றடைந்ததாகக் குறிப்பிட்டார்.

“மொரீஷியஸ், அமெரிக்கா, இந்தியாவின் பல்வேறு பகுதி களிலிருந்து ஏராளமான செய்திகள் வந்துள்ளன. மனிதகுலத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அமைதியே மிகவும் முக்கியம் என்ற பண்டைய இந்துத் தத்துவத்தை நமது இரு சிறந்த அமைப்புகளும் ஏற்றுக்கொள்கின்றன” என்றார்.

தியானம், உரையாடல், சமூக சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் மூலம் மக்கள் ஒன்றிணையும்போதுதான், அமைதியும் பரிவும் நிலைத் தன்மையும் கொண்ட உலகம் சாத்தியமாகும் என்ற பொதுவான நம்பிக்கையை ரோட்டரியும் ஹார்ட்ஃபுல்னெஸும் பகிர்ந்துகொள்வதாக அவர் கூறினார்.

மாவட்ட அமைதி மற்றும் மோதல் தீர்வுத் தலைவர் ஜான்சி பிரேமானந்த், உண்மையான அமைதி செயலற்ற விருப்பமல்ல; திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டிய முதலீடு என்று நினைவூட்டினார்.

“மோதல்கள் இல்லாமல் இருப்பது மட்டுமே அமைதியல்ல. தூய குடிநீர், சுகாதாரம், எழுத்தறிவு, பொருளாதார வாய்ப்புகள் ஆகியவையும் இருக்கவேண்டும். இவை அனைத்தும் ரோட்டரி சேவையுடன் பின்னிப்பிணைந்தவை. உள்ளூர்ச் சேவைத் திட்டங்கள், இளைஞர் தலைமைத்துவம், நமது அற்புதமான ரோட்டரி அமைதி மையங்களின் வலையமைப்பு ஆகியவற்றின் மூலம் நம்பிக்கையை வளர்க்கிறோம்” என்றார்.

மாவட்ட பொதுப்பிம்பத் தலைவர் K சேஷசாய் குமார், அமைதி நமக்குள்ளிருந்தே தொடங்குகிறது என்பதை கன்ஹா நிகழ்ச்சி வலுவாக நினைவூட்டியதாகக் கூறினார். “ரோட்டரி செய்வதுபோல், சேவையாலும் கூட்டுச் செயல்பாட்டாலும் அந்த அமைதியை வளர்க்கும்போது, அது நீடித்த தாக்கத்தை உருவாக்குகிறது” என்றார்.■

2027 மாநாடு

உங்கள் முதல் மாநாடாக அமையட்டும்!



கொல்கத்தா ரோட்டேரியர் மது பிஷ்ணு இதுவரை 29 சர்வதேச ரோட்டரி மாநாடுகளில் பங்கேற்றுள்ளார். பார்சிலோனா அவருக்கு முப்பதாவது! ஸ்பானிய நண்பர்கள், ஃபிளமென்கோ நடனம், பாயேயா உணவு ஆகியவற்றை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்.

ஜூன் 26–30 மாநாடு, 2019க்குப் பிறகு ஐரோப்பாவிலும், 2002க்குப் பிறகு பார்சிலோனாவிலும் நடைபெறும் முதல் மாநாடு. இதுவே உங்கள் முதல் அனுபவமாகவும் அமையட்டுமே!

பதினைந்து மாநாடுகளில் பங்கேற்ற பீட்டர் லகாரியாஸுக்கு, 1990 போர்ட்லாந்து மாநாட்டின் கொடி அணிவகுப்பு இன்றும் பரவசமளிக்கிறது.

உலகளாவிய நட்பு, புதிய தொடர்புகள், புகழ்பெற்ற பேச்சாளர்களின் ஊக்கம் ஆகியவையே உறுப்பினர்களை மீண்டும் ஈர்க்கின்றன.

‘நட்புறவு இல்லத்தில்’ திட்ட அரங்குகளைப் பாருங்கள்; உறுப்பினர்களுடன் உரையாடுங்கள். சிறப்பு அமர்வுகளில் வெற்றிகரமான திட்டங்கள், உறுப்பினர் ஈடுபாடு, பருவநிலை மாற்றம், மோதல் தீர்வு குறித்த யோசனைகளைப் பெறுங்கள்.

“ரோட்டரியை மட்டுமல்ல, ஒன்றிணைந்தால் மனிதர்களாக நாம் சாதிக்கக்கூடியவற்றையும் அறிந்துகொள்வீர்கள்” என்கிறார் மிலனைச் சேர்ந்த கிளெமென்டினா ரொசாட்டோ. மாநாடு அவருக்குக் குடும்பத்தில் இணைந்த உணர்வைத் தந்தது.■



RID 2981

RC விஜயபுரம்

தமிழகத்தின் திருவாரூர் மாவட்டம், விஜயபுரம் அரசு மருத்துவமனையில் சங்கம் நடத்திய தாய்ப்பால் விழிப்புணர்வு நிகழ்ச்சியில், 50 கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவுப்பொருள் பைகள் வழங்கப்பட்டன.

Rotary PEOPLE OF ACTION

சங்கச் செய்திகள்





RID 3011

RC டெல்லி சவுத் ஈஸ்ட்

'சக்ஷம் ஏக் அபியான்' தொண்டு நிறுவனத்துடன் இணைந்து, சஃப்தர்ஜங் மருத்துவமனை நோயாளிகளுக்குச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

RID 3012

RC டெல்லி மயூர் விஹார்

கடும் வெயில், மழையிலிருந்து பாதுகாப்பதற்காக டெல்லி மயூர் விஹார், நொய்டா பகுதிகளிலுள்ள சாலையோர வியாபாரிகளுக்குப் பெரிய குடைகள் வழங்கப்பட்டன.





RID 3030

RC கல்வான்

மாற்றுத்திறனாளிகள் 265 பேருக்குச் செயற்கை உறுப்புகள், கால்தாங்கிகள், நடமாட்ட உதவிக்கருவிகள் வழங்குவதற்கான அளவீட்டு முகாம் நடைபெற்றது. புனே பாரத் விகாஸ் பரிஷத் இணைந்து செயல்பட்டது. மகாராஷ்டிரா நேச்சுரல் கேஸ் நிறுவனம் CSR நிதியளித்தது.

RID 3000

RC கரூர் டெக்ஸ்சிட்டி

கரூர் ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து சிறப்புக் குழந்தைகளுக்கான கலைவிழா நடத்தப்பட்டது. பத்துப் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 215 குழந்தைகள் நடனம், பாட்டு, குறுநாடகங்களில் திறமைகளை வெளிப்படுத்தினர். DG R சுப்ரமணி பங்கேற்றார். DGN மீனா சுப்பையா பரிசுகளை வழங்கினார்.





RID 3070

RC பக்வாரா சவுத் ஈஸ்ட்

மறைந்த பிஷன் தாஸ் நினைவாக, அவரது மகன் சுதேஷ் குமாரின் ஆதரவுடன் 100 மாணவர்களுக்குப் பள்ளிப்பைகள் வழங்கப்பட்டன. சுதேஷ் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

RID 3053

RI மாவட்டம்

அல்வாரில் ஒன்பது நாட்கள் நடைபெற்ற மேமோகிராபி பரிசோதனை மற்றும் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியில், 200க்கும் மேற்பட்ட பெண்கள் பரிசோதிக்கப்பட்டனர். RC அல்வார் கிரேட்டரைச் சேர்ந்த அமித் ஷ்யாம்சுகா முகாம்களை ஒருங்கிணைத்தார்.

நிதானம் என்னும் மருந்து

சுரேந்திரா சிங்வி

வேகமே முன்னேற்றம் என்று நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. வேகமாகச் செயல்படவும் சிந்திக்கவும் உற்பத்திசெய்யவும் பழகியுள்ளோம். ஆனால் அதற்கான விலையைப் பற்றி அதிகம் பேசுவதில்லை: ஓய்வில்லாத மனம், முழுமையாகத் தளராத உடல், அமைதியை மறந்துவிட்ட நரம்பு மண்டலம்.

உண்மையான ஓய்வுக்கும் மனத்தெளிவுக்கும் உதவக்கூடிய ஓர் எளிய பயிற்சி இருக்கிறது. பரிந்துரைக்கக்கூட மிகச் சாதாரண மாகத் தோன்றலாம். இதற்குக் கருவிகளோ சந்தாவோ சிறப்பான இடமோ தேவையில்லை. முயற்சிக்க வேண்டும் என்ற எண்ணமும் சுமார் பதினைந்து நிமிடங்களும் போதும்.

பயிற்சி செய்வது எப்படி?

மிகவும் மெதுவாக நடங்கள். மூச்சை மென்மையாகவும் மெதுவாகவும் ஆழமாகவும் விடுங்கள். நீண்ட வெளிமூச்சில் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள். வெளிமூச்சு இயல்பாக நிறைவடையட்டும்; அடுத்த உள் மூச்சை வலுக்கட்டாயமாக இழுக்க வேண்டாம்.

இவ்வளவுதான் பயிற்சி. இந்த நிதானமான நடை, உடலையும் மனதையும் தளர்த்த உதவும். அது எவ்வாறு செயல்படுகிறது என்பதைச் சற்றுப் புரிந்துகொள்வோம்.

உடலில் ஏற்படும் மாற்றம்

நிமிடத்திற்குச் சுமார் 30-50 அடிகள் என்ற மெதுவான நடை, பாதங் களுக்கும் தரைக்கும் இடையிலான தொடர்பைக் கவனிக்கச் செய்கிறது. இயந்திரத்தனமான ஒவ்வோர் அடியும் உணர்வுபூர்வமான செயலாகிறது. வழக்கமான கவலைகள், திட்ட மிடல்கள் ஆகியவற்றிலிருந்து கவனத்தை நிகழ்காலத்திற்குக் கொண்டு வருகிறது.

கடந்ததை மீண்டும் நினைத்துப் பார்ப்பதும், எதிர்காலத்தை மனதிற்குள் ஒத்திகை பார்ப்பதும் குறைகின்றன. இப்போது, இங்கே இருப்பதை உணர்கிறோம்.

கால்களின் சீரான இயக்கம் நிணநீர் ஓட்டத்திற்கும் உதவுகிறது. நிணநீர் மண்டலம், உடலின் திரவச் சமநிலையிலும் நோய் எதிர்ப்பிலும் பங்காற்றுகிறது. இதயத்தைப் போன்ற தனிப் பம்பு அதற்கில்லை; தசை இயக்கமும் சுவாசமும் அதன் ஓட்டத்திற்கு உதவுகின்றன.

மூச்சில் ஏற்படும் மாற்றம்

மெதுவான, வசதியான ஆழ்மூச்சு உடலைத் தளர்த்த உதவலாம். அதிகமாக மூச்சுவிட்டால் அதிக ஆக்சிஜன் கிடைக்கும் என்று நினைக்கிறோம். ஆனால் தேவைக்கு அதிகமாக வேகமாகச் சுவாசிப்பது, ரத்தத்தின் கார்பன் டைஆக்சைடு அளவைக் குறைத்து மயக்கம் போன்ற உணர்வுகளை ஏற்படுத்தலாம். எனவே ஆழ்மூச்சு என்பது வலிந்து அதிகக் காற்றை உள்ளிழுப்பதல்ல.

சுவாசத்தை நிதானப்படுத்துவது உடலின் அமைதியான நிலைக்கு உதவலாம். சுவாச இயக்கம் நிணநீர் (lymphatic fluid) ஓட்டத்திற்கும் துணைபுரிகிறது. மெதுவான நடையும் இயல்பான சுவாசமும் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்கின்றன.

வெளிமூச்சைக் கவனிப்பது ஏன்?

அன்றாட வாழ்க்கையில், உடனடி ஆபத்து இல்லாதபோதும் உடல் எச்சரிக்கை நிலையில் இருக்கலாம். தாடையை இறுக்கிக்கொள்வது, தோள்களை உயர்த்தியிருப்பது, தசைகளை விறைப்பாக்குவது போன்றவற்றை நாம் கவனிக்காமலே செய்கிறோம்.

வெளிமூச்சை மெதுவாக நீட்டித்துக் கவனிப்பது, உடலின் அமைதிப்படுத்தும் செயல்பாட்டிற்கு உதவலாம். இதயத்துடிப்பு நிதானமடையலாம்; தாடையும் தோள்களும் தளரலாம். வராத அவசரநிலைக்காக உடல் தயாராக நிற்பதைச் சற்றுக் குறைக்கலாம்.

இதனால் பதற்றம் உடனடியாக மறைந்துவிடும் என்று உறுதியளிக்க முடியாது. இருப்பினும், தொடர்ச்சியான பயிற்சி சிலருக்கு மனஅமைதியையும் உணர்வுகளை நிதானமாகக் கையாளும் திறனையும் வளர்க்க உதவும்.

உங்களுக்கான அழைப்பு

நீண்டதூரமோ வேகமாகவோ நடக்க வேண்டியதில்லை. இசையோ ஒலிப்பதிவோ சென்றடைய வேண்டிய இலக்கோ அவசியமில்லை.

பாதுகாப்பான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுங்கள். காலமும் உங்களுடன் மெதுவாக நகர்வதுபோல் நடங்கள். காற்றை மென்மையாக வரவேற்பதுபோல் சுவாசியுங்கள். வெளிமூச்சைப் பின்தொடர்ந்து கவனியுங்கள். அது நிறைவடையட்டும். அதன் முடிவில் இயல்பாகத் தோன்றும் சிறிய அமைதியை உணருங்கள்; மூச்சை வலிந்து அடக்காதீர்கள்.

பதினைந்து நிமிடங்கள் பயிற்சிசெய்து, உங்களுக்குள் ஏற்படும் மாற்றத்தைக் கவனியுங்கள். நிம்மதிக்கான வழி எப்போதும் சிக்கலானதாக இருக்க வேண்டியதில்லை.

> நிமிடத்திற்குச் சுமார் 30–50 அடிகள் என்ற மெதுவான நடை, பாதங் களுக்கும் தரைக்கும் இடையிலான தொடர்பைக் கவனிக்கச் செய்கிறது.

பயிற்சிக்கான வழிகாட்டுதல்

நடைவேகம் நிமிடத்திற்கு 30–50 அடிகளாக இருக்கலாம். வசதியாக இருந்தால் நிமிடத்திற்கு 4–6 மூச்சுகள் என்ற மெதுவான அளவை முயற்சிக்கலாம். உள்மூச்சிற்கு நான்கு விநாடிகளும் வெளிமூச்சிற்கு ஆறு முதல் எட்டு விநாடிகளும் எடுத்துக்கொள்ளலாம். எண்ணிக்கையை அடைவதற்காக மூச்சை வற்புறுத்த வேண்டாம்.

சுமார் பதினைந்து நிமிடங்கள் ஒதுக்குங்கள். இயன்றால் சமமான, பாதுகாப்பான இயற்கைத் தரையைத் தேர்ந்தெடுங்கள். வெறுங்காலில் நடப்பது அவசியமில்லை; பாதப் பாதுகாப்பு முக்கியம்.

கிட்டத்தட்ட ஓராண்டாக, தினமும் ஒருமணிநேரத்திற்கு அருகில் நானே இப்பயிற்சியைச் செய்துவருகிறேன். இந்தக் கட்டுரை புத்தகத்திலிருந்து அல்ல; எனது அன்றாட அனுபவத்திலிருந்து பிறந்தது.

கட்டுரையாளர் RC பெங்களூர் ராஜ்மஹால் விலாஸ், RID 3192 உறுப்பினர்.

நினைவில் கொள்ளுங்கள்

- *மிக மெதுவான நடை: கவனத்தை நிகழ்காலத்தில் நிலைநிறுத்தி, நிணநீர் ஓட்டத்திற்கு உதவுகிறது.*
- *மெதுவான, இயல்பான ஆழ்மூச்சு: உடலையும் மனதையும் தளர்த்த உதவலாம்.*
- *கவனத்துடன் நீட்டிக்கும் வெளிமூச்சு: இதயத்துடிப்பை நிதானப்படுத்தவும் இறுக்கத்தைக் குறைக்கவும் உதவலாம்.*
- *வெளிமூச்சின் முடிவிலுள்ள அமைதி: உள்ளார்ந்த நிதானத்தைக் கவனிக்கும் தருணம்.*

Membership and TRF Summary 2026-27

Top 20 Rotary Districts Worldwide
New member addition

Rank	District	Zone	Country	Members
1	3000	5	India	1,435
2	2981	5	India	899
3	9141	22	Nigeria	617
4	3011	4	India	599
5	3141	4	India	586
6	3710	12	Korea	525
7	3080	4	India	498
8	3203	5	India	450
9	3233	5	India	443
10	3170	7	India	426
11	3131	7	India	398
12	3670	12	Korea	398
13	3350	10	India	390
14	3680	12	Korea	380
15	9111	22	Nigeria	368
16	3191	7	India	355
17	3020	7	India	354
18	3182	7	India	354
19	3250	6	India	348
20	9142	22	Nigeria	343

Top 20 Rotaract Districts in India

Rank	District	Zone	Rotaract Clubs	Rotaractors
1	3000	5	152	7,549
2	3233	5	70	5,773
3	3292	6	194	4,794
4	3220	5	95	3,713
5	3141	4	129	3,404
6	3206	5	107	2,202
7	3192	7	89	2,199
8	3150	7	55	2,054
9	3131	7	102	1,930
10	3234	5	74	1,914
11	3080	4	88	1,907
12	3191	7	84	1,809
13	3170	7	140	1,808
14	3203	5	79	1,581
15	3060	4	52	1,460
16	3011	4	74	1,253
17	3030	6	87	1,159
18	3142	4	59	1,132
19	3120	6	64	1,014
20	3231	5	44	959

Rotary Districtwise Ranking (India)
New member addition

Rank	District	Zone	Members
1	3000	5	1,435
2	2981	5	899
3	3011	4	599
4	3141	4	586
5	3080	4	498
6	3203	5	450
7	3233	5	443
8	3170	7	426
9	3131	7	398
10	3191	7	355
11	3020	7	354
12	3182	7	354
13	3250	6	348
14	3231	5	306
15	3192	7	306
16	3142	4	303
17	3150	7	299
18	2982	5	289
19	3120	6	282
20	3292	6	279
21	3234	5	278
22	3181	7	269
23	3090	4	250
24	3132	7	244
25	3060	4	231
26	3212	5	224
27	3206	5	215
28	3291	6	212
29	3240	6	206
30	3012	4	205
31	3070	4	197
32	3110	6	190
33	3030	6	188
34	3055	4	186
35	3053	4	166
36	3262	6	164
37	3056	4	162
38	3211	5	161
39	3220	5	148
40	3204	5	134
41	3205	5	122
42	3040	4	120
43	3261	6	106
44	3100	6	89
45	3160	7	48
Total			**13,724**

Top 10 Districts - TRF Giving

Annual Fund

Rank	Zone	District	Annual Fund ($)
1	7	3150	246,758
2	4	3141	183,535
3	7	3131	162,919
4	4	3080	129,947
5	4	3142	129,002
6	4	3060	114,496
7	6	3250	99,535
8	6	3291	94,308
9	6	3120	90,780
10	7	3132	84,903

PolioPlus Fund

Rank	Zone	District	PolioPlus Fund ($)
1	7	3170	14,612
2	5	3234	13,210
3	7	3191	10,968
4	5	3206	8,093
5	6	3292	7,875
6	7	3020	7,392
7	7	3150	7,137
8	4	3141	6,889
9	6	3240	6,630
10	7	3181	5,871

Endowment Fund

Rank	Zone	District	Endowment Fund ($)
1	6	3291	57,646
2	4	3080	52,083
3	4	3053	50,000
4	5	3233	42,039
5	7	3131	39,069
6	7	3150	38,592
7	4	3141	34,596
8	6	3120	34,450
9	5	3212	30,000
10	7	3182	27,211

Zone Ranking in Implementing 10:20:30 Formula for New Clubs

Rank	Zone	Rotary	Rotaract	Interact
1	5	46	35	246
2	4	42	32	119
3	6	23	45	152
4	7	9	50	170
Total		120	162	687
Target		500	1,000	1,500

Top 20 Giving Districts in India for 2026–27

Rank	District	Zone	Total Contributions ($)
1	4	3141	1,136,629
2	7	3150	363,858
3	5	3234	285,106
4	7	3191	267,166
5	7	3131	262,803
6	4	3142	255,271
7	4	3080	239,425
8	6	3250	164,948
9	6	3291	163,961
10	6	3120	154,736
11	4	3011	152,681
12	7	3132	140,917
13	4	3060	134,583
14	5	3203	117,684
15	5	3233	102,566
16	7	3170	98,081
17	7	3020	90,456
18	5	3205	86,754
19	4	3053	83,111
20	7	3192	81,277

Zonewise Ranking - CSR Credits

Rank	Zone	District	CSR ($)
1	4	3141	569,201
2	4	3142	119,792
3	7	3132	54,534
4	7	3150	53,694
5	4	3011	52,083
6	6	3250	34,092
7	5	3233	31,500
8	5	3234	26,042
9	7	3191	23,750
10	7	3131	22,500

Rotary PEOPLE OF ACTION

ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

புனேயில் வாழ்வாதாரம் வளர்க்கும் பால் பண்ணைத் திட்டம்

RC பூனா நார்த், RID 3131, 2005 முதல் புனே மாவட்டத்தின் மாவல், முல்ஷி, கேட், அம்பஜோகாய் வட்டங்களிலுள்ள 200 கிராமங்களில் 2,460-க்கும் மேற்பட்ட பெண்களுக்குக் கறவைப் பசுக்களை வழங்கியுள்ளது. அவை இனப்பெருக்கமாகி, தற்போது 50,000-க்கும் மேற்பட்ட கால்நடைகளாகப் பெருகியுள்ளன. நாள்தோறும் ஐந்து லட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது.

"கடந்த இருபதாண்டுகளில் எங்களது மொத்த முதலீடு ரூ.9.74 கோடி" என்கிறார் சங்கத் தலைவர் தீபக் தக்கர். ஒவ்வொரு பயனாளிக்கும் நாளொன்றுக்குப் பத்து லிட்டருக்கும் அதிகமாகப் பால் தரும் பசு வழங்கப்பட்டுள்ளது. இது கிராமப்புறக் குடும்பங் களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை உறுதிசெய்கிறது.

அறிவியல்பூர்வமான கால்நடை இனப்பெருக்க முறைகளைச் சங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. பால் உற்பத்தியை அதிகரிக்கவும் நிலைத்த பண்ணை நடைமுறை களைப் பின்பற்றவும் பெண்களுக்குப் பால் பண்ணை மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், 300 பால் சேகரிப்பு மையங்கள் 50,000-க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பளிப்பதுடன், இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட நுகர்வோருக்குப் பசும் பால் வழங்குகின்றன.



RC பூனா நார்த் வழங்கிய பசுவுடன் பயனாளி.



புவனேஸ்வர் ஏகாம்ர நிலயா முதியோர் இல்லத்தில் கண் பரிசோதனை.

முதியோருக்குக் கண் பரிசோதனை

மூத்த குடிமக்கள் தினத்தையொட்டி ஆகஸ்ட் 21-ல், மாவட்டம் 3262 ரோட்டரி மின்னணு சங்கம், ஏகாம்ர நிலயா முதியோர் இல்லத்தில் கண் பரிசோதனை முகாம் நடத்தியது. PDG ஜெயஸ்ரீ மொஹந்தியின் 'விஷன் ஹோப் எக்ஸ்பிரஸ்' முயற்சியுடன் இணைந்த ரோட்டரி நடமாடும் கண் பராமரிப்புச் சேவை மூலம் 55 பேருக்குப் பரிசோதனை செய்யப்பட்டது.

இவர்களில் 11 பேருக்குக் கண்புரை அறுவைச் சிகிச்சை தேவைப்படுவது கண்டறியப்பட்டது. இல்லவாசிகளுக்கு உணவும் புத்தாடைகளும் வழங்கிய சங்கம், சூரியசக்தி நீர் சூடாக்கியையும் நிறுவியது.

சோலாப்பூர் கிராமப்புறப்பள்ளியில் டிஜிட்டல் வகுப்பறை

‘ஹேப்பி ஸ்கூல்’ திட்டத்தில் RC சோலாப்பூர் ஸ்மார்ட் சிட்டி, RID 3132, குசூர் நியூ இங்கிலீஷ் பள்ளிக்கு டிஜிட்டல் கற்றலுக்கான ஸ்மார்ட் தொலைக்காட்சியை வழங்கியது. P P படேல் & கோ நிறுவனத்தின் CSR மானியம் திட்டத்திற்கு உதவியது.

மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கப் பட்டன. கழிவுகளைப் பிரிக்க இரண்டு தொட்டிகளும் கைகழுவும் அமைப்பும் நிறுவப் பட்டன. மின்னணுப் பாடப்பொருள்கள் மூலம் மாணவர்கள் பங்கேற்புடன் கற்கத் தொலைக்காட்சி உதவும்.



மிதிவண்டிகளுடன் மாணவிகள்; உடன் சங்கத்தலைவர் பசவராஜ் பிராஜ்தார் (வலமிருந்து ஆறாவது).

பார்வைத்திறன் குறைபாடுள்ளோருக்கான RYLA

மாவட்ட RYLAவின் கீழ், RC விஷ்ராம்பாக், RID 3170, மிராஜிலுள்ள மறைந்த சௌ சுசீலாபாய் D கோதாவத் பார்வையற்றோர் உண்டுறைவிடப் பள்ளியின் 40 மாணவர்களுக்கு இருநாள் பரிவுணர்வு மற்றும் இயக்கத்திறன் பயிலரங்கை நடத்தியது.

பார்வைத்திறன் குறைபாடுள்ளவர்கள் அன்றாடம் செய்யும் பணிகளை ரோட்டேரியர்களும் ரோட்டராக்டர்களும் அனுபவித்தனர். இதனால் அவர்களின் சவால்களையும் தன்னம்பிக் கையையும் புரிந்துகொண்டனர்.

தொட்டும் முகர்ந்தும் பழங்கள், காய்கறிகள், தானியங்களை அடையாளம் காணுதல், வெள்ளைக் கைத்தடியுடன் சுயமாக நடப்பது, படிக்கட்டுகளில் பாதுகாப்பாக ஏறுவது போன்ற வாழ்க்கைத் திறன்களை மாணவர்கள் கற்றனர்.

முதல்முறையாக வணிக வளாகத்திற்குச் சென்ற மாணவர்கள், ஆடைக்கடைகளில் துணிகளைத் தொட்டு அவற்றின் தன்மையையும் வடிவமைப்பையும் அறிந்தனர். மின்தூக்கி, நகரும் படிக்கட்டுகளைப் பயன்படுத்தவும் பழகினர். குழுவாகச் செயல்படும் திறனை வளர்க்கும் விளையாட்டுகளும் நடைபெற்றன.■



வணிக வளாகத்தில் பார்வைத்திறன் குறைபாடுள்ள மாணவர்கள்.

ஒவ்வொரு வயதிலும் போதுமான புரதம்

கீதா மத்தாய்



திடீரென எல்லோரும் புரதத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். முன்பு உடற் பயிற்சிக்கூடங்களில் கட்டழகர்கள், பளுதூக்குவோர், விளையாட்டு வீரர்கள் மத்தியில் அதிகம் பேசப்பட்ட புரதம், இப்போது பொதுமக்களின் கவனத்தையும் பெற்றுள்ளது. அரிசி அல்லது கோதுமையை அதிகமாகவும், புரத உணவுகளைக் குறைவாகவும் கொண்ட இந்திய உணவுமுறை, சிலரின் தேவையை நிறைவேற்றாமல் போகலாம். எனினும், நன்கு திட்ட மிட்ட சைவ உணவுமுறையிலும் போதுமான புரதத்தைப் பெற முடியும்.

வைட்டமின்களும் தாதுக்களும் சிறிய அளவில் தேவைப்படும் நுண்சத்துகள். புரதமோ அதிக அளவில் தேவைப்படும் பெருஞ்சத்து. உடல் திசுக்களை உருவாக்கவும் பராமரிக்கவும் சீரமைக்கவும் உதவுகிறது. நோய் எதிர்ப்புச் செயல்பாட்டை ஆதரிப்பதுடன், முக்கியமான பல ஹார்மோன்கள், நொதிகளின் அங்கமாகவும் உள்ளது. வளர்ச்சி, காயங்கள் ஆறுதல், நோய் அல்லது காயத்திலிருந்து மீள்வதற்கும் புரதம் அவசியம்.

யாருக்கு எவ்வளவு தேவை?

வயது, உடல் இயக்கம், ஆரோக்கிய நிலையைப் பொறுத்துப் புரதத் தேவை மாறும். குழந்தைகளின் வளர்ச்சிக்குப் புரதம் தேவை என்றாலும், எல்லா வயதினருக்கும் ஒரே அளவு பொருந்தாது. பெரும்பாலான ஆரோக்கியமான பெரியவர்களுக்கு, உடல் எடையின் ஒவ்வொரு கிலோவிற்கும் தினமும் சுமார் 0.8 கிராம் பரிந்துரைக்கப்படுகிறது. அதாவது, 70 கிலோ எடையுள்ளவருக்கு சுமார் 56 கிராம்.

தொடர்ந்து உடற்பயிற்சி செய்பவர் களுக்கு அதிகம் தேவைப்படலாம். தீவிரமான சகிப்புத்தன்மை அல்லது வலிமைப் பயிற்சியில் ஈடுபடுவோருக்கு, பயிற்சியின் தீவிரம், இலக்குகளைப் பொறுத்து தினமும் கிலோவிற்கு 1.2–2.0 கிராம் தேவைப்படலாம். ஒருமணிநேரம் உடற்பயிற்சி செய்வதாலேயே இந்த வரம்பின் அதிகபட்ச அளவு தேவைப்படும் என்பதில்லை.

நாளின் பெரும்பகுதியை அமர்ந்தே கழிப்பவர்களுக்கும் தினசரி உடற்பயிற்சி பயனளிக்கும். இருப்பினும், நீண்டநேரம் அமர்ந் திருப்பதால் கூடுதல் உடல்நல அபாயங்கள் ஏற்படுகின்றன. மேசைப் பணி செய்பவர்கள் இடையிடையே எழுந்து நடந்து, தொடர்ச்சியான செயலின்மையைத் தவிர்க்கவேண்டும்.

முதுமையில் தசைகளைப் பாதுகாப்போம்

வயதாகும்போது தசைகளைப் பராமரிப்பது மிகவும் முக்கியம். வயதுடன் தசைவலிமையும் தசையின் அளவும் படிப்படியாகக் குறைவது ‘சார்கோபீனியா’ எனப்படுகிறது. பலவீனம், மெதுவான நடை, நாற்காலியிலிருந்து எழுவதில் சிரமம் ஏற்படலாம். பாதிப்பு அதிகரிக்கும்போது சமநிலையும் இயக்கத்திறனும் குறைந்து, விழுதல், எலும்புமுறிவு, பிறரைச் சார்ந்திருத்தல் போன்ற அபாயங்கள் அதிகரிக்கும். வலிமைப் பயிற்சி தசைகளையும் உடலின் செயல்திறனையும் பாதுகாக்க உதவும்.

வயதுசார்ந்த மாற்றங்கள், உடல் இயக்கமின்மை, ஹார்மோன் மாற்றங்கள், நாள்பட்ட நோய்கள் ஆகியவை இதற்குப் பங்களிக்கின்றன. ஊட்டச்சத்துக் குறைபாடும் நிலைமையை மோசமாக்கலாம். ஆடும் அல்லது விழுந்த பற்கள், சரியாகப் பொருந்தாத செயற்கைப் பற்கள், வாய்வலி, விழுங்குவதில்



சிரமம், பசியின்மை ஆகியவற்றால் சாப்பிடுவது கடினமாகலாம். சில மருந்துகளும் பசியையும் சுவையுணர்வையும் பாதிக்கின்றன. இவற்றை முதுமையின் தவிர்க்க முடியாத விளைவுகளாக ஏற்காமல், உரிய கவனம் செலுத்தவேண்டும்.

ஆரோக்கியமான முதியவர்கள், உடல் எடையின் ஒவ்வொரு கிலோ விற்கும் தினமும் சுமார் 1.0–1.2 கிராம் புரதம் பெறப் பொதுவாக அறிவுறுத்தப்படுகிறார்கள். நோயின் போதும் குணமடையும்போதும் தேவை அதிகரிக்கலாம். குறிப்பாகச் சிறுநீரக நோய் இருந்தால், தனிப் பட்ட மதிப்பீடு அவசியம். ஒவ்வொரு வேளை உணவிலும் புரத உணவு களைச் சேர்ப்பது தினசரி இலக்கை அடைய உதவும்.

ஆரோக்கியமான பெரியவர் களின் மொத்த தினசரி கலோரி களில் பொதுவாக 10–35 சதவீதம் புரதத்திலிருந்து கிடைக்கலாம். எனினும், சதவீதத்தைவிட கிராம் களில் தேவையைக் கணக்கிடுவது நடைமுறைக்கு எளிது.

உணவில் உள்ள புரதம்

உணவின் அளவைப் புரிந்துகொள்வது முக்கியம். பெரிய முட்டையில் சுமார் 6–7 கிராம் புரதமும், முட்டை வெள்ளைக்கருவில் 3–4 கிராமும் உள்ளன. சமைத்த கோழி நெஞ்சிறைச்சி 100 கிராமில் சுமார் 30 கிராம்; அதே அளவு சமைத்த மீனில் பொதுவாக 20–25 கிராம் புரதம் கிடைக்கும்.

பருப்புகள், பயறுகள், கொண்டைக் கடலை, சோயாபீன்ஸ், டோஃபு, பால், தயிர், பனீர் ஆகிய சைவ உணவுகளும் சிறந்த ஆதாரங்கள். கொட்டைகள், விதைகளிலும் புரதம் உண்டு; ஆனால் கலோரிகளும் அதிகம். அரிசி, சப்பாத்தியில் குறைந்த அளவு புரதம் இருப்பதால், அவற்றுடன் புரதம் செறிந்த உணவுகளைச் சேர்க்கவேண்டும்.

உணவின் வகை, அளவு, தயாரிப்பு முறையால் சத்துமதிப்பு மாறும். சமைத்த பருப்பு 100 கிராமில் சுமார் 7–9 கிராம் புரதம் இருக்கலாம். நீர்த்த பருப்புக் குழம்பில் குறைவாக இருக்கும். பால் 100 மில்லியில் சுமார் 3–3.5 கிராம் கிடைக்கும்.

சமைக்காத, சமைத்த உணவுகளின் எடைகளைக் குழப்பக்கூடாது. சமைக்கும்போது பருப்பு தண்ணீரை உறிஞ்சுவதால், 100 கிராமிற்கான புரத அளவு குறைகிறது. ஆனால் முதலில் எடுத்த பருப்பிலிருந்த புரதம் அதனால் அகன்றுவிடுவதில்லை.

ஊட்டச்சத்துத் தரவுத்தளங்கள், உணவுப் பொட்டல விவரங்கள், செயலிகள் ஆகியவை உட்கொள்ளும் அளவைக் கணக்கிட உதவும். இணையம் அல்லது AI உருவாக்கும் அட்டவணைகளின் புள்ளிவிவரங்களை நம்பகமான ஆதாரங்களுடன் ஒப்பிடுங்கள். குறிப்பாக, உணவின் அளவோ சமையல் முறையோ தெளிவில்லாதபோது கவனம் தேவை.

பசி குறைந்த முதியவர்களுக்குப் பெரிய உணவளவுகள் சிரமமாகலாம். முட்டை, தயிர், பனீர், கெட்டியான பருப்பு போன்ற செறிவான உணவுகளைச் சிறிய அளவுகளில் உண்ணலாம். லாக்டோஸ் ஒவ்வாமை உள்ளவர்களுக்குச் சாதாரணப் பாலைவிடத் தயிர் அல்லது லாக்டோஸ் இல்லாத பால் ஏற்றதாக இருக்கலாம்.

ஆறு முட்டை வெள்ளைக் கருக்களில் சுமார் 20–24 கிராம் புரதம் கிடைக்கும். இது பெரும்பாலான பெரியவர்களின் தினசரித் தேவையில் ஒரு பகுதிதான். முழு முட்டையிலும் பயனுள்ள ஊட்டச்சத்துகள் உள்ளதால், எல்லா மஞ்சள்கருக் களையும் நீக்கவேண்டிய பொதுவிதி இல்லை.

துணைப்பொருள்களும் உடற்பயிற்சியும்

சாதாரண உணவு தேவையை நிறைவேற்றாதபோது புரதத் துணைப் பொருள்கள் உதவலாம். பொடிகள், உணவுப் பட்டைகள், தயார்நிலைப் பானங்கள் ஆகிய வடிவங்களில் கிடைக்கின்றன. வே, சோயா போன்ற தயாரிப்புகள் உணவிலுள்ள பற்றாக்குறையை ஈடுசெய்யலாம். ஒரு கரண்டிப் பொடியின் எடையும் அதிலுள்ள புரதத்தின் அளவும் ஒன்றல்ல; விவரச்சீட்டைக் கவனமாகப் படியுங்கள்.

துணைப்பொருள்கள் அனை வருக்கும் அவசியமில்லை. அவற்றின் பயன், ஏற்கெனவே புரதப் பற்றாக் குறை இருந்ததா என்பதையும் சார்ந்துள்ளது. உயர் ரத்த அழுத்தம், அதிக டிரைகிளிசரைடு, நீரிழிவு ஆகியவற்றுக்கான சிகிச்சையாக அவற்றைக் கருதக்கூடாது. சிலவற்றில் சர்க்கரையும் கலோரிகளும் அதிகமிருக்கலாம்.

தசைகளைப் பாதுகாக்கப் புரதத் துடன் உடற்பயிற்சியும் அவசியம். பளுதூக்குதல், எதிர்ப்புப் பட்டைகள், பொருத்தமான உடலெடைப் பயிற்சிகள், நாற்காலியிலிருந்து மீண்டும் மீண்டும் எழுதல் உதவும். முதியவர்களுக்கு ஏரோபிக், சமநிலைப் பயிற்சிகளும் பயனளிக்கும்.

இரண்டு அல்லது மூன்று கிலோ டம்பெல் சிலருக்குப் பொருந்தலாம்; மற்றவர்களுக்கு அதிகமாகவோ குறைவாகவோ இருக்கலாம். வலிமை அதிகரிக்கும்போது எதிர்ப்பையோ பயிற்சி எண்ணிக்கையையோ படிப்படியாக அதிகரிக்கலாம். பலவீனம், மூட்டு அல்லது சமநிலைப் பிரச்னைகள் உள்ளவர்களுக்குக் கண்காணிப்புடன் பயிற்சி உதவும்.

நம்பகமான தயாரிப்பாளர்களின் துணைப்பொருள்களைத் தேர்ந் தெடுங்கள். தேவையற்ற தூண்டு பொருள்கள், வெளியிடப் படாத உட்பொருள்கள், ஹார்மோன் போன்ற விளைவுகளுக்கான வாக்குறுதிகள் உள்ளவற்றைத் தவிருங்கள். உணவு, துணைப்பொருள் இரண்டிலுமுள்ள புரதத்தைக் கணக்கிடுங்கள். அதிகம் என்பதே சிறந்தது அல்ல.

நாள்பட்ட சிறுநீரக நோயுள்ளவர் களுக்குத் தனிப்பட்ட ஆலோசனை தேவை. அதிகப் புரதம் சிறுநீரகங் களின் பணிச்சுமையை அதிகரிக்க லாம். நோய்நிலை, டயாலிசிஸ் சிகிச்சையைப் பொறுத்துத் தேவை மாறும். ஆனால் ஆரோக்கியமான சிறுநீரகமுள்ளவர்களுக்கு உரிய புரதத் துணைப்பொருள் கட்டாயம் சிறுநீரக நோயை ஏற்படுத்தும் என்பது தவறு.

போதுமான புரதம், ஒட்டுமொத்த ஊட்டச்சத்து, தொடர்ச்சியான வலிமைப் பயிற்சி ஆகியவை இணைந்தே வயதாகும்போதும் வலிமை, இயக்கத்திறன், சுயசார்பைப் பேணுகின்றன.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவர் மற்றும் Staying Healthy in Modern India என்ற புத்தகத்தின் ஆசிரியர் ஆவார்.



RID 3170

RC பெல்காம் மிட் டவுன்

பைல்ஹொங்கல் வட்டம், கொலதூர் கிராமத்தில் ரூ.1 லட்சம் GG திட்டத்தில் சூரியசக்தி நீரேற்றும் அமைப்பையும் கோயில்களில் சூரியசக்தி விளக்குகளையும் DGE அசோக் நாயக் திறந்துவைத்தார்.

Rotary PEOPLE OF ACTION

சங்கச் செய்திகள்





RID 3182

RC கொனந்தூர்

சுயதொழிலை ஊக்குவிக்கும் ஐந்துநாள் சேலைக் குஞ்சம் தயாரிப்புப் பயிற்சியில் 45 பெண்கள் பங்கேற்றனர். பேங்க் ஆஃப் பரோடா, கர்நாடகத் தையல்காரர்கள் சங்கத்தின் தீர்த்தஹள்ளி அமைப்பு ஆகியவை ஆதரவளித்தன.

RID 3234

RC நங்கநல்லூர் எலைட்

நகர்ப்புறப் போக்குவரத்தில் ஆட்டோ ஓட்டுநர்களின் பங்களிப்பையும் அர்ப்பணிப்பையும் பாராட்டி, விஜயதசமியன்று 25 பேருக்குப் புத்தாடைச் சட்டைகள் வழங்கப்பட்டன. J சூரியநாராயணா நிதியுதவியளித்தார். சங்கத்தலைவர் மீனா சதீஷ் முயற்சியை வழிநடத்தினார்.





RID 3240

RC திமாபூர்

சுமுகெடிமா காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்களுக்கும் உள்ளூர்வாசிகளுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் RO சுத்திகரிப்பு அமைப்பைக் கூடுதல் DCP வேனி வேசே திறந்துவைத்தார்.

RID 3181

RC பெல்தங்கடி

முன்னாள் தலைவர் சரத் பத்வெத்நாயாவின் நிதியுதவியில், பொருளாதாரத்தில் பின்தங்கிய இரு மூதாட்டிகளுக்கு ரூ.7.5 லட்சம் மதிப்பிலான குறைந்த செலவு வீடுகள் வழங்கப்பட்டன.





RID 3291

RC ஜோத்பூர் கார்டன்ஸ் கல்கத்தா

பார்வைத்திறன் குறைபாடு உள்ளோருக்கான அகில வங்காள சதுரங்கப் போட்டியில் 30 வீரர்கள் பங்கேற்றனர். தொட்டுணரக்கூடிய மேடான கட்டங்கள் கொண்ட பலகைகளில் போட்டிகள் நடை பெற்றன. சதுரங்க கிராண்ட்மாஸ்டர் திப்யேந்து பருவா நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யச் சங்கத்திற்கு உதவினார்.

RID 3261

RC தாமோ கிரேட்டர்

அரசு கமலா நேரு மகளிர் கல்லூரியில் பயன்படுத்தப்பட்ட சானிட்டரி நாப்கின்களை எரித்து அழிக்கும் கருவி நிறுவப்பட்டது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்



நீரைப் போற்றுவோம்; வீணாவதைத் தடுப்போம்

பிரீத்தி மெஹ்ரா

உணவகத்தில் எனக்கு அடுத்த மேசையில் நால்வர் அமர்ந்திருந்தனர். அவர்கள் கேட்ட தண்ணீர் பாட்டிலைக் கொண்டுவந்த பணியாளர், நான்கு குவளைகளிலும் ஊற்றினார். நன்றாகச் சாப்பிட்ட அவர்கள், தண்ணீரை மட்டும் சிறிதுசிறிதாக அருந்தினர். பணத்தைச் செலுத்திவிட்டுப் புறப்பட்டபோது, குவளைகள் அனைத்திலும் பாதியளவு தண்ணீர் இருந்தது. மேசையைச் சுத்தப்படுத்திய பணியாளர், அந்தத் தண்ணீரைக் கழுவுதொட்டியில் கொட்டினார். எவ்வளவு வீணடிப்பு!

வருத்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன். குவளைகளிலிருந்த தண்ணீரைக் குடித்துவிட்டுச் செல்லுமாறு அவர்களிடம் கேட்டிருக்கலாமோ? ஆனால் அது தேவையற்ற தலையீடாக இருந்திருக்கும். எனவே, இந்தப் பத்தியின் மூலம் வாசகர்களிடம் சொல்ல விரும்புகிறேன்: தண்ணீரை வீணாக்குவது நல்ல பழக்கமல்ல. குறிப்பாக, கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை நெருங்குவதாக நிபுணர்கள் எச்சரிக்கும் இக்காலத்தில்! இந்தாண்டின் குறைவான மழையால், கடந்த பத்தாண்டுகளில் மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறைகளில் ஒன்றை நாடு எதிர்கொள்கிறது.

இந்தியா முழுவதும் 178 முக்கிய நீர்த்தேக்கங்களைக் கண்காணிக்கும் மத்திய நீர் ஆணையத்தின் (CWC) அண்மைய தரவுகள் கவலையளிக்கின்றன. பருவமழை முடிவில் அவற்றின் மொத்தப்பயன் பாட்டுக்குரிய நீர்இருப்பு 132.734 பில்லியன் கனமீட்டராக இருந்தது. கடந்தாண்டின் 166.856 பில்லியன் கனமீட்டரைவிட இது மிகவும் குறைவு. பத்தாண்டு சராசரியான 151.118 பில்லியன் கனமீட்டருக்கும் கீழே உள்ளது. குளிர்காலப் பயிர்களுக்கு விவசாயிகளுக்குத் தண்ணீர் தேவைப்படும் நிலையில், இந்த இருப்பு நம்பிக்கையளிப்பதாக இல்லை.

இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) கணிப்பையும் சேர்த்துப் பார்த்தால், சவால் தெளிவாகிறது. அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான பருவமழைக்குப் பிந்தைய மழைப்பொழிவும் இயல்பை விடக் குறையக்கூடும். இதனால் நீர்த்தேக்கங்கள் மீண்டும் நிரம்புவது பாதிக்கப்படுவதுடன், மண்ணின் ஈரப்பதமும் நிலத்தடி நீர்மட்டமும் குறையலாம். பயிர்களுக்குப் பாசனம் அளிப்பதே பெரும் பிரச்னையாகலாம்.

தீர்வுகளைத் தேடி இணையத்தில் படித்தபோது, கன்சர்ன் வேர்ல்ட்வைட் அமைப்பின் கருத்துகள் கவனத்தை ஈர்த்தன. உலகளாவிய நிலையை அது விவரிக்கிறது: “உலக மக்கள் தொகையில் குறைந்தது 50 சத

வீதத்தினர் ஆண்டில் ஒரு மாதமாவது கடுமையான நீர்நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும் குடிநீர் வசதி 26 சதவீதத்தினருக்கும், போதிய சுகாதார வசதிகள் 41 சதவீதத்தினருக்கும் இல்லை. 2050-க்குள் உலக மக்களில் 75 சதவீதத்தினரை வறட்சி பாதிக்கக் கூடும்."

புள்ளிவிவரங்கள் அதிர்ச்சியளிக் கின்றன. சவால் பெரியதுதான். எனினும், நடைமுறையில் பலனளித்த தீர்வுகளும் இருக்கின்றன.

லாரிகளில் தண்ணீர் விநியோகம்

நெருக்கடியைச் சமாளிக்கும் மிக விரைவான தற்காலிக வழிகளில் ஒன்று லாரிகள் மூலம் தண்ணீர் வழங்குவது. அகதிகள் முகாம்களுக்கும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி களுக்கும் இவ்வாறு தண்ணீர் கொண்டுசெல்லலாம். செலவு அதிகம்; நிரந்தரத் தீர்வுமல்ல. ஆனால், கடுமையான சூழலில் உயிர்களைக் காப்பாற்றும் இடைக்கால உதவியாக அமையும்.

உப்புநீக்கம், சுத்திகரிப்பு மாத்திரைகள்

பாதுகாப்பான குடிநீர் கிடைக்காத இடங்களில், குடிப்பதற்கு ஏற்றதல்லாத நீர் கிடைக்கலாம். அதைச் சுத்திகரித்துப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராயவேண்டும். கடல்நீருக்கு எடுத்துச்செல்லக்கூடிய சிறிய உப்புநீக்கக் கருவிகளையோ பெரிய அளவிலான உப்புநீக்க முறைகளையோ பயன்படுத்தலாம். நன்னீரில் நோய் பரப்பும் நுண்ணுயிரிகளை அழிக்கச் சுத்திகரிப்பு மாத்திரைகள் உதவும். டைபாய்டு, காலரா போன்ற நீர்வழித் தொற்றுகளைக் கட்டுப்படுத்த இவை பயன்படுகின்றன.

இருக்கும் நன்னீர் ஆதாரங்களைப் பாதுகாப்போம்

ஒவ்வொரு முறையும் புதிய நீராதாரத்தை உருவாக்க வேண்டிய தில்லை. ஏற்கெனவே உள்ளதைப் பாதுகாப்பதே சில சமயங்களில் சிறந்த தீர்வு. எளிய பாதுகாப்புக் கட்டமைப்புகள் மூலம் மனிதர்கள், விலங்குகளின் செயல்பாடுகளால் நீராதாரங்கள் மாசடைவதைத் தடுக்கலாம். சுற்றுப்புறத்தைப் பாதுகாப்பது நீண்டகாலத் தூயநீர் கிடைப்பை உறுதிசெய்ய உதவும்.

கசிவுகளையும் வீணாவதையும் தடுப்போம்

வீட்டுக் குழாய்களிலும் பெரிய நீர்விநியோகக் கட்டமைப்புகளிலும் கசிவுகளை அடைப்பது, இருக்கும் தண்ணீரைச் சேமிக்க உதவும். எங்கே பழுது இருக்கிறது என்பது உள்ளூர் மக்களுக்குப் பெரும்பாலும் தெரியும். உரிய தொழில்நுட்ப, நிதியுதவியுடன் தேவையான சீரமைப்புகளில் அவர்கள் பங்கேற்கலாம். சிறிய கசிவுகளையும் அலட்சியப்படுத்தக் கூடாது.

மழைநீர் சேகரிப்பு

போதிய மழை பெய்யும் பகுதிகளில், குறைந்த தொழில்நுட்பமும் செலவும் கொண்ட தீர்வு மழைநீரைச் சேகரித்துச் சேமிப்பதுதான். கூரை போன்ற பரப்புகளில் விழும் நீரைத் தொட்டிக்குக் கொண்டு செல்ல வழியமைக்கலாம். உரிய சுத்தி கரிப்புக்குப் பிறகு குடிநீராகவும் பயன் படுத்தலாம். விவசாயம், கால்நடைகள், பள்ளிகள், மருத்துவ மனைகளுக்கும் இந்த நீர் பயன்படும். நீர்ப்பற்றாக்குறை நிலவும் நாடுகளில் அதிக நீரைப் பயன்படுத்தும் விவசாயத்திற்கு இது குறிப்பாக உதவலாம். சமூகத்தினரே இத்தகைய அமைப்புகளை எளிதாக நிர்வகிக்க முடியும்.

நீர் மேலாண்மைக் குழுக்கள்

உள்ளூர் நீர்விநியோக அமைப்புகளுக்கு மக்களே பொறுப்பேற்கும் போது, மிகவும் தேவைப்படுவோருக்குத் தண்ணீர் கிடைப்பது மேம்படும். உள்ளூரில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட நீர் மேலாண்மைக் குழுக்கள், நீர்வளங் களைக் கண்காணித்து நிர்வகிக்கலாம். நீராதாரங்களைப் பராமரிப்பதில் சமூகத்தின் பங்கேற்பு முக்கியம்.

கழிவுநீர் வெளியேற்றத்தைத் தடுப்போம்

நீர் மாசுபாட்டால் ஆண்டுதோறும் சுமார் பத்து லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். தனிநபர்களாக இதை முழுமையாகத் தீர்க்க முடியாது. ஆனால் ஒன்றிணைந்து, நீர் நிலைகளில் கழிவுநீர் கொட்டுவதைத் தடை செய்யவும் கட்டுப்பாடுகளை அமல் படுத்தவும் வலியுறுத்தலாம். பிற மாசுபடுத்தும் நடவடிக்கைகளையும் தடுக்கவேண்டும்.

தேசிய அளவில் கட்டமைப்பை மேம்படுத்துவோம்

நிர்வாக அமைப்புகள் பலவீனமாக உள்ள நாடுகளில், தண்ணீர், துப்புரவு, சுகாதாரச் சேவைகளை வழங்கப் போதிய அரசுக் கட்டமைப்போ செயல்திறனோ இருப்பதில்லை. அது நிலைமைக்கான விளக்கமாக இருக்கலாம்; பொறுப்பைத் தவிர்ப் பதற்கான காரணமாக இருக்கக்கூடாது. தேவையான கட்டமைப்புகளை மேம்படுத்துவது அவசியம்.

இவையெல்லாம் சரி. தனிப்பட்ட முறையில் நாம் என்ன செய்யலாம்? முதலில், உணவகத்தில் உங்கள் குவளையில் ஊற்றப்பட்ட தண்ணீரை வீணாக்காதீர்கள். இன்னும் சிறந்த வழி, குடிக்கக்கூடிய அளவிற்கு மட்டும் ஊற்றிக்கொள்வதுதான். அப்போது அது கழுவுதொட்டியில் கொட்டப்பட்டுக் கழிவுநீருடன் கலக்காது.

தினமும் இருமுறை பல் துலக்குவது மிகவும் முக்கியம். ஆனால் துலக்கும் போது குழாயைத் திறந்துவிடாதீர்கள். கணிசமான தண்ணீர் வீணாகிறது. அதேபோல, குளிக்கும்போது வெந்நீர் வருவதற்காகக் காத்திருந்தால், ஷவருக்குக் கீழே வாளியை வையுங்கள். அதில் சேகரிக்கும் தண்ணீரைச் செடிகளுக்கு ஊற்றவோ வீட்டைத் துடைக்கவோ பயன்படுத்தலாம்.

சலவை இயந்திரத்தில் ஒன்று அல்லது இரண்டு துணிகளுக்காகத் தனித்தனியாகச் சலவை செய்யாதீர்கள். துவைக்க வேண்டிய துணிகளைச் சேர்த்து வைத்துத் துவையுங்கள். தண்ணீரும் மின்சாரமும் மிச்சமாகும்.

சிறிய கசிவுகளைக் கவனிக்காமல் விடாதீர்கள். சொட்டும் குழாயும் ஒழுகும் நீர்க்குழாயும் பெருமளவு தண்ணீரை வீணாக்கலாம்.

இறுதியாக, உங்கள் சாப்பாட்டு மேசையில் பாதித் தண்ணீருடன் குவளையை விட்டுச்செல்லாதீர்கள். தேவையான அளவு ஊற்றுங்கள்; ஊற்றியதை வீணாக்காதீர்கள்!

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சுழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதி வருகிறார்.

காதலும் வாழ்வும்: அறிவுடனும் உணர்வுடனும்

உலகின் போக்குகளைப் புரிந்துகொள்ள உதவும், எளிதாக வாசிக்கக்கூடிய நாவல்கள்.




சந்தியா ராவ்

ஜேன் ஆஸ்டனுக்கு உலகெங்கும் பெரும் வரவேற்பு இருக்கிறது. 'தி காமன் ரீடர்' இதழில் 2025 டிசம்பரில் வெளியான கட்டுரையில், ஹென்றி ஆலிவர் இதற்கான காரணத்தை விளக்குகிறார். வணிகமயமான சமூகத்தில் நல்லவர்களாகவும் மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் வாழ்வது எப்படி என்ற அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கவே ஆஸ்டன் நவீன நாவலை உருவாக்கினார் என்கிறார். அவரது நாவல்களின் கேள்விகள் இன்றும் நம் வாழ்க்கையின் மையத்தில் உள்ளன.

ஆனால் இந்தப் பத்தி ஆஸ்டனைப் பற்றியதல்ல; அவரது தீவிர ரசிகையான உஸ்மா ஜலாலுதீனைப் பற்றியது. அண்மையில் வாசித்த 'ஆயிஷா அட் லாஸ்ட்', 'ஹனா கான் கேரீஸ் ஆன்' இரண்டையும் ஆஸ்டனுக்கு அவர் செலுத்தும் மரியாதையாகக் கருதலாம்.

பண்பாடுகள் தொடர்ந்து மோதிக்கொள்வதாகத் தோன்றும் இன்றைய உலகில் வாழ்வது குறித்து இந்தக் கனடிய எழுத்தாளர் எழுதுகிறார். பல மொழிகள், இனங்கள், மதங்கள், பண்பாடுகள் ஒன்றிணைந்த கனடா, பலருக்கும் புகலிடமாகியுள்ளது. உஸ்மா தனக்குத் தெரிந்த, தான் அனுபவிக்கும் உலகையே கதையாக்கு கிறார்.



ஆயிஷா இருபதுகளின் இறுதியிலுள்ள கவிஞர்; பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றுகிறார். சமூகத்தின் கணக்கில் திருமண வயதைக் கடந்துவிட்டவர். தாத்தா, பாட்டி, தனியாகக் குடும்பத்தை நடத்தும் தாய், சகோதரர் கொண்ட அன்பான குடும்பம் அவருடையது. ஆனால் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தொழிலிலும் தனக்கான இடத்தை இன்னும் தேடுகிறார்.

உறவுக்காரப் பெண் ஹஃப்சாவோ, ஒரு பெண் எப்படி இருக்கவேண்டும் என்ற சமூக எதிர்பார்ப்பின் வடிவம்: இளமை, அழகு, திருமணத்திற்குத் தயாரான நிலை. உள்ளூர்ப் பள்ளிவாசல் நிகழ்ச்சி யில் ஹஃப்சா விற்குப் பதிலாக, அவரது பெயரிலேயே ஆயிஷா செயல்பட நேர்வதால் குழப்பங்கள் அதிகரிக்கின்றன. இதற்கிடையே அமைதியான, பழமைவாதியான காலித்தை ஆயிஷா சந்திக்கிறார். அவரது தோற்றமும் அணுகுமுறையும் ஆயிஷாவிற்கு ஒவ்வவில்லை; அவரோ ஆயிஷாவால் ஈர்க்கப்படுகிறார். எதிர்பாராத விதமாக வேறொருவருடன் அவருக்குத் திருமண நிச்சயமும் ஏற்படுகிறது. மேலும் கதையைச் சொல்லிவிட வேண்டாம்! இச்சிக்கல்களை உஸ்மா அவிழ்க்கும் விதம் விறுவிறுப்பான, சிந்திக்கவைக்கும் வாசிப்பாகிறது.

2018-ல் ரயன் B பேட்ரிக் எழுதிய கட்டுரையில், கதை உருவான விதத்தை உஸ்மா பகிர்ந்தார். பெரிய தாடி, மத உடை, தொப்பியுடன், பொதுப்புத்தியில் 'அச்சமூட்டுபவராக'த் தோன்றும் ஒருவர், உள்ளுக்குள் முழுமையான காதலராக இருப்பதைக் கற்பனை செய்தார். அந்தக் கதாபாத்திரத்திலிருந்தே நாவல் மெதுவாக உருவானது.

'பிரைட் அண்ட் பிரெஜுடிஸ்' நாவலின் முஸ்லிம் வடிவம் என வர்ணிக்கப்படும் இதை எழுதப் பல ஆண்டுகள் ஆயின. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் பணி, பத்திரிகைப் பத்தி, குடும்பம், சிறு குழந்தைகளின் வளர்ப்பு ஆகியவற்றுக்கிடையே எழுதினார். வெளியானதும் வெற்றி கிடைத்தது.

புலம்பெயர்ந்தோரின் மகிழ்ச்சிக்கும் இடம்

இரு நாவல்களையும் ஈர்ப்புடையதாக்குவது கதைக்குள் இயல்பாகப் பொதிந்துள்ள விவரங்கள். குறிப்பாகக் காலனிய வரலாற்றுப் பின்னணி உள்ள வாசகர்களுக்கு அவை நெருக்கமாகத் தோன்றும்.

ஆயிஷாவின் தாத்தா, கனடாவிற்குக் குடிபெயருமுன் இந்தியாவின் ஹைதராபாத்தில் இலக்கியப் பேராசிரியராக இருந்தவர். தந்தையின் மறைவு

பற்றித் தாய் பேசுவதில்லை; அவரது படங்களைக்கூட வைத்திருக்கவில்லை என்று ஆயிஷா வருந்துகிறார். “அவர் இறந்தபோது நானும் ஒன்றை இழந்தேனே” என்கிறார்.

தாத்தா, ‘ஹாம்லெட்’ நாடகத்தின் ஒஃபீலியாவை மேற்கோள் காட்டுகிறார்: நாம் இப்போது என்னவாக இருக்கிறோம் என்பது தெரியும்; என்னவாக மாறக்கூடும் என்பது தெரியாது. ஆயிஷாவும் தன்னால் என்னவாக முடியும் என்பதைக் கண்டறியவேண்டியுள்ளது.

உஸ்மாவின் கதைசொல்லும் குரலில் உண்மை ஒலிக்கிறது. முரண்பாடுகளும் மோதல்களும் இருந்தாலும், கதாபாத்திரங்கள் வாழும் இடமே அவர்களின் ‘வீடு’ என்ற உணர்வு மேலோங்குகிறது.

சிறுவயதில் பல்வேறு இனப் பின்னணிகளைக் கொண்ட எழுத்தாளர்களின் நூல்கள் அதிகம் கிடைக்கவில்லை என்கிறார் உஸ்மா. புலம்பெயர்ந்தோரின் அனுபவங்கள் பெரும்பாலும் மேலிருந்து பார்க்கும், சில நேரங்களில் தவறான பார்வையில் சொல்லப்பட்டதாக உணர்ந்தார்.

“ஒடுக்கப்பட்ட சமூகங்களின் கதைகளை ஆக்கிரமிக்கும் சோகமான புலம்பெயர்வு அனுபவத்தை மட்டும் எழுத விரும்பவில்லை. மகிழ்ச்சியான பகுதிகளையும் ஆராய விரும்பினேன். அடையாளம் குறித்த தீவிரமான பிரச்னைகள் இருந்தாலும், என் நூல் காதலுக்கும் இடமளிக்கிறது” என்று CBC வானொலியில் கூறியிருந்தார்.

இரு நாவல்களும் காதல் நகைச்சுவைகளுக்குரிய நாடகத்தன்மையுடன் முடிகின்றன. ஆனால் அங்கு செல்லும் பாதையில் உயிருள்ள மனிதர்களும் நிஜமான சூழல்களும் நிறைந்துள்ளன.



ஹனாவின் குரலும் கனவும்

‘ஹனா கான் கேரீஸ் ஆன்’ நாவலிலும் இதையே காணலாம். ஹனான் என்ற ஹனாவிற்கு வானொலியில் ஆர்வம். குடும்பத்தின் ‘த்ரீ சிஸ்டர்ஸ் பிரியாணி பூட்டீன்’ உணவகத்தை நடத்தத் தாய்க்கு உதவுவதுடன், ரேடியோ டொரான்டோவில் பயிற்சியாளராகவும் பணியாற்றுகிறார்.

அவருடன் தெற்காசியப் பின்னணியுடைய தாமஸ் மேத்யூஸும் பயிற்சிபெறுகிறார். மேலாளர் மரிசா லேக், தன்னை மற்றவர்களை மீட்பவராக நினைப்பதாக ஹனா சந்தேகிக்கிறார். சுவாரசியமான நிகழ்ச்சிகளைத் தயாரிக்க மேலிடத்திலிருந்து வரும் அழுத்தத்தை, மரிசா இவர்களிடம் செலுத்துகிறார். ஆனால் ‘சுவாரசியம்’ என்பதற்கான ஒவ்வொருவரின் புரிதலும் வேறுபடுகிறது.

இதற்கிடையே எதிர்ப்புறத்தில் தொடங்கப்பட்ட நவீன, உயர்தர ஹலால் உணவகம் குடும்பத் தொழிலுக்குப் போட்டியாகிறது. கடுமையான தந்தையும் சந்தை நுணுக்கமறிந்த மகன் அய்டினும் அதை நடத்துகின்றனர். தனது எரிச்சல்களை ‘அனாஸ் பிரவுன் கேர்ள் ராம்பிள்ஸ்’ பாட்காஸ்டில் வெளிப்படுத்துகிறார் ஹனா. நேரிலும் மோதல்கள் உருவாகி மனவேதனை அதிகரிக்கிறது.

ஆறுதலளிப்பவர், பாட்காஸ்டின் பரிவான ரசிகர் ஸ்டான்லி P. இந்தியாவிலிருந்து வரும் அத்தை கவ்கப் காலா, ஹனா விரும்பும் ஆளுமையாக வளர ஊக்கமளிக்கிறார்.

இரு நாவல்களும் காதல் நகைச்சுவைகளுக்குரிய நாடகத்தன்மையுடன் முடிகின்றன. ஆனால் அங்கு செல்லும் பாதையில் உயிருள்ள மனிதர்களும் நிஜமான சூழல்களும் நிறைந்துள்ளன. பன்முகப் பண்பாட்டை அழகுபடுத்திக்காட்டும் கதைகள் அல்ல இவை.

குறைகளும் சிறப்புகளும் கொண்டவர்கள், நட்பும் வம்பும் நிறைந்த சுற்றுப்புறங்களில் வாழ்கிறார்கள். வழிபடுகிறார்கள், உழைக்கிறார்கள், அலுவலக அரசியல், இனவெறி, பாகுபாட்டை எதிர்கொள்கிறார்கள். அதேநேரம் உண்மையான உறவுகளிலும் அன்றாட வாழ்க்கையிலும் பாதுகாப்பை உணர்கிறார்கள். உஸ்மாவின் ‘டொரான்டோ ஸ்டார்’ பத்தியின் ‘சமோசாஸ் அண்ட் மேப்பிள் சிரப்’ என்ற தலைப்பே இந்த உலகப்பார்வையை வெளிப்படுத்துகிறது.

இறுதியாக, ‘ஃபிராக்சர்ட் கம்யூனிட்டீஸ்’ பற்றியும் குறிப்பிடவேண்டும். ஜார்க்கண்டின் சிங்பூம் ஆதிவாசிகளையும் பிரிட்டிஷ் ஆட்சிக்கால வரலாற்றையும் ஆராய்ந்த முனைவர் பட்ட ஆய்விலிருந்து உருவானது இந்நூல்.

பெரிதும் விவாதிக்கப்படும் குற்றச்சாட்டுகளில் பிணையின்றி ஆறாண்டுகளாகச் சிறையிலிருக்கும் உமர் காலித் இதை எழுதியுள்ளார். சிறைப்படுத்தப்பட்டபோது ஆய்வேட்டை முடிக்காத அவர், பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்க நீதிமன்ற அனுமதி கோர வேண்டியிருந்தது.

ஆதிவாசிச் சமூகங்களின் உட்பிளவுகளைப் பயன்படுத்தி அவர்களை அடக்கிய காலனியக் கொள்கையை நூல் ஆராய்கிறது. சிறந்த வரலாற்றுப் பகுப்பாய்வாக அறிஞர்களால் பாராட்டப்படும் இந்நூல், எதிர்ப்பின் பாடலாக ஒலிக்கிறது; இளைஞர்களின் குரலைக் கவனிக்க நினைவூட்டுகிறது.

கட்டுரையாளர்கள் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



அதிகாரத்தனம் என்னும் அரிய கலை

LBW



T C A ஸ்ரீனிவாச ராகவன்

நமது அதிகாரிகளையும் அவர்களது அதிகாரத்தனத்தையும் எல்லோரும் மூக்கில் முளைத்த பருவைப்போல நேசிப்பதற்கு என்ன காரணம்? அவர்களிடம் ஓர் 'இனிமையான' அனுபவம் பெறாத ஒருவரைக்கூட என்னால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. வாழ்நாள் முழுவதும் அரசு அதிகாரியாகப் பணியாற்றிய என் தந்தை, அவரது கூட்டத்தை நான் விமர்சிக்கும்போதெல்லாம் என்னைக் கண்டிப்பார். அவரே ஒருகட்டத்தில், நான் சொல்வதிலும் நியாயமிருக்கலாம் என்றார்.

எண்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தபோது, ஓய்வு பெற்றுப் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவருக்குக் கண்திறந்த அனுபவம் கிடைத்தது. ரயில் ரத்தானதால் பயணச்சீட்டைத் திருப்பிக்கொடுக்கச் சென்றார். கடுமையான நீரிழிவால் கை நடுங்கியதால் படிவத்தை நிரப்புவது சிரமமாக இருந்தது. ஐந்தே விவரங்களை எழுதவேண்டிய படிவத்தை நிரப்ப உதவுமாறு கவுன்டரில் இருந்த ஊழியரைக் கேட்டார். "அது என் வேலையில்லை" என்று மறுத்துவிட்டார். என் தாய் இருபது ரூபாய் கொடுத்ததும், மின்னல் வேகத்தில் நிரப்பிவிட்டார்!

மறுப்பதற்கும் அனுமதியைத் தாமதிப்பதற்கும் அதிகாரிகளுக்குள்ள அதிகாரத்துடன், ஆண்டுகள் செல்லச்செல்ல அறியாமையும் திறமையின்மையும் சேர்ந்துவிட்டன. இப்போது எந்த நிலையிலுள்ள அதிகாரியானாலும் பணம் பறிப்பதற்காக மட்டுமல்ல; விண்ணப்பத்தை என்ன செய்வதென்று தெரியாததாலும் மறுக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்பு என் மனைவிக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது. வங்கிக் கணக்கில் 27 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்த மின்னஞ்சல் முகவரியை மாற்ற முயன்றார். மார்ச்சில் தொடங்கிய சோதனை இன்னும் முடியவில்லை. என்ன செய்வதென்று தெரியாத வங்கி அதிகாரிகள், தங்கள் அறியாமையையும் திறமையின்மையையும் மறைக்க விதவிதமான ஆவணங்களைக் கேட்டுக்கொண்டே இருந்தனர். அதுவரை யாரும் உருவாக்கியிராத, கேள்விப்பட்டிராத விதிகளைச் சுட்டிக்காட்டினர். கவனியுங்கள், இது பொதுத்துறை வங்கியல்ல; பெரிய தனியார் வங்கி. நமது வாழ்க்கையைச் சுவாரசியமாகவும் வாழத் தகுந்ததாகவும் ஆக்குவதற்கு அதிகாரத்தனம் எங்கும் இருக்கிறது!

கடந்தாண்டு நண்பர் ஒருவரிடம், அவர் செய்யாத, செய்யச்சொல்லாத செயலுக்காக ரூ.5,000 அபராதம் கேட்டார்கள். அண்டைவீட்டாரின் புகாரையடுத்து, அவரது வீட்டுக்கு முன்னிருந்த மரத்தின் சில கிளைகளை அரசு ஊழியர்கள் வெட்டினர். சில வாரங்களில் வேறொரு துறை அதிகாரிகள், சட்டவிரோதமாகக் கிளைகளை வெட்டியதாக அவருக்கு விளக்கம் கேட்கும் அறிவிப்பையும் அபராதக் கோரிக்கையையும் அனுப்பினர். அவர் பணம் செலுத்த மறுத்தார். இறுதியில் ஒருவழியாகப் பிரச்னை தீர்ந்தது.

மற்றொரு நண்பருக்கு வீட்டின் கட்டுமான நிறைவுச் சான்றிதழ் தேவைப்பட்டது. அவரும் அரசு அதிகாரி என்பதால் எந்தச் சிக்கலுமின்றிக் கிடைக்கும் என நினைத்தார். பலமுறை நினைவூட்டியும் நேரில் சென்றும், நினைத்ததுபோல் எளிதல்ல என்பதை உணர்ந்தார். சக அதிகாரி ஒருவரின் உதவியை நாடினார். கீழ்நிலை அதிகாரிகள் சான்றிதழை வழங்குமாறு அவர் உத்தரவிட்டார். வாங்கச் சென்ற நண்பரிடம், இன்னும் மூன்று சான்றிதழ்கள் தேவை என்றார்கள். மேலிட உதவியால் கிடைத்த முன்னிலையை இப்படிச் சமன் செய்துவிட்டார்கள்!

சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியான ஆய்வறிக்கை, இந்தியத் தொழில் நிறுவனங்கள் 68,000 விதிமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருப்பதாகக் கூறியது. அவற்றில் 27,000 மத்திய அரசுடையவை; மீதமுள்ளவை பல்வேறு மாநில அரசுகளுடையவை. ஒவ்வொன்றையும் அதிகாரிகள் கூட்டம் கண்காணிக்கிறது. விதிகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்காக அல்ல; மீறல்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பதற்கு லஞ்சம் வாங்குவதற்காக.

பிரச்னையைச் சரிசெய்ய அரசு தீவிரமாக முயன்றது. ஆனால் புதிய விதிகளைக் கண்டுபிடித்து அதிகாரிகள் பதிலடி கொடுத்துவிட்டனர். மனமிருந்தால் மார்க்கமுண்டு அல்லவா!

மிகவும் வெட்கங்கெட்ட, அதேநேரம் வேடிக்கையான அதிகாரியை என் சகோதரர் வீடு கட்டும்போது சந்தித்தார். ஏதோவொன்றுக்கு லஞ்சம் கேட்டார் அந்த அதிகாரி. "முடியாது, பணம் தரமாட்டேன். உங்களைப்போல நானும் அரசு ஊழியர்தான்" என்றார் என் சகோதரர்.

சற்றும் அலட்டிக்கொள்ளாமல் அதிகாரி சொன்னார்: "சரி, உங்களுக்கு 50 சதவீதத் தள்ளுபடி தருகிறேன்!"

இவர்களை நேசிக்காமல் எப்படி இருப்பது?

எவன்ஸ்டன் காட்சிகள்

அமெரிக்காவின் எவன்ஸ்டன் RI தலைமையகத்தில், RI துணைத் தலைவர் M முருகானந்தம், இயக்குநர் K P நாகேஷ், TRF அறங்காவலர் A S வெங்கடேஷ், தலைவர் நியமனதாரர் (RIPN) பரத் பாண்டியா ஆகியோர் கூட்டங்களில் பங்கேற்றனர். "உலக ரோட்டரி குடும்பத்துடனான கலந்துரையாடல்கள், நட்புறவு, ஒத்துழைப்பு, தன்னலம் கருதாத சேவையின் வலிமையை உணர்த்தின" என்று நாகேஷ் முகநூலில் பதிவிட்டார்.■



எவன்ஸ்டன் RI தலைமையகத்தில் துணைத் தலைவர் M முருகானந்தம், தலைவர் நியமனதாரர் டாக்டர் பரத் பாண்டியா, இயக்குநர் K P நாகேஷ்.



ஒன் ரோட்டரி சென்டரின் போலியோபிளஸ் சிற்பத்தின் முன் முருகானந்தம், நாகேஷ், TRF அறங்காவலர் A S வெங்கடேஷ்.



RI துணைத்தலைவர் முருகானந்தம், RIPN பாண்டியா, இயக்குநர் நாகேஷ்.

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27 | issue, including cover, 84. Price: ₹50

